நாவாந்துறைப் படிப்பகம்


# உதயன்

விலை ரூபா 6.00

சுடர்:15 வள்ளுவர் ஆண்டு 2031 ஆவணி 01 வியாழக்கிழமை (17-08-2000) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:195


# வவுனியா நகரின் மத்தியில் நேற்று தற்கொலைக் குண்டுத் தாக்குதல்!

## படை அதிகாரிகளை இலக்கு வைத்து

வவுனியா,ஓகஸ்ட்17

**வவுனியா நகர சபை மண்டபத்துக்கு முன்பாக நேற்று மாலை 5.30 மணியளவில் தற்கொலைக் குண்டுத் தாக்குதல் ஒன்று நடைபெற்றது. இதில் சிறுமி ஒருத்தி பலியானாள். தற்கொலையாளியும் கொல்லப்பட்டார். ஓர் அதிகாரி உட்பட மூன்று படையினர் படுகாயமடைந்தனர்.**

வவுனியா வாசிகளுக்கு நிரந்தர வதிவிட அனுமதிப்பத்திரம் வழங்குவதற்காக நகரசபை மண்டபத்துக்கு வந்திருந்த படை அதிகாரியை இலக்கு வைத்தே இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டிருப்பதாகச் சொல்லப்படுகின்றது.

வதிவிட அனுமதிப்பத்திரம் வழங்க வந்திருந்த படை அதிகாரி தனது கடமை முடிந்து இராணுவப் புலனாய்வுப் பிரிவு அதிகாரிகள் சகிதம் வாகனத்தில் புறப்பட்ட சமயம் அங்கு தரித்து நின்ற ஓட்டோ ஒன்

(12ஆம் பக்கம் பார்க்க)

## மீனவர்கள் செல்லவில்லை

குருநகர்,ஓக17

குடாக்கடலில் மீன்பிடிக்கச் செல்ல மீனவர்கள் நேற்று அனுமதிக்கப்படவில்லை. காலையில் குருநகர் இறங்கு துறைக்குச் சென்ற சில மீனவர்கள் கடலுக்குச் செல்ல அனுமதிக்கப்பட்டனர். பின்னர் சிறிது நேரத்தில் அவர்கள் திரும்பி வருமாறு அழைக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. அதன் பின்னர் குருநகர் இறங்கு துறையில் இருந்து மீனவர்கள் எவரும் தொழிலுக்குச் செல்ல அனுமதிக்கப்படவில்லை. (ஜ-51-17-15)

## ஜனாதிபதி கண்டிக்கு விஜயம்

கொழும்பு,ஓக17

எசல பெரஹரவின் நினைவு வைபவத்தை ஒட்டிய பாரம்பரிய நிகழ்வில் கலந்து கொள்வதற்காக ஜனாதிபதி கண்டிக்குச் சென்றிருந்தார். அச்சமயம் புதிய அரசமைப்புச் சட்ட வரைவு பற்றி உரையாடுவதற்காக அஸ்கிரிய பீட மகாநாயக்கர் ஜனாதிபதியைச் சந்தித்தார். ஆனால் இது விடயத்தில் கடும் போக்கைக் கடைப்பிடித்து வரும் மல்வத்தை பீடாதிபதி ஜனாதிபதியைச் சந்திக்கவில்லை.

எசல பெரஹர வெற்றிகரமாக நிறைவடைந்ததை அடுத்து ஆட்சித் தலைவருக்கு வழங்கப்படும் பாரம்பரிய 'சந்தேசய'வைப் பெற்றுக் கொள்வதற்காகவே ஜனாதிபதி கண்டிக்குச் சென்றிருந்தார்.(ஐ-6)

## பொலன்னறுவைக்கு வயல் அறுவடைக்குச் சென்ற 8 தமிழர்களைக் காணோம்!

மட்டக்களப்பு,ஓக.17

மட்டக்களப்பிலிருந்து வயல் அறுவடை வேலைக்காகப் பொலன்னறுவைக்குப் புறப்பட்டுச் சென்ற ஏழு இளைஞர்கள் உட்பட எட்டுத் தமிழர்கள் இடைவழியில் காணாமற்போயுள்ளனர்.

கடந்த திங்களன்று புறப்பட்டுச் சென்ற இவர்கள் பொலன்னறுவையைச் சென்றடையவில்லை என்று கூறப்படுகின்றது.

மட்டக்களப்பு-பொலன்னறுவை வீதியில் உள்ள கதிரவெல பஸ் தரிப்பு நிலையத்தில் பஸ்ஸிற்காக இவர்கள் காத்து நின்ற சமயம் வாகனங்களில் வந்தோர் இவர்களைப் பலவந்தமாக ஏற்றிச் சென்றதாக அவ்விடத்தில் இருந்து தப்பி வந்த வேறு இருவர் தகவல் வெளியிட்டுள்ளனர்.

ஆ.கிருஷ்ணபிள்ளை (வயது55), அ.சந்திரசேகரம் (வயது22), பூ.நேசன் (வயது21), ந.தவராசா (வயது 21), வே.மோகன் (வயது21), து.நிர்மலராஜா (வயது20), மோ.சசிக்குமார்(வயது18), நா.புவனேந்திரன் (வயது20) ஆகியோரே காணாமற்போயுள்ளனர்.

இது குறித்துக் கல்முனையிலுள்ள மனித உரிமைகள் ஆணைக்குழு அலுவலகத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (ஐ-21-7)

# பாதுகாப்புக் கருதி பொதுத் தேர்தலை குறுகிய காலத்துக்குள் நடத்த முடிவு?

கொழும்பு,ஓக17

நாடாளுமன்றம் கலைக்கப்பட்டதும் பாதுகாப்புக் காரணங்களுக்காக மிகக் குறுகிய கால இடைவெளிக்குள் பொதுத் தேர்தலை நடத்திமுடிக்க ஜனாதிபதி விரும்புவதாக நம்பத்தகுந்த அரசாங்கவட்டாரங்களில் இருந்து தெரியவருவதாக 'திவயின' பத்திரிகை செய்தி வெளியிட்டிருக்கிறது.

இதன்படி பிரசார நடவடிக்கைகளுக்காக கட்சிகளுக்கு குறுகிய கால அவகாசமே வழங்கப்படும் என்று தெரியவருகிறது.

அரசமைப்பின்படி நாடாளுமன்றத்தின் ஆயுள்காலம் முடிந்து 10-17 நாள்களுக்கு இடையே வேட்புமனுத் தாக்கல் செய்யப்பட வேண்டும். பின்னர் ஐந்துவாரங்களுக்குக் குறையாத - ஏழு வாரங்களுக்கு மேற்படாத - கால இடைவெளிக்குள் தேர்தலை நடத்த வேண்டும்.

இம் முறை தேர்தல் பிரசாரத்தின் போது பல வேட்பாளர்களுக்கு விடுதலைப்புலிகளால் அச்சுறுத்தல்கள் ஏற்படலாம் என்று புலனாய்வுப் பிரிவினர் எச்சரித்ததை அடுத்து தேர்தல் பிரசாரக்காலத்தைக் குறைக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

இதற்கமைய வேட்புமனுக்களை அடுத்தமாதம் முதல் வாரத்தில் இருந்து ஏற்கவும் ஒக்ரோபர் மூன்றாவது வாரத்தில் தேர்தலை நடத்தவும் உத்தேசிக்கப்பட்டிருப்பதாக அரசாங்க வட்டாரங்களில் இருந்து தெரியவருகின்றது.

இது தொடர்பாக ஜனாதிபதி தேர்தல் ஆணையாளருடன் பேச்சு நடத்தி உள்ளதாகவும் தெரிகிறது.

பெரும்பாலான அரசியல் கட்சிகள் தங்கள் பிரசார நடவடிக்கைகளை தொடர்பு சாதனங்கள் மூலம் மேற்கொள்ள ஆயத்தமாகி உள்ளதாகவும் தெரியவருகின்றது.

-இவ்வாறு 'திவயின' செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-6)

## சு.க. செயலாளர் பதவி யாருக்கு? நேற்றைய கூட்டத்தில் முடிவில்லை!

### இரு அமைச்சர்களிடையே கடும் போட்டி

கொழும்பு,ஓக.17

சுதந்திரக் கட்சியின் செயலாளர் பதவிக்குத் தேசிய இளைஞர் விவகார, சமுர்த்தி, விளையாட்டுத்துறை அமைச்சர் எஸ்.பி. திஸநாயக்கவும், மகாவலி அபிவிருத்தி, நீர்ப்பாசனத்துறை அமைச்சர் மைத்திரிபால சிறிசேனவும் கடுமையாகப் போட்டியிடுவதாகக் கொழும்புச் செய்திகள் தெரிவித்தன.

புதிய செயலாளரைத் தெரிவு செய்வதற்காக சுதந்திரக் கட்சியின் மத்தியகுழு நேற்றுக் கூடியது.

இப்பதவிக்கு அமைச்சர்கள் எஸ்.பி.திஸநாயக்கவுக்கும் மைத்திரிபால சிறிசேனவுக்கும் ஆதரவாகப் பலரும் கருத்துத் தெரிவித்தனர்.

முடிவு ஒன்றை எட்டமுடியாத நிலையில் கூட்டம் இன்றுவரை ஒத்திவைக்கப்பட்டது.

இன்று புதிய செயலாளர் யார் என்பது முடிவாகிவிடும் என்று ஸ்ரீ.ல.சு. கட்சி வட்டாரங்கள் நம்பிக்கை வெளியிட்டன. (உ)

## தேர்தல் செலவுக்கு 40 கோடி ரூபா

கொழும்பு,ஓக.17

எதிர்வரும் பொதுத் தேர்தலை நடத்துவதற்குத் தேர்தல் ஆணையாளர் அலுவலகத்தினால் 40கோடி ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. தேர்தல் பாதுகாப்புக்கான செலவு இதில் உள்ளடக்கப்படவில்லை.

தேர்தல் கடமையில் ஈடுபடுவோரின் சம்பளம் மற்றும் வாக்காளர் அட்டை, வாக்குச்சீட்டு அச்சிடுதல், காகிதாதிகள் கொள்வனவு, போக்குவரத்து ஆகியனவற்றுக்கு இந்நிதி செலவிடப்படவுள்ளது. (ஐ-6)

## மட்டு. - அம்பாறை எல்லையில் இரு வியாபாரிகள் சூட்டுக்குப் பலி!

மட்டக்களப்பு,ஓக.17

மட்டக்களப்பு - அம்பாறை மாவட்ட எல்லைக் கிராமங்களான வாழைக்காலையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் வியாபாரிகள் இருவர் உயிரிழந்தனர்.

இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதியிலிருந்து இராணுவக் கட்டுப்பாடற்ற பகுதிக்குள் செல்ல முயன்றபோதே இவர்கள் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

உயிரிழந்தவர்களில் ஒருவர் சுபாசிவம் விஜயசுந்தரம் (வயது45) என இனங்காணப்பட்டுள்ளார்.

இவர்கள் இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிக்கும், கட்டுப்பாட்டில் இல்லாத பகுதிக்கும் இடையே வியாபார நடவடிக்கைகளுக்காகச் சென்று வருபவர்கள் என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ-21-7)

## வவுனியா பூந்தோட்டம் அருகே மதுவரித் திணைக்கள வாகனம் மீது தாக்குதல்!

### ஒருவர் பலி! எண்மர் காயம்!!

வவுனியா - பூந்தோட்டம் பகுதியில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற கைக்குண்டு மற்றும் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் ஒருவர் உயிரிழந்தார். 8 பேர் காயமடைந்தனர்.

சட்டவிரோதமாக மதுபானம் உற்பத்தி செய்தவர்களை ஏற்றிச் சென்ற மதுவரித் திணைக்களத்துக்குச் சொந்தமான வாகனத்தை இலக்கு வைத்தே இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

இந்தச்சம்பவத்தில் மதுவரித் திணைக்கள உத்தியோகத்தர்களால் அழைத்துச்செல்லப்பட்ட விஜயராஜ் (வயது 26) என்பவரே உயிரிழந்தார். மதுவரித் திணைக்களத்தைச் சேர்ந்த உத்தியோகத்தர்களான ரமேஸ்குமார், நந்தகுமார் ஆகியோர் காயமடைந்தனர்.

சட்ட விரோதமாக மதுபானம் தயாரிக்கும் கும்பலைச் சேர்ந்தவர்களே இத்தாக்குதலை நடத்தியிருக்கலாம் எனச் சந்தேகிக்கப்படுகிறது. (ஐ-7-164)

## நீச்சல் பயிற்சியின்போது நான்கு புலிகள் உயிரிழப்பு!

வவுனியா,ஓக.17

நேற்றுமுன்தினம் நீச்சல் பயிற்சியின்போது தமது போராளிகள் நால்வர் உயிரிழந்ததாக 'புலிகளின் குரல்' வானொலி அறிவித்தது.

அவர்களின் விவரம் வருமாறு:-

* கடற்கரும்புலி மேஜர் திசையரசி (செல்லச்சாமி செல்லம் - யாழ்ப்பாணம்)

* லெப்டினன்ட் கேணல் பழனி ராஜ் அல்லது பழனி (தங்கமுத்து சிவநாதன் - கண்டி)

* மேஜர் கதிரினி அல்லது சரண்ஜா (சின்னத்தம்பி வதனா - யாழ்ப்பாணம்)

* லெப்டினன்ட் தூயவள் (சங்கரப்பிள்ளை விஜயலட்சுமி - கிளிநொச்சி). (ஐ-4)

## அமைச்சர் குமாரமங்கலம் மருத்துவமனையில்

புதுடில்லி,ஓக.17

மத்திய மின்துறை அமைச்சர் ரங்கராஜன் குமாரமங்கலம் (வயது 48) கடும் சுகவீனமடைந்த நிலையில் புதுடில்லி மருத்துவ அறிவியல் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருக்கிறார்.

கடந்த இரு மாத காலமாக உடல்நலம் பாதிக்கப்பட்டிருந்த அவர் தற்சமயம் நீடித்த மயக்க நிலையில் இருப்பதாக மருத்துவர்கள் தெரிவித்தனர். (ஐ-4)

## விமானத் தாக்குதல் தீவிரம்!

யாழ்ப்பாணம்,ஓக.17

தென்மராட்சி மற்றும் கைதடி, நாவற்குழிப் பகுதிகளில் நேற்றுப் பகல் வேளை பல தடவைகள் விமானத் தாக்குதல்கள் இடம் பெற்றன.

தாக்குதலில் ஈடுபட்ட 'மிக்' விமானங்களின் இரைச்சலை நேற்றுப் பகல் முழுவதும் வலிகாமம் மற்றும் வடமராட்சிப் பகுதிகளில் அடிக்கடி கேட்க முடிந்தது.

இத்தாக்குதலினால் ஏற்பட்ட சேதவிவரங்கள் தெரியவரவில்லை.

இதேவேளை -

கடந்த சில நாள்களில் முல்லைத்தீவுப் பிரதேசத்தில் விடுதலைப் புலிகளின் பதுங்கு குழிகள் மீது விமானப் படையினர் பல தாக்குதல்களை நடத்தி அவற்றை அழித்துள்ளதாக கொழும்பு சிங்களப் பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டிருக்கிறது.

அங்கு கடந்த 15 நாள்களில் 21 தடவைகள் விமானத் தாக்குதல்கள் நடத்தப்பட்டிருப்பதாகவும்- இதில் புலிகள் தரப்பில் 18 பேர் கொல்லப்பட்டிருப்பதாகவும்- அச்செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(12ஆம் பக்கம் பார்க்க)

ஓம் முருகா

## கரம்பன் கிழக்கு வட்டுவில் முருகமூர்த்தி கோயில்

## வருடாந்த உற்சவம்

*முருகன் அடியார்களே!*

சைவமும் தமிழும் தழைத்தோங்கும் இடம் கரம்பன். கரம்பன் கிழக்கு வட்டுவில் எனும் புனித இடத்தில் அமர்ந்து அருள்பாலித்துக் கொண்டிருக்கும் மகாவல்லி, கஜவல்லி சமேத முருகப்பெருமானுக்கு நிகழும் மங்களகரமான விக்கிரம வருஷம் ஆவணி மாதம் 1ஆம் நாள் (17-08-2000) வியாழக்கிழமை அலங்கார உற்சவம் ஆரம்பமாகும். அதனைத் தொடர்ந்து பத்துத் தினங்கள் உற்சவம் நடைபெறும். தினமும் காலை 10 மணிக்கு அபிஷேகம். காலை 11 மணிக்கு பூசை. 12 மணிக்கு வசந்த மண்டபப் பூசை நடைபெற்று 1 மணியளவில் உற்சவம் யாவும் இனிது நிறைவுபெறும்.

**- நிர்வாகம்.**

(77372)

---

**சாவகச்சேரி**

## செ.சபாரத்தினம் தங்க மாளிகை

தற்போது
**கஸ்தூரியார் வீதி,**
**உதயன் பணிமனைக்கு முன்பாக**
இயங்குகின்றதென்பதனை எங்கள் வாடிக்கையாளர்களுக்கு அறியத்தருகின்றோம்.

*உரிமையாளர்*
**செ.ச.நவரத்தினம்**

(77362)

---

## முக்கிய அறிவித்தல்

**மாகாணசபையின் எழுநர் மற்றும் அதனுடன் இணைந்த சேவையின் நியமனத்தில் பாதிக்கப்பட்ட அனைவரையும் நாளை (18-08-2000) வெள்ளிக்கிழமை காலை 9.30 மணிக்கு யாழ். செயலக முன்றலில் உள்ள துவிச்சக்கரவண்டி நிலையத்துக்குத் தவறாது சமுகமளிக்குமாறு கேட்டுக் கொள்கின்றேன்.**

தகவல்:
**S.VASANTHAKUMAR**
*(தலைவர்)*

(77371)

---

## காணாமல் போய்விட்டது

தெல்லிப்பழை துர்க்கா ஆலய முன்றலில் (சைக்கிள் பாக்கில்) விடப்பட்ட பெண்கள் சைக்கிள் (லுமாலா) ஒன்று காணாமல் போய்விட்டது.

**கண்டவர்கள் தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி:-**

**கு.ஜெயதேவி**
*பரித்தியோலை,*
*கந்தரோடை.*

(77368)

---

## பின்முற்றாகும் தீர்வை

*மல்லாகம் மாவட்ட நீதிமன்றம*

**துரைராசா பெண் காந்திமதி,**
*இந்துக் கல்லூரி வீதி,*
*பண்டத்தரிப்பு.*
*வழக்காளி*

*எதிராக*
**வரதராசா துரைரசா**
*பண்ணாகம் தெற்கு,*
*சுழிபுரம்.*

இவ்வழக்கு மல்லாகம் மாவட்ட நீதிமன்றில் 2000 ஆம் ஆண்டு ஆடி மாதம் 27 ஆம் திகதி மாவட்ட நீதிபதி திரு. பா.சுப்பிரமணியம் அவர்கள் முன்னிலையில் வழக்காளியும் அவரின் பதிவு பெற்ற சட்டத்தரணி திருமதி ச.இளங்கோவன் சமுகமாய் இருக்க எதிராளிக்கு அழைப்புக் கட்டளை சேவிக்க முடியாதபடியால் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டு எதிராளி சமுகமளிக்காதபடியால் ஒருமுக விளக்கத்திற்கு எடுக்கப்பட்டு வழக்காளியின் சாட்சியத்தையும் ஆவணத்தையும் பரிசீலனை செய்து வழக்காளிக்கும் எதிராளிக்கும் இடையே 1993 ஆம் ஆண்டு மாசி மாதம் 11 ஆம் திகதி நடைபெற்ற திருமணத்தை ரத்துச் செய்து வெற்றும் வெறுமானதெனக் கட்டளையிட்டு பின்முற்றான தீர்வை வழங்கப்படுகிறது.

இப்பின் முற்றாகும் தீர்வையின் பிரதி எதிராளிக்கு சேவிக்கப்பட்டு அந்த நாளில் இருந்து மூன்று மாதங்களுக்குள் ஏதும் ஆட்சேபனை தெரிவிக்காவிடில் இப்பின்முற்றாகும் தீர்வை முற்றான தீர்வையாக்கப்படும்.

**2000-ஆடி-27**

**மாவட்ட நீதிபதி**
*மல்லாகம.*

வரைவு
வழக்காளி சட்டத்தரணி

(77365)

---

### மீனவர்களின் உறவினர் ஆர்ப்பாட்டம்

இந்தியாவில் தடுத்துவைக்கப்பட்டிருக்கும் இலங்கை மீனவர்களை விடுதலைசெய்ய நடவடிக்கை எடுக்குமாறு கோரி அந்த மீனவர்களின் உறவினர்கள் நேற்றுக் கொழும்பில் ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்தினர். பல நூற்றுக் கணக்கானோர் இந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டனர். (ஐ-7)

---

**ராஜா**
**(யாழ்ப்பாணம்)**
அர்ஜுன், ரேவதி,
வடிவேல், மணிவண்ணன்
மற்றும் பலர் நடிப்பில்
**சுபாஸ்**
காட்சிகள்: 10-30, 2-00
(புதிய நேரம்)
21.08.2000 முதல்
**படையப்பா**
(C/12325)

---

**நாகம்ஸ்**
சுன்னாகம்.
**ரஜனி, சௌந்தர்யாவின்**
**படையப்பா**
(ரீல்ஸ்)
காட்சிகள்:
11.00, 2.30 (புதிய நேரம்)
21 முதல்
(77381)
**அமர்க்களம்**

---

## வெளிமாவட்டங்களுக்குச் செல்ல பயண அனுமதி பெற்றோர் விவரம்

யாழ். குடாநாட்டில் இருந்து வெளி மாவட்டங்களுக்குப் பயணம் செய்யப் பாதுகாப்பு அனுமதி வழங்கப்பட்டவர்களின் (இம்மாதம் 16ஆம் திகதிவரை) பதிவு இலக்கங்கள் பிரதேச செயலர் பிரிவு ரீதியாக வருமாறு:-

**சங்கானை**

| | |
|---|---|
| 513/150432/A | 513/150432/B |
| 513/150432/C | 513/150432/D |
| 513/150432/E | 513/150475/A |
| 513/150475/B | 513/150475/C |
| 513/151843/A | 513/152074/A |
| 513/152191/A | 513/152191/B |

**நல்லூர்**

| | |
|---|---|
| 513/151952/A | 513/151952/B |
| 513/151952/C | 513/151952/D |
| 513/151961/A | 513/152032/A |
| 513/152061/A | 513/152061/B |
| 513/152095/A | 513/152095/B |
| 513/152095/C | 513/152129/A |
| 513/152129/B | 513/153431/A |
| 513/153431/B | |

**சண்டிலிப்பாய்**

| | |
|---|---|
| 513/141966/A | 513/141966/B |
| 513/144047/A | 513/144047/B |
| 513/144047/C | 513/144047/D |
| 513/150604/A | 513/150653/A |
| 513/152034/A | 513/152054/A |
| 513/152055/A | 513/152055/B |
| 513/152157/A | |

**தெல்லிப்பழை**

| | |
|---|---|
| 513/150673/A | 513/151769/A |
| 513/151769/B | 513/151784/A |
| 513/151784/B | 513/151802/A |
| 513/151921/A | 513/151921/B |

**உடுவில்**

| | |
|---|---|
| 513/143961/A | 513/150643/A |
| 513/150643/B | 513/152073/A |
| 513/152103/A | 513/152103/B |
| 513/155107/A | 513/155178/A |
| 513/155178/B | 513/155178/C |

## கூட்டணியின் திருமலை மாவட்ட முதன்மை வேட்பாளர் தெரிவு

கொழும்பு,ஓக.17

தமிழர் விடுதலைக் கூட்டணியின் திருகோணமலை மாவட்ட முதன்மை வேட்பாளராக முன்னாள் நகராட்சி மன்ற உறுப்பினரான சே. சிறிஸ்கந்தராசா தெரிவுசெய்யப்பட்டுள்ளார்.

கடந்த 14ஆம் திகதி சி.சச்சிதானந்தவேல் தலைமையில் இடம் பெற்ற கூட்டணியின் திருகோணமலைக் கிளை கூட்டத்திலேயே இத்தெரிவு இடம்பெற்றது.

சிறிஸ்கந்தராசாவை தலைமை வேட்பாளராகக் கொண்டு தயாரிக்கப்படும் வேட்பாளர் பட்டியலில் மூதூர் பகுதியில் இருந்து அருணாசலம் பரசுராமனை இரண்டாவது வேட்பாளராக இணைத்துக்கொள்வது என்றும் -

கூட்டணியின் திருகோணமலை கிளைக் கூட்டத்தை மீண்டும் கூட்டி இது தொடர்பான நடவடிக்கைகளை முன்னெடுத்துச் செல்வது என்றும் -

அங்கு தீர்மானிக்கப்பட்டது. (ஐ-9)

---

உ
ஜெய் சாய்ராம்

## திருமண அழைப்பு

*அன்புடையீர்!*

நிகழும் மங்களகரமான விக்கிரம வருடம் ஆவணித் திங்கள் 3ஆம் நாள் (19-08-2000) சனிக்கிழமை பகல் 11.48 மணி முதல் 12.58 மணி வரையுள்ள ரேவதி நட்சத்திர சுப்முகூர்த்த வேளையில்

திரு. திருமதி கந்தசாமி
**தம்பதிகளின்**
**கனிஷ்ட புத்திரன்**
**குகதாஸ் (குகன்)**



திரு. திருமதி வைத்திலிங்கம்
**தம்பதிகளின்**
**சிரேஷ்ட புத்திரி**
**சிவரூபி (ரூபி)**

*திருமணம் நடைபெறும் இடம்:-*

KATHOLISCHES PFARRMT (DREIFALTIGKEIT)
BLEICHMUHLE ST 11, 71065, SINDELFINGEN

*தங்கள் நல்வரவை நாடும்:*

**திருமதி கந்தசாமி (மலர்)**
**திருமதி வல்லிபுரம்,**
*தபாற்கந்தோர் வீதி,*
*சாவகச்சேரி.*

**திரு. திருமதி கமலாகரன்,**
**திரு. திருமதி சிறீகாந்தா**

*OLGA ST 69, 70182 STUTTGART,*
*Tel. 2369348 - 01727154477*

(C/12523)

---

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

**யாழ். பிரதம தபாலகத்தைச் சேர்ந்த அஞ்சல் சேவையாளர்கள்**



**திரு. ஆசீர்வாதம் பெர்னாண்டோ**
(J.P.)



**திரு. இளையதம்பி மயில்வாகனம்**
(J.P.)

*யாழ். மாவட்ட சமாதான நீதிவான்களாக* (J.P.)
*நீதிச் சேவை ஏற்றமைக்காக*

மாநிலம் போற்றும்
மகத்தான சேவையாம்
மா அஞ்சல் சேவையொடு
நீதியின் சேவையும்
செய்த நீவிர்
நீடூழி வாழ்கவென
வாழ்த்துகின்றோம்.

*யாழ்/பிரதம தபாலதிபர்,*
*உத்தியோகத்தர்கள், ஊழியர்கள்,*
*சிற்றுண்டிச்சாலை நண்பர்கள்,*

(77366)

# 50 ஆண்டுகளுக்கு முன் பிரிந்த கொரிய குடும்பங்கள் சந்தித்தபோது நெஞ்சம் நெகிழவைத்த காட்சிகள்!

## கண்ணீர் பெருக கட்டி அணைத்தனர்

சியோல்,ஒக17

50 ஆண்டுகளின் முன்னர் கொரியப் பிரிவினையின் போது பிரிந்த குடும்பங்கள் மீண்டும் சந்தித்தபோது நெஞ்சை நெகிழ வைக்கும் பல காட்சிகளை காண முடிந்ததாக கூறப்படுகிறது.

சந்திக்கும் நிகழ்வில் தனது சகோதரனை கண்ட வயோதிப மாது ஒருவர் கதறி அழுதபடி "நீ உயிருடன் இருப்பதை ஏன் தெரிவிக்கவில்லை?" என்று கேட்டார். அதற்கு சகோதரன் கண்ணில் நீர் வடிய 'தொடர்பு கொள்ள வழியே இல்லை' என்று தெரிவித்தார். பிரிந்த குடும்பங்கள் இதுவரை கடந்த காலத்தை இந்த உரையாடல் விளக்கும் என்று அங்கிருந்த செஞ்சிலுவைச் சங்க அதிகாரி தெரிவித்தார்.

இவர்களைப் போலவே பள்ளிக்குச் சென்ற மகனைப பிரிந்த தந்தை, சைக்கிள் வாங்கக் கடைக்குச் சென்ற கணவனை பிரிய நேரிட்ட மனைவி ஆகியோர் முறையே மகனையும், கணவனையும் மீண்டும் சந்தித்தது உணர்ச்சி மயமானவை என்று வர்ணிக்கப்படுகின்றன.

கடந்த 15ஆம் திகதி கொரியப் பிரிவினையின் போது பிரிந்த குடும்பங்களை மீண்டும் சேர்க்கும் பணி தொடங்கியதும் இரு கொரியாக்களிலிருந்தும் தலா 100 பேர் பிரிந்த தமது உறவினர்களை சந்திக்க ஏற்பாடு செய்யப்பட்டது.

ஆனாலும் குடும்பங்களை பிரிந்தவர்களின் எண்ணிக்கை சுமார் 70 லட்சம் என்று கூறப்படுவதால் பொதுவான சந்திப்பு மையம் ஒன்றை இரு நாடுகளும் இணைந்து ஏற்படுத்தினால்தான் பிரிந்தவர்களை இணைக்கும் முயற்சி பூர்த்தியடையும் என்று கருதப்படுகிறது. (ஒ)

## செவ்வாய்க் கிரகத்துக்கு 2014இல் மனிதன் பயணம்?

நாஸா,ஒக.17

செவ்வாய்க் கிரகத்துக்கு விண்வெளி நிபுணர்களை 2014 ஆம் ஆண்டு அனுப்பும் சாத்தியம் குறித்து ஆய்வாளர்கள் ஆராய்ந்து வருகிறார்கள்.

ஆளில்லாத ரொக்கட்டுகளை அனுப்பி செவ்வாய் கிரகத்தை ஆராய்ந்த அமெரிக்க விஞ்ஞானிகள் அங்கு ஆறுகள், நீரோடைகள் இருந்ததற்கான அடையாளங்கள் இருப்பதாகவும் -

ஈரப்பதம் உள்ள சக்தி காணப்படுவதாகவும் தெரிவித்திருந்தனர். இத்தகவல்களை அடுத்து செவ்வாய் கிரகத்தில் உயிரினம் இருப்பதற்கான நம்பிக்கை அதிகரித்துள்ளது.

இந்த நம்பிக்கையை உறுதி செய்வதற்காக செவ்வாய் கிரகத்துக்கு நிபுணர்களை அனுப்ப ஏற்பாடுகள் நடப்பதாகவும் -

அதற்குத் தகுந்த நேரம் 2014 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 14 ஆம் திகதிக்கு அடுத்துவரும் சில நாள்கள் என்றும் நாஸா விஞ்ஞானிகள் தெரிவித்தனர். அப்போது சுக்கிரன், செவ்வாய், பூமி ஆகிய வற்றிடையேயான புவியீர்பு சக்தி விண்வெளிப் பயணத்துக்கு சாதகமாக இருக்கும் என்று அவர்கள் கூறியுள்ளனர். (ஒ)

## யசீர் அரபாத் சீனாவுக்கு விஜயம்

பலஸ்தீன ஜனாதிபதி யசீர் அரபாத் பலஸ்தீன தனிநாடு பிரகடனத்துக்கு ஆதரவு திரட்டுவதற்காக சீனாவுக்கு விஜயம் மேற்கொண்டுள்ளார்.

அரபாத் சீன அதிபரையும் மற்றும் உயர்மட்டத் தலைவர்களையும் சந்தித்துத் தனது தரப்புக்கு ஆதரவு தரக் கோருவார்.

- சீன விஜயத்தின் பின் யசீர் அரபாத் ஜப்பானுக்குச் செல்ல உள்ளதாகக் கூறப்படுகிறது. (ஒ)



பலஸ்தீன தாயகத்தைப் பிரகடனம் செய்வதற்கான திட்டத்துக்கு ஆதரவு கோரி உலக நாடுகள் பலவற்றுக்கு விஜயங்களை மேற்கொண்டுள்ள பலஸ்தீன ஜனாதிபதி யசீர் அரபாத் கடந்த வாரம் கிரெம்ளினில் ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர்புட்டினைச் சந்தித்தபோது எடுத்தபடம்.

## பலஸ்தீனப் பிரச்சினை குறித்து உடன்பாடு விரைவில் எட்டப்படும்

### இஸ்ரேலிய அமைச்சர் நம்பிக்கை

டெல்அவிவ்,ஒக.17

இஸ்ரேல் மற்றும் பலஸ்தீனம் இடையே பூர்வாங்க அமைதி ஒப்பந்தம் ஒன்று ஓகஸ்ட் மாத இறுதிக்கும் செப்டெம்பர் மாத தொடக்கத்துக்கும் இடைப்பட்ட காலப் பகுதியில் ஏற்படுத்தப்படலாம் என்று இஸ்ரேலிய இடைக்கால வெளியுறவு அமைச்சர் ஸ்நோ பென்அமி நம்பிக்கை தெரிவித்தார்.

தனது ஐரோப்பிய பயணத்தின் பின்னர் நாடுதிரும்பிய அவர் இதனைத் கூறினார்.

பலஸ்தீன நாட்டின் எல்லை, யூதர்களின் குடியிருப்பு, பாதுகாப்பு ஆகிய பிரச்சினைகளில் இரு தரப்பும் உடன்பாடுகளை எட்டியிருப்பதாகவும் -

ஜெருசலேம் குறித்த பிரச்சினை விரைவில் தீர்க்கப்படலாம் என்றும் பென்அமி கூறினார்.

அதேசமயம், பலஸ்தீன அதிபர் யஸீர் அரபாத் பலஸ்தீனத் தனி நாட்டை ஒரு தரப்பாகப் பிரகடனம் செய்தால் மேற்காசிய அமைதியை அழிக்கும் நடவடிக்கையாக அது அமையும் என்று பென்அமி எச்சரித்தார். (ஒ)

## இராணுவ ஆட்சியை பலப்படுத்த பாகிஸ்தானில் முஷாரப் முயற்சி!

### தேசிய பாதுகாப்புச் சபையில் மாற்றம்

இஸ்லாமாபாத்,ஒக.17

பாகிஸ்தானின் தேசிய பாதுகாப்புச் சபையில் இராணுவத்தின் ஆதிக்கத்தை அதிகமாக்கும் நடவடிக்கையை ஆட்சியாளர் பர்வேஷ் முஷாரப் மேற்கொண்டுள்ளார்.

கடந்த ஆண்டு ஒக்டோபர் மாதத்தில் பாகிஸ்தானில் நடந்த இராணுவப் புரட்சியின் பின்னர் முக்கிய முடிவுகளை எடுப்பதற்காக அமைக்கப்பட்ட தேசியப் பாதுகாப்பு சபையை முஷாரப் திருத்தி அமைத்ததன் மூலம் இராணுவம் ஆட்சியில் முக்கிய இடத்தை வகிக்க வழிசெய்துள்ளதாகக் கூறப்படுகின்றது.

இதுவரைகாலமும் தேசிய பாதுகாப்பு சபையில் உறுப்பினர்களாக இருந்த 5 மக்கள்பிரதிநிதிகள் நீக்கப்பட்டு வெளியுறவு, நிதி, உள்துறை மற்றும் வர்த்தக அமைச்சர்கள் உறுப்பினர்களாக நியமிக்கப்பட்டுள்ளதாகவும், அத்துடன் முப்படைத் தலைவர்களையும் சபையில் சேர்த்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.



பாகிஸ்தானில் மக்கள் ஆட்சி ஏற்பட்டாலும், அதில் இராணுவத்தின் பங்களிப்பு இருப்பதை உறுதிப்படுத்தவே முஷாரப் இந்த நடவடிக்கையை மேற்கொண்டதாகத் கருதப்படுகிறது.

பாகிஸ்தானில் முக்கிய முடிவுகளை எடுப்பதில் அமைச்சரவையை விடத் தேசிய பாதுகாப்பு சபைக்கே அதிகாரம் அதிகம் என்பது குறிப்பிடத்தக்கது.

இதற்கிடையில் உத்தேசிக்கப்பட்டுள்ள உள்ளூராட்சி தேர்தல்களில் சிறுபான்மை வாக்காளர்கள் தொடர்பான திட்டத்தையும், அதிகாரப் பகிர்வுத் திட்டத்தையும் பிரதான சிறுபான்மை அமைப்பான கிறிஸ்தவ விடுதலை முன்னணி நிராகரித்துள்ளது.

(இ-ஓ-5)

## இத்தாலிய நாடாளுமன்றத்தில் சிகரெட் தடை குறித்த பிரேரணை

ரோம்,ஒக.17

இத்தாலியில் சிகரெட் புகைப்பதற்கு நாடு முழுவதும் தடை விதிக்கும் சட்ட முன்வரைவை இத்தாலிய நாடாளுமன்றத்தில் சுகாதார அமைச்சர் உமபர்தோ வெராலன்சி சமர்ப்பித்துள்ளார்.

இந்தப் பிரேரணையை சட்டமாக்க 1975 ஆம் ஆண்டு முதல் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டபோதும் இதுவரை இத்தாலியில் புகைத்தலை தடைசெய்யும் சட்டம் நடைமுறைக்கு வரவில்லை என்று பிரேரணையை சமர்ப்பித்து உரையாற்றிய சுகாதார அமைச்சர் கவலை தெரிவித்தார்.

இந்தப் பிரேரணை சட்டமாக்கப்பட்டால் இத்தாலியில் சிகரெட்டை கனவிலும், அருங்காட்சியகங்களிலும்தான் பார்க்க முடியும்.

நாடாளுமன்ற உறுப்பினர்களில் பெரும்பாலானோர் புகைப் பழக்கத்தை கொண்டிருப்பதாலேயோ என்னவோ அத்தகைய நிலை இத்தாலியில் இதுவரை ஏற்படவில்லை. (ஒ)

## முஸ்லிம் பெண்கள் மீதான சித்திரவதை; முன்னாள் அதிபருக்குத் தண்டனை!

பொஸ்னியாவின் முன்னாள் சேர்பிய தலைவரான றடோவன் காராட்சிக், அவரது ஆட்சிக் காலத்தில் சித்திரவதைக்கும், பாலியல் வல்லுறவுக்கும் ஆளான முஸ்லிம் பெண்களுக்கு 74 கோடி 50 லட்சம் டொலர் நஷ்டஈடாக வழங்க வேண்டும் என்று மன்ஹறட்டன் சமஷ்டி நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

தற்போது பொஸ்னியாவில் மறைந்து வாழும் காராட்சிக்கோ, அவரது சட்டத்தரணிகளோ நீதிமன்றத்தில் ஆஜராகாத நிலையில் பாதிக்கப்பட்ட முஸ்லிம் பெண்கள் அளித்த வாக்குமூலங்களின் அடிப்படையில் இந்தத் தீர்ப்பு வழங்கப்பட்டது.

12 தனிநபர்கள் மற்றும் 3 முஸ்லிம் குழுக்கள் தாக்கல் செய்த வழக்குகளை ஒன்றிணைத்து விசாரித்த நீதிபதிகள் முன்பாக சிகரட்டால் சுடப்பட்டமை, மீன்பிடிக்கும் தூண்டில் ஊசிகளால் சித்திரவதை செய்யப்பட்டமை, மற்றும் கொடூரமான பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்டமை ஆகியவை குறித்து முஸ்லிம் பெண்கள் கண்ணீர் மல்க வாக்குமூலம் அளித்ததாக கூறப்படுகிறது.

உலக அரங்கில்

நீதிபதி தீர்ப்பை வாசித்த பின்னர் மகிழ்ச்சி ஆரவாரம் செய்த பாதிக்கப்பட்டவர்கள், முன்னாள் அதிபரின் சொத்துக்கள் பற்றிய விவரம் தமக்குத் தெரியும் என்றும் இந்தத் தீர்ப்பு அவற்றைத் தாம் பெற அங்கீகாரம் வழங்கியுள்ளதாகவும் தெரிவித்தனர். (இ-ஒ)

## பிரிட்டனில் மூளைக்காய்ச்சலால் பீதி; 16ஆயிரம் பன்றிகள் கூண்டோடு அழிவு!

லண்டன்,ஒக.17

பிரிட்டனில் மூளைக்காய்ச்சலைப் பரப்பும் கிருமிகளைக் கொண்டுள்ளதாகக் கருதப்படும் 16 ஆயிரம் பன்றிகளைக் கூண்டோடு அழிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

கிழக்குப் பிரிட்டனில் தற்போது மூளைக்காய்ச்சல் வேகமாகப் பரவி வருகிறது. இதனால் அப்பகுதி மக்கள் பெரும் அச்சம் அடைந்துள்ளனர். இந்த நோய் அங்குள்ள ஒரு பன்றிப் பண்ணையில் இருந்தே பரவத் தொடங்கியதாகக் கருதப்படுகிறது.

இதனால் அந்தப் பண்ணையிலும் மற்றும் அதன் சுற்றுப்புறங்களிலும் இருந்த பன்றிகளை அடியோடு அழிக்குமாறு அரசு உத்தரவிட்டுள்ளது.

அதனையடுத்து சுமார் 6 ஆயிரம் பன்றிகள்வரை இதுவரை அழிக்கப்பட்டதாகவும், மேலும் 10 ஆயிரம் பன்றிகள் விரைவில் கொல்லப்படும் என்றும் கூறப்படுகிறது. (ஒ)

### ஐ.நா. அனுமதியுடன்

## நோயுற்ற 130 குழந்தைகளை ஏற்றிய ஆப்கான் விமானம் ஜேர்மனி சென்றது

ஆப்கானிஸ்தானில் ஆளும் தலிபான்களின் 'அரியானா' விமான சேவை விமானம் நோயுற்ற மற்றும் போரில் காயமடைந்த 130 குழந்தைகளை ஜேர்மனிக்கு ஏற்றிச் சென்றது.

செல்லும் வழியில் ஆர்மேனியா உட்பட சில இடங்களில் நோயால் பாதிக்கப்பட்ட குழந்தைகளையும் அந்த விமானம் எடுத்துச் சென்றது.

இந்தச் சிறுவர்கள் அனைவரும் தகுந்த மருத்துவ சிகிச்சை கிடைக்காமல் இருந்தவர்கள்.

இந்த விமானம் செல்லும் பாதையில் வான்பகுதித் தடையை ஐ.நா. பாதுகாப்புச் சபையின் தீர்வுக் குழு விலக்கிக் கொண்டது.

உள்நாட்டு யுத்தத்தை அடுத்து ஆப்கானிஸ்தான் விமானசேவையை நடத்தவும் தலிபான்கள் அந்த நாட்டின் வான் பகுதியை உபயோகிக்கவும் ஐ.நா.பாதுகாப்புச்சபை தடை விதித்திருந்தது.

தற்போது போரினால் பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்குச் சிகிச்சை அளிப்பதற்காக ஐ.நா.தடையை தளர்த்தியுள்ளது. (ஒ)

## ரஷ்ய நீர்மூழ்கிக் கப்பலை மீட்கும் முயற்சிகள் தீவிரம்

மொஸ்கோ,ஒக.17

கடலின் அடியில் சிக்கியுள்ள ரஷ்ய நீர்மூழ்கிக் கப்பலையும், அதிலுள்ள நூற்றுக்கும் அதிகமான பணியாளர்களையும் மீட்கும் பணிகளில் ரஷ்ய கடற்படையின் 15 போர்க்கப்பல்கள் ஈடுபட்டுள்ளன.

நீர்மூழ்கிக் கப்பலில் இருந்து அணுக்கதிர்கள் வெளியேறும் ஆபத்தைச் சமாளிக்க அதன் இயந்திரங்கள் நிறுத்தப்பட்டுள்ளதாகவும், அப்பகுதியில் வீசும் சூறாவளிக் காற்றினால் பணியாளர்களை மீட்கும் பணிகள் தாமதமாவதாகவும் ரஷ்ய அதிகாரிகள் தெரிவித்தனர்.

கடலில் வைக்கப்பட்டிருந்த 'டோர்பிடோ' எனப்படும் கடற்கண்ணிவெடி நீர்மூழ்கிக் கப்பல்மீது மோதி வெடித்ததாலேயே இந்த விபத்து நேர்ந்திருப்பதாகக் கருதப்படுகிறது.

நீர்மூழ்கிக் கப்பலை மீட்கும் பணிகளில் உதவ அமெரிக்கா உள்ளிட்ட நாடுகள் சில முன்வந்த போதும் ரஷ்யா அந்த உதவிகளை ஏற்க மறுத்து விட்டது குறிப்பிடத்தக்கது.

(இ-ஒ-5)

## போதிய நிதி ஒதுக்கீடு இல்லாததால்

# குடிதண்ணீர் விநியோகத் திட்டத்தை செயற்படுத்த முடியாத நிலைமை

### ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் ஆணையாளர் தெரிவிப்பு

போதியநிதி ஒதுக்கீடுகள் இல்லாத காரணத்தினால் யாழ். மாநகரசபையின் குடி தண்ணீர் விநியோகத் திட்டத்தை பராமரிப்பது பற்றிச் சிந்திக்க வேண்டியுள்ளது என்று யாழ். மாநகரசபை ஆணையாளர் வி. பி. பாலசிங்கம் யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் கூறியதாவது:-

ஜேர்மன் தொழில் நுட்ப நிறுவனத்தினால் மேற்கொள்ளப்பட்டுவரும் யாழ். மாநகர சபைப் பகுதிக்கான குடிதண்ணீர் விநியோகத் திட்ட வேலைகள் பூர்த்தி அடையும் நிலையிலுள்ளன

இம் மாத இறுதியில் மாநகரசபையிடம் குடிதண்ணீர் விநியோகத் திட்டம் ஒப்படைக்கப்படவுள்ளது.

இந்த திட்டத்துக்கான பராமரிப்புச் செலவாக மாதாந்தம் ஒரு லட்சம் ரூபா செலவு ஏற்படும் என மதிப்பிடப்பட்டுள்ளது. இதற்கான நிதி ஒதுக்கீடுகளோ வருமானங்களோ யாழ். மாநகரசபைக்கு குறைவாகவே உள்ளது. எனவே இந்தத்திட்டத்தினை எப்படித்தொடர்ந்து முன்னெடுப்பது என்று சிந்திக்க வேண்டியுள்ளது.

யாழ். மாநகர சபையைப் பொறுத்த வரையில் அது தற்பொழுது குறைந்த வளங்களுடனே செயற்பட்டு வருகிறது.

குடாநாட்டிலுள்ள பிரதேச சபைகளுக்கு ஒதுக்கப்படுகின்ற அளவு நிதிகூட மாநகர சபைக்கு ஒதுக்கப்படுவதில்லை.

யாழ் மாவட்டத்தில் பின்தங்கிய ஒரு நிர்வாக அலகு என்றால் அது யாழ். மாநகர சபையாகத்தான் இருக்க முடியும். அத்துடன் வாகனம் கூட இதற்கு கிடையாது என்பதனை இங்கு கூறிக்கொள்ள விரும்புகின்றேன்.

இப்படி அவர் மேலும் கூறினார். (இ-5-9)

---

# அறிவித்தல்

## கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளருடனான சந்திப்பு

வடக்கு—கிழக்கு மாகாண கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் அவர்கள் யாழ் மாவட்டத்துக்கு வருகை தந்துள்ளதால் சகல ப. நோ. கூ. சங்கங்கள், பனை-தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்கள், இரண்டாம்படிச் சமாசங்கள், மாவட்டமட்ட கூட்டுறவுச் சங்கங்கள் ஆகியவற்றின் தலைவர், பொதுமுகாமையாளர்களுடனான கலந்துரையாடலுக்கு இன்று (17—08—2000) வியாழக்கிழமை மு. ப. 11 மணிக்கு யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

கூ. அ. உ. ஆணையாளர்,
யாழ். மாவட்டம்.

(சி/12528)

---

# கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலையில் முன்னாள் ஆசிரியராகவும்
பகுதித் தலைவராகவும்
பாடசாலைக் கூட்டுறவுச் சங்கத்தின் தலைவராகவும்
தற்போதைய நலன்விரும்பியாகவும் விளங்கிய
**திருமதி ம. மகேந்திரன் அவர்களின்**
வாழ்க்கைத் துணைவராகிய

## சதாசிவம் மகேந்திரன்

அவர்களின் திடீர் மறைவையிட்டுத் துயருறும் குடும்பத்தினரின் துன்பத்தில் பங்குகொள்வதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடையவும் பிரார்த்திக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள்,
மாணவர்கள், ஊழியர்கள்.
யா/ பெரியபுலம் ம.வி.

இல. 57, வன்னியார் ஒழுங்கை,
திருகோணமலை.
T.P. No. 026 - 21035 (சி/12524)

---

# 45 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

அன்னை மடியில் 01 - 11 - 1939



ஆண்டவன் அடியில் 04 - 07 - 2000

## செல்வி சரஸ்வதி கந்தையா
### (யோகம் ரீச்சர்)

(B.Sc. Home Science —
ஓய்வு பெற்ற மனையியல் ஆசிரியை)

எங்களையெல்லாம் ஆறாத்துயரில் ஆழ்த்தி மீளாத் துயில் கொண்ட எமது அன்புச் சகோதரி யோகம் சிவபதம் அடைந்த செய்தியை அறிந்து இறுதிச் சடங்கில் கலந்துகொண்டவர்கள், தொலைபேசி மூலமும், தபால் மூலமும் அனுதாபச் செய்தி அனுப்பியோர் மேலும் அந்தியேட்டி, சபிண்டீகரணக் கிரியைகளிலும் கலந்துகொண்டு பலவழிகளில் உதவிபுரிந்த உற்றார், உறவினர், நண்பர்கள், அயலவர்கள் அனைவருக்கும் எமது இதயபூர்வமான நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

அதேவேளை அன்னாரின் ஆத்மா எல்லாம் வல்ல கரும்பிமாவடி முருகப்பெருமானின் திருவடி நிழலில் சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

''மயிலவன் திருவருள் மல்குக நாளும்''

அன்னாரின் பிரிவால் துயருறும்
**திரு. திருமதி க. வல்லிபுரமும்,**
**குடும்பத்தினரும்.**

தற்போதைய முகவரி:
துன்னாலை மேற்கு,
கரவெட்டி.

டச்சு வீதி,
மீசாலை மேற்கு,
மீசாலை.

(77284)

---

# சாவகச்சேரி வர்த்தகர்களுக்கு உலர் உணவு நிவாரணம்

## டக்ளஸ் நடவடிக்கை

யாழ்ப்பாணம், ஓக 17

சாவகச்சேரி வர்த்தகர்களில் 'உ' அட்டை வைத்திருப்பவர்களுக்கு உலர் உணவு நிவாரணம் வழங்குவதற்காக சம்பந்தப்பட்ட அமைச்சுக்களுடன் தொடர்பு கொண்டு நடவடிக்கை எடுத்துள்ளோம்

மேற்கண்டவாறு யாழ். மாவட்ட நாடாளுமன்ற, உறுப்பினரும், ஈ.பி.டி.பி. யின் செயலாளர் நாயகமுமான டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

தம்மைச் சந்தித்த சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்றப் பிரதிநிதிகளிடமே அவர் இப்படிக் கூறினார்.

'அண்மைக்கால இடப்பெயர்வுகளால் வணிகர்கள் அவதிப்படுகின்றனர். இவர்களுக்கு வழங்கப்பட்ட 'உ' பங்கீட்டு அட்டையை மாற்றி இலவச உலர் உணவு பெற வழி செய்யவேண்டும். பரம்பரையாகச் சேமித்து வைத்த சொத்து, முக்கிய ஆவணங்கள் ஆகியவற்றை இழந்துவிட்டோம். அவற்றைமீளப்பெறக்கூடிய விரைவில் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனக் கோரும் மகஜர் ஒன்றைவணிகர் மன்றத்தினர் டக்ளஸிடம் கையளித்தனர்.

அந்த மகஜரைப் பெற்றுக்கொண்டு பதில் அளிக்கையிலேயே டக்ளஸ் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ஆவணங்களை மீளப்பெறுவது தொடர்பாக இராணுவத்துடன் கதைத்து அனுமதி பெறப்பட்டுள்ளதாகவும்—

விடுதலைப் புலிகளின் அனுமதியைப் பெற செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு மூலம் தொடர்பு கொண்டுள்ளதாகவும்—

விரைவில் பதில் கிடைத்ததும் ஆவணங்களை மீளப்பெறமுடியும் எனவும் — டக்ளஸ் வணிகர் மன்றத்தினரிடம் தெரிவித்தார். (இ–க)

# அன்பளிப்பு

ஐ. நா. அபிவிருத்தித் திட்ட அதிகாரிகள் 'எல்வ்' வாகனம் ஒன்றை யாழ். அரச அதிபரிடம் நேற்றுக் கையளித்தனர்.

அந்த அமைப்பு அன்பளிப்பாக வழங்கியுள்ள இந்த வாகனத்தை அரச அதிபர் கால்நடைச் சுகாதாரத் திணைக்களத்தின் பாவனைக்கு ஒப்படைக்கவுள்ளார்.

# பகுதி நேர ஆங்கில ஆசிரியர்களுக்கு அழைப்பு

யாழ் செயலகத்தில் நாளையும், நாளை மறுதினமும் இடம்பெறும் பொதுமக்கள் குறைகேள் செயலமர்வில் தமது நிரந்தர நியமனம் தொடர்பாக யாழ். மாவட்ட பகுதிநேர ஆங்கில ஆசிரியர் சங்கம் எடுத்துக் கூறவிருக்கின்றது.

இதில் பங்குபற்ற வசதியாக யாழ். மாவட்டத்தில் பணிபுரியும் சகல பகுதிநேர ஆங்கில ஆசிரியர்களையும் நாளை வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு ஆரியகுளம் சந்தியில் அமைந்துள்ள புதிய உயர் கலைக் கல்லூரியில் ஒன்று கூடுமாறு கேட்கப்பட்டுள்ளது. (இ-க-3)

# நல்லூர் ஆலயச் சூழலில் இன்று

யாழ்ப்பாணம், ஓக. 17

நல்லூர் கந்தசாமி ஆலய மகோற்சவத்தை முன்னிட்டு நல்லூர் சைவ மகாசபையின் ஏற்பாட்டில் மேற்கு வீதி ஸ்ரீ முத்துவிநாயகர் ஆலய மண்டபத்தில் பிற்பகல் 5 மணி முதல் 6 மணி வரை கானகதா வாரிதி பிரம்மஸ்ரீ வை. நித்தியானந்த சர்மா நிகழ்த்திவரும் 'மகாபாரதம்' இசைச் சொற்பொழிவுத் தொடரில் இன்று 'குருகுல வாசம்' என்னும் தலைப்பில் சொற்பொழிவு இடம்பெறும். (க–30)

★ ★ ★

யாழ்ப்பாணம், ஓக. 17

வடபிராந்திய இந்துப் பேரவையின் ஏற்பாட்டில் அறுபத்துமூன்று நாயன்மார் குருபூசை மடத்தில் பிற்பகல் 2 மணிக்கு இடம்பெற்று வரும் தெய்வீகச் சொற்பொழிவுத் தொடரில் இன்று 'நாயேனை இதற்கு நாயகமே' எனும் தலைப்பில் சிவத்தமிழ் வித்தகர் சிவ. மகாலிங்கம் உரை நிகழ்த்துவார். (க-30)

# வாராந்த நிகழ்வு

தொண்டைமனாறு சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் நடைபெற்று வரும் வாராந்த நிகழ்வுத் தொடரில் நாளை வெள்ளிக்கிழமை முற்பகல் 10-30 மணிக்கு எஸ். எஸ். ராஜேந்திரனின் புல்லாங்குழல் இசை இடம்பெறும்.

இந்த நிகழ்ச்சிக்கான அறிமுகவுரையை பேரவை உறுப்பினர் அருள்லிங்கம் நிகழ்த்துவார். (க-173)

---


உ

## லயன்ஸ் கழகங்கள்
### சுன்னாகம், இணுவில், மானிப்பாய்
வட்டம் ஒருங்கிணைந்து நடத்தும்

# விழி வெண்படலத்தால் பாதிப்புற்றோருக்கான இலவச கண்பரிசோதனை முகாம்

- காலம்:- (20-08- 2000) ஞாயிறு காலை 7. 30மணி.
- இடம்:- மல்லாகம் மகாவித்தியாலயம்-மல்லாகம் சந்தி.
- கண்பரிசோதனை மேற்கொள்பவர்:-

யாழ். போதனா வைத்தியசாலை—கண் சத்திரசிகிச்சை நிபுணர்
**வைத்திய கலாநிதி. எஸ். குகதாசன் அவர்கள்**

இடம்பெயர்ந்து வாழும் நலிவுற்றோருக்கும், வலி. வடக்கில் வாழும் முதியோருக்கும் முன்னுரிமை வழங்கப்படும்.

ஏனையோருக்கு முகாமுக்கு வருகை தரும் ஒழுங்குமுறையின்படி பரிசோதனை மேற்கொள்ளப்படும்.

குறிப்பு: கண் சத்திர சிகிச்சை மேற்கொள்ளப்பட வேண்டியவர்களுக்கும் யாழ் போதனா வைத்தியசாலையில் இம் மாதம் 22ஆம், 24 ஆம், 26 ஆம் திகதிகளில் அனுமதி பெற ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளதுடன் நலிவுற்றோருக்கு மட்டும் கண்ணாடி வில்லையும் (IOL) இலவசமாகக் கொடுக்கப்படும்.

| லயன் | லயன் | லயன் |
|---|---|---|
| எஸ். சச்சிதானந்தன் | கே. தேவராஜா | A. இருதயநாதன் |
| தலைவர், சுன்னாகம் லயன்ஸ் கழகம் | தலைவர் இணுவில் லயன்ஸ் கழகம் | தலைவர், மானிப்பாய் வட்ட லயன்ஸ் கழகம் |

சேவை ஒழுங்கு: லயன் எஸ். எஸ். தங்கராஜா
மாவட்டத் தலைவர் கழகவிருத்தி

(12525)

# உதயன்

## "ராகிங்"கை ஒழிக்க...

பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பொறியியல் பீடத்தில் பயின்ற யாழ்ப்பாணத்து மாணவன் வரப்பிரகாஷுக்கு நேர்ந்த கதி, யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவன் ஷாஜகானுக்கு நேர்ந்து விடக்கூடாது என்று வேண்டுதல் செய்த இப்பிரதேச மக்கள் மனங்கள் ஆயிரக்கணக்கானவை.

"ராகிங்" கொடுமையால் வரப்பிரகாஷின் சிறுநீரகம் சேதமுற்று அந்த வருங்கால இளம் தமிழ்ப் பொறியியலாளன் மரணமானதற்குக் காரணமாக இருந்தவர்கள் சக தமிழ் மாணவர்களே. இதனை அறிந்து யாழ்ப்பாணத் தமிழ்ச் சமூகம் மட்டுமன்றி, அனைத்துலகத் தமிழர் சமூகமும் வெட்கித் தலைகுனிந்தது.

உயர்கல்விக்கெனச் செல்லும் தமிழ் மாணவர்கள் தமது சக மாணவனை மிருகத்தனமாகத் தாக்கிக் கொலை செய்யும் அளவிற்கு கொடூரத் தன்மை நிறைந்தவர்களா என்று ஏனையோர் கேவலமாக பேசிய போது, அனைத்துத் தமிழர்களின் மானம் மரியாதை யாவும் காற்றில் பறந்தன.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்கள் தமது சக மாணவனை "ராகிங்" என்ற பெயரில் கொலை செய்து விட்டார்கள் என்ற அவப்பெயர் வந்து விடக்கூடாது என்பதே யாழ்ப்பாண மக்களின் பிரார்த்தனையாக இருந்தது.

வெள்ளம் வந்த பின்னர் அணை கட்டி, அதனால் அள்ளிச் செல்லப்படும் ஆபத்தில் இருந்து தப்பிக் கொள்ள முடியாது. தவறு எமது பக்கத்தில் இருக்க, வினையை நாமே விதைத்துவிட்டு, ஆபத்து வந்ததும் ஆண்டவனை பிரார்த்தித்தால் அவன் என்ன செய்வான்?

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் "ராகிங்" கொடுமை வருடாந்தம் அரக்கத்தனம் மிகுந்ததாக அசுர வேகத்தில் வளர்ந்து வருகிறது. சென்ற வருடம் இந்த அரக்கர்களின் பிடியில் அகப்பட்டு அவஸ்தைப்பட்ட மாணவன் தனக்கு நேர்ந்த உடல், உள வேதனைகளை மறந்து இந்த வருடத்தில் வெறித்தனம் மிகுந்த "ராகிங்" அசுரனாகி விடுகிறான்!

"ராகிங்" அட்டூழியம் செய்யும் மாணவர்களை தண்டனை மூலமும், சரியான நெறிப்படுத்தல் மூலமும் திருத்துவதற்கு பல்கலைக்கழக நிர்வாகமும், சமூகமும் தொடர்ந்து தவறி வருகின்றன.

"ராகிங்" கொடுமையால் வரப்பிரகாஷ் இறந்த பின்னர் அரசாங்கம் கூட விழித்துக் கொண்டது. "ராகிங்" கிரிமினல் குற்றம் என்றும் அதற்கேற்ற தண்டனை வழங்கப்பட வேண்டும் எனவும் சட்டம் கொண்டு வந்தது. ஆனால் யாழ்ப்பாணத்தில் அது செயற்படவில்லை.

பல்கலைக்கழக நிர்வாகமும் "ராகிங்" கொடுமை இழைக்கும் மாணவர்களை மென்மையான தண்டனைகளோடு "மன்னித்து" விடாமல் கடும் தண்டனை வழங்க முன்வரவேண்டும். "ராகிங்" கொடுமை பல்கலைக்கழகத்துக்கு மட்டும் அவமானத்தைத் தருவது; மாணவர்களைப் பாதிப்பது; அங்கு குழப்பத்துக்கு வழிவகுப்பது என்ற எல்லைகளை கடந்து சமூகத்தைச் சீர்கெடுத்துவது என்ற பார்வையுடனும் நோக்க வேண்டும்; செயற்பட வேண்டும்.

"ராகிங்" கொடுமையை ஒழிப்பதில் மாணவர்களின் பெற்றோர்களும் சமூகமும் பெரும் பங்காற்ற வேண்டியுள்ளது. தமது பிள்ளை - பல்கலைக்கழக மாணவன் - "ராகிங்"கினால் வேதனைப்படும் போது, துன்பப்படும் போது, பாதிப்புறும் போது மட்டும் அந்தக்குற்றத்திற்கெதிராக குரல் கொடுக்க எழும் பெற்றோர் - தமது பிள்ளை "ராகிங்" செய்யும் போது அவனைத் தட்டிக் கேட்பதும் இல்லை - திருத்த முனைவதும் இல்லை - தண்டிப்பதும் இல்லை. இந்த நிலையை அவர்கள் மாற்ற வேண்டும். அடுத்தவர் பிள்ளையையும் தனது பிள்ளையின் நிலையில் வைத்து நோக்க வேண்டும். தனது பிள்ளையை தண்டித்துத் திருத்த வேண்டும்.

சமூகமும் எழுந்தமானத்தில் செயற்படாமல் அவ்வப்போது கருத்துக் கூறி விட்டுப் பின் கோடிக்குச் செல்லாமல், ஓர் அமைப்பாக இயக்கமாகச் சமூக உணர்வுடன் செயற்படுவது அவசியம்.

ஒரு விரல் கை போலாகாது; ஐந்து விரல்கள் சேர்ந்தாலேயே கையாக நின்று முழுமையாகச் செயற்பட முடியும்.

# தனிநாயகம் அடிகளுக்கு நெடுந்தீவில் உருவச்சிலை

யாழ்ப்பாணம்,ஒக.17

தமிழாராய்ச்சி மாநாட்டின் முன்னோடிகளில் ஒருவரான தவத்திரு தனிநாயகம் அடிகளாருக்கு அவரது சொந்த ஊரான நெடுந்தீவில் உருவச்சிலை ஒன்று அமைக்கப்படவுள்ளது.

இது தொடர்பான தீர்மானம் ஒன்று கடந்த வியாழனன்று நடைபெற்ற நெடுந்தீவு கலாசாரசபையின் செயற்குழுக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டதாக கலாசார சபையின் பொருளாளரும் நெடுந்தீவு பிரதேச சபைத் தலைவருமான புலவர்.ஏ. டபிள்யூ. அரியநாயகம் தெரிவித்தார்.

தமிழ்மொழியின் வளர்ச்சிக்காகவும்,ஈழத்தமிழர்களின் உரிமைக்காகவும் இந்தியாவிலும், உலக நாடுகளிலும் குரல் கொடுத்த தவத்திரு தனிநாயகம் அடிகளாருக்கு இலங்கையில் எந்தவொரு இடத்திலும் உருவச்சிலை அமைக்கப்படவில்லை என்ற குறை நீண்ட காலம் நிலவிவந்ததாகவும் -

இது குறித்து நெடுந்தீவு கலாசார சபையின் செயற்குழுக்கூட்டத்தில் உறுப்பினர்கள் பலரும் விடுத்த வேண்டுகோளை அடுத்து நெடுந்தீவு மாவலித்துறை துறைமுகப்பகுதியில் தனிநாயகம் அடிகளின் உருவச்சிலை அமைப்பது எனத் தீர்மானிக்கப்பட்டதாகவும் - அவர் மேலும் தெரிவித்தார்.

வெளிநாடுகளில வசிக்கும நெடுந்தீவுவாசிகள் மற்றும் மதத்தலைவர்கள், குடாநாட்டு வர்த்தகர்கள் பலர் மேற்படி உருவச்சிலையை அமைப்பதற்கு நிதியுதவி வழங்க முன்வந்துள்ளனர் எனவும் -

எதிர்வரும் டிசெம்பர் மாதத்துக்கு முன்னர் உருவச்சிலை அமைக்கப்பட்டுவிடும் எனவும் மேலும் தெரிவிக்கப்பட்டது.

(இ-7)

# யாழ். ஆஸ்பத்திரியில் ஈ.சி.ஜீ. பணி விஸ்தரிப்பு

யாழ்ப்பாணம்,ஒக.17

யாழ். போதனா வைத்தியசாலையில் ஈ.சி.ஜீ. (E.C.G) பணிகள் மேலும் விஸ்தரிக்கப்பட்டுள்ளன.

இதுவரை காலமும் சாதாரணமாக ஈ.சி.ஜீ. எடுக்கின்ற பணிகள் மட்டுமே நடைபெற்று வந்தன. தற்போது 'ரெட்மில் ஈ.சி.ஜீ' (**Tread Mill E.C.G**) மற்றும் "ஹோல்ட்டர் மொனிற்றரிங்" (**Holter monitoring**) ஆகிய பணிகளும் ஆரம்பிக்கப்பட்டு நடைபெற்று வருவதாகத் தெரிவிக்கப்பட்டது.

'ரெட்மில் ஈ.சி.ஜீ.' இதயத்துக்கு இரத்தத்தை வழங்குகின்ற நாடியில் ஏற்படுகின்ற சுருக்கம காரணமாக ஏற்படக்கூடிய இதய வருத்தத்தைக் கண்டறியவே செய்யப்படுகிறது.

நீண்ட காலமாக மேற்படி ரெட்மில் ஈ.சி.ஜீ.க்குப் பயன்படுத்தப்படுகின்ற சில பொருள்கள் இல்லாத காரணத்தால் 'ரெட்மில **E.C.G**' செய்யப்படவில்லை என்றும் -

யாழ். போதனா வைத்தியசாலையில் கடமையாற்றுகின்ற ஈ.சி.ஜீ பதிவாளர்கள் இருவரும் கடந்தவருட இறுதிப்பகுதியில் இது தொடர்பான பயிற்சி பெறுவதற்காக கொழும்பு வைத்தியசாலை சென்று வந்ததைத் தொடர்ந்து மேற்படி 'ரெட்மில் ஈ.சி.ஜீ.' மீளவும் நடைபெறத் தொடங்கியிருப்பதாகவும் -

தெரிவிக்கப்பட்டது.

இவ்வாறு 'ரெட்மில ஈ.சி.ஜீ. மூலம் இருதய வருத்தம் (**Ischaemic Hart disease**) இருப்பது வைத்திய நிபுணரால் கண்டறியப்பட்டால் அத்தகைய வருத்தமுள்ள நோயாளி மேலதிக சிகிச்சைக்காக செஞ்சிலுவைச் சர்வதேசக்குழு கப்பல் மூலம் கொழும்பு செல்ல முடியும் என்பதோடு, இதன் மூலம் இங்கே செய்யக்கூடிய இத்தகையதொரு 'ரெட்மில் ஈ.சி.ஜீ.'க்காக கொழும்புவரை சென்றுவரவேண்டிய நிலைமை தவிர்க்கப்பட்டுள்ளதாகவும் -

தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை -

நோயாளி ஒருவரின் இதயத்துடிப்பை 24 மணிநேரமும் கசெற்றில் (**Audio Casette**) பதிவு செய்து பகுப்பாய்வு செய்யும் ஹோல்ட்டர் மொனிட்டரிங் (**Holter Monitoring**) பரிசோதனையும் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

இதற்கென்று உபகரணத்தொகுதி ஒன்றை கொழும்பு வைத்தியசாலையின் இருதயநோய் சிகிச்சைப் பிரிவினர் இந்தவருட முற்பகுதியில் நன்கொடையாக வழங்கியிருந்தனர்.

(ஜ-15)

### ஈ.பி.டி.பி.யின் ஏற்பாட்டில்

# புதிய அரசமைப்புச் சட்டநகல் தொடர்பாக யாழில் கருத்தரங்கு

யாழ்ப்பாணம்,ஒக.17

இனப்பிரச்சினைக்கு தீர்வு காணும் நோக்குடன் முன்வைக்கப்பட்ட அரசமைப்புச் சீர்திருத்தச் சட்ட நகல் தொடர்பான முழுநாள் கருத்தரங்கு ஒன்றை ஈ.பி.டி.பி அமைப்பு ஏற்பாடு செய்துள்ளது.

விரைவில் யாழ்.நகரில் இடம்பெறவுள்ள இந்த கருத்தரங்கில் அரசியல் சட்ட நிபுணர்கள், கல்விமான்கள், அரசியல்வாதிகள் ஆகியோர் கலந்துகொண்டு உரையாற்றுவர்.

கருத்தரங்கு முடிவில் குழுநிலையில் விவாதங்களும் இடம்பெறும். (க-3)

**உதயவாக்கு**

மனிதனுக்கு உரிமையுணர்ச்சி பிறவியிலேயே அமைகிறது. ஆனால் கட்டுப்பாட்டுணர்ச்சி பயிற்சியால்தான் அமைகிறது.

- *மு.வ.*


**நாளை**

**ஆவணி 2**

**வெள்ளிக்கிழமை**

*திதி:* திருதியை
பிற்பகல் 1.36 வரை.
*நட்சத்திரம்:* உத்திரட்டாதி
முழுவதும்
கரிநாள்
*சுபநேரம்:* 6.05 - 7.35
*ராகுகாலம்:* 10.35 - 12.05
(இவை பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி)

# சாயிசிந்தனை



தெய்வார்ப்பணம் என்பது எளிதானது. ஆனால் இதற்குக் குறுக்கே வருவது 'அகங்காரம்' என்பது. 'இது என்னுடையதே' என்ற எண்ணம் மேலோங்கினால் பணத்தைத் தன்னிடமே வைத்துக் கொள்ள வேண்டும் என்ற ஆசை வலவடைகிறது. ஆனால், பணம் உங்களுடையதே, பாதுகாப்புக்காக வங்கியில் வைக்கிறீர்கள் எனும் எண்ணம் வேரூன்றினால், உங்கள் கவலை குறைகின்றது. உங்களுடைய தேகமென்று எண்ணினாலும் அதன் பாதுகாப்பு இறைவனிடம் ஒப்படைக்கப்பட்டால் உங்களுக்கு ஏன் கவலை? இந்த எளிய உபாயம் புரியாமல்தான் சரணாகதி செய்வதில் தயக்கம் உண்டாகிறது. உங்கள் இதயத்தை என்றாகிலும் இறைவனுக்கு அளித்தேயாக வேண்டும். இப்போது இல்லாவிடில் என்றோ ஒருநாள் கட்டாயமாக உங்கள் இதயம் அவரிடம் சேர வேண்டியதே. இது தவிர்க்க முடியாதது. இதனைத் தெரிந்து இப்போதே நீங்களாகவே அர்ப்பணித்தால் அது உங்களுக்குப் பெருமை சேர்க்கும். வாழ்க்கைப் பயணத்தைப் பயமின்றித் தொடர முடியும்.

*(ஆதாரம்:- சனாதன சாரதி)*

# நல்லூர் உற்சவ காலச் சிறப்பம்சம்



## நல்லூர்ப் பதியினில் கூடுங்கடி

(காவடிச் சிந்து)

நாடுங்கடி ஒன்று கூடுங்கடி கந்தன்
நல்லூர் பதியினில் கூடுங்கடி- (நாடுங்கடி)
தேடுங்கடி புகழ்பாடுங்கடி - அந்தக்
தேவனருள் பெறப்பாடுங்கடி - (நாடுங்கடி)
நால் வேதப்பொருள் தானென்று காட்டிட
நான்முகனைச் சிறை வைத்தானடி - (நாடுங்கடி)
ஒரு வேதம்மறைந்ததன் தன்மை உணர்த்திட
ஒரு தலையையவனிடம் கொய்தானடி (நாடுங்கடி)
ஆறு சாஸ்திரம் தானெனன்றறைந்திட
ஆறு முகனாகி நின்றானடி - (நாடுங்கடி)
ஞான சக்தியின் தத்துவம் சாற்றிட
ஞான குருவாகி நின்றானடி - (நாடுங்கடி)
கிரியா சக்திதெய்வ யானையை மணந்து
கிரியையின் தத்துவம் தந்தானடி - (நாடுங்கடி)
வள்ளி யைக்கவர்ந்தே இச்சாசக்தியின்
வகைதனைப் புரியவைத்தானடி - (நாடுங்கடி)
முச்சந்தி வடிவத்தை உலகுக் குணர்த்திட
மூன்றும் ஒன்றாய் நின்றானடி - (நாடுங்கடி)
அறிவினால் சூரன்வதம் தனைக் காட்டிட
அரியவேல் கையில் தரித்தானடி - (நாடுங்கடி)

- *பழையூர் சுந்தரம்பிள்ளை*

## மௌனமேன் வேலவா!

கற்பகத் தண்ணறுஞ் சோலைவாழ் தேவர்தங்
கடும்பகை அசுரர்கள் என்றதங் கந்தனே!
நற்றமிழ்க் குமரனே! நயந்தருள் நல்கினாய்
நந்தமிழ் உறவுகள் நலிவுற ஈழத்தில்
உற்றவெம் போரினில் பல்குழல் கணையினால்
உயிர்களும் உடைமையும் அழிவுறக் காண்கிறாய்
மற்றவர் புலம்பெயர்ந் தலையக் காண்கிறாய்
மௌனமேன் வேலவா? மாமயில் வாகனா!

விருப்பமுற் றின்னறும் மாங்கனிக் காய்,மயில்
வாகனத் திவர்ந்திவ் வுலகினைச் சுற்றியும்
மருப்பொன் றொடித்துயர் பாரதம் எழுதிய
மூத்தவன் கரத்தினில் அதுகண்ட முருகா! நீ.
வருத்தமுற் றோராறு படைவீடு கொண்டனை!
வண்டமிழ் ஈழத்தார் இனப்போர்க் கொடுமையால்
இருப்பிடம் பெயர்ந்திவ் வுலகெலாம் பரந்துசென்
றிருந்தவா றென்னையோ? இதுவுமுன் லீலையோ?

- *நா.நல்லதம்பி*
மட்டுவில்.

## நல்லாறு சொல்லும் நமக்கருள வேண்டும்

அல்லலினை நீக்கவே அமைந்த முகமொன்றே
யாரையும் கவரும் அழகு முகமொன்றே
எல்லையில் தேவியரோ டிருந்த முகமொன்றே
எழிலான வேலினை ஏந்து முகமொன்றே
சொல்லாரும் தமிழதனை சொல்லு முகமொன்றே
தூயகுருவா கவேதோன்று முகமொன்றே
நல்லாறு சொல்லும் நமக்கருள வேண்டும்
நல்லையம் பதிவாழ் நமதாறு முகனே!

- *வே.குமாரசுவாமி*
காரைநகர்.

## வெம்போர் ஒழிய வகையருள்வாய்

நல்லுமை மகனே நற்குமரா
நல்லை நகருறை நாயகனே!
அல்லும் பகலும் அடிபணிந்தோம்
அல்லல் அகற்றி அருள் பொழிவாய்
வல்வினை போக்கும் வடிவழகா!
வந்துன் வடிவேலை வந்தித்தோம்
வெல்லும் வெற்றி வேல்முருகா!
வெம்போர் ஒழிய வகையருள்வாய்!

- *தா.தேவமதுரம்*

# தமிழ்ப் பொறியியலாளர் வவுனியாவில் கைது!

## புலிகளுக்கு வரைபடம் வழங்கினாராம்

வவுனியா நகரில் உள்ள பாதுகாப்பு நிலைகளின் அமைவிடங்களை வரைபடமாகத் தயாரித்து புலிகளுக்கு வழங்கியதாகச் சந்தேகிக்கப்படும் தமிழ்ப் பொறியியலாளர் ஒருவர் வவுனியாவில் வைத்துக் கைது செய்யப்பட்டுள்ளார்.

கொழும்பில் இருந்து சென்ற பயங்கரவாதத் தடுப்புப் பிரிவின் பொலீஸ் அதிகாரிகள் இந்நபரைக் கைது செய்ததாக சிரேஷ்ட பொலீஸ் அதிகாரி ஒருவரை மேற்கோள்காட்டி 'லங்காதீப' பத்திரிகை செய்தி வெளியிட்டிருக்கிறது.

வவுனியா வீதி அபிவிருத்தி அதிகாரசபையில் பணியாற்றும் இந்த சந்தேகநபர் புலிகளின் பிரதிநிதியாகச் செயற்பட்டிருப்பது விசாரணைகள் மூலம் தெரியவந்துள்ளதாகவும் -

இது தொடர்பாக மேலும் சிலர் விசாரணைக்குட்படுத்தப்பட்டிருப்பதாகவும் -

மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# சட்ட மருத்துவத் துறையில் டி.என்.ஏ ரேகைப் பதிவு;

# பரம்பரையலகுப் பொறியியலில் வியத்தகு சாதனை!

ஒவ்வொரு மனிதனுக்கும் தனித்துவமான விரல் ரேகைப்பதிவு இருப்பது போன்று டீ.என்.ஏ.ரேகைப் பதிவும் (**DNA Finger Print**) உள்ளது என்பது கடந்த நூற்றாண்டில் ஏற்பட்ட விஞ்ஞான முன்னேற்றத்தினால் கண்டறியப்பட்ட ஓர் உண்மையாகும்.


சட்ட மருத்துவத்துறையில் குற்றவாளிகளை இனங்காண விரல் ரேகை பயன்படுவது யாவரும் அறிந்ததே. ஆனால் தற்போதைய நிலையில் குற்றவாளிகளின் புத்தி சாதுரியமான - தற்காப்பு - நடவடிக்கைகளின் காரணமாகத் துப்புத்துலக்கு

**செம்மணியில் அழிக்கப்பட்ட அறுநூறுபேர்....**

**றுவாண்டாவில் மண்ணுக்குள் மௌனமான பல லட்சம் அப்பாவிகள்....**

**இவர்களை இன்னார்தான், இவர்களின் உறவினர் தான் என அடையாளம் காட்ட, இன்றைய நவீன விஞ்ஞானம் தந்த தீர்வுத் திட்டம் தான் டி.என்.ஏ. ரேகைப் பதிவு (DNA Finger Printing)**

பவர்களுக்கு விரல் ரேகை அடையாளங்கள் கிடைப்பது இல்லை. இதேபோன்று பாலியல்வன்முறை நடைபெற்ற சந்தர்ப்பங்களில் ஒரு பெண் கற்பழிக்கப்பட்டுள்ளாள் என்பதை நிர்ணயிக்கச் செய்யப்படும் சோதனைகளில் பெண்ணின் இனப்பெருக்க உறுப்பில் காணப்படக்கூடிய விந்துப்பாயம், அமில பொசுபட்டேசு (நொதியம்) என்பன உதவுகின்றன. எனினும் இப்பெண் யாரால் கற்பழிக்கப்பட்டுள்ளாள் என்பதனைப் போதிய சாட்சிகள் இன்றி நிருபிக்கக்கூடிய சாத்தியக்கூறுகள் முன்பு காணப்படவில்லை. அப்




பெண் கருத்தரித்துக் குழந்தையைப் பெற்றெடுத்தால் குழந்தையின் இழையவகை, குருதிக் கூட்டம் என்பவற்றைக் கொண்டு சந்தேகநபர்களில் குற்றமற்றவர்களை நீக்க முடியுமேயன்றி, குற்றவாளியை நூற்றுக்கு நூறு இவர்தான் என நிருபிக்க முடியாது. இதற்குக் காரணம் உலகில் பலருக்கு ஒரே வகைக் குருதிக் கூட்டமும் இழைய வகையும் இருப்பதுவாகும்.

கடந்த நூற்றாண்டின் விஞ்ஞான வளர்ச்சியின் வரிசையில் முக்கியத்துவம் பெறும் பரம்பரையலகுப் பொறியியலின் (**Genetic engineering**) வியத்தகு முன்னேற்றங்களில் ஒன்று DNA ரேகைப் பதிவு ஆகும். ஒருவருடைய DNA மாதிரியைப் போன்று இன்னுமொருவருக்கு இருக்கக்கூடிய சந்தர்ப்பம் 3x10[11] ஆகும். ஆனால் உலகின் சனத்தொகை 5X10[9] ஆகும். எனவே உலகில் ஒருவருடைய DNA ரேகைப் பதிவு- போல் இன்னொருவருக்கு இருக்கமுடியாது. ஆகையால் சோதனைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட மாதிரியின் DNA ரேகைப்பதிவு சந்தேகநபர்களில் ஒருவருடைய DNA ரேகைப்பதிவுடன் பொருந்துமாயின் அவர்தான் குற்றவாளி என்பது நூற்றுக்கு நூறு வீதம் நிருபணமாகும்.

ஆகவே கைரேகைப்பதிவு போன்று DNA ரேகைப்பதிவும் ஆளடையாளம், சந்ததித்தொடர் ஆகியவை பற்றிய உறுதிப்பாடுகளுக்கு உதவும் என்பது திண்ணம்.

**DNA** இன் அடையாளப்படுத்தல், முறையான - தந்தையை தீர்மானிக்கவும் கடுங்குற்றங்களைக் கண்டுபிடிக்கவும் பயன்பட்டு வருகின்றது. ஒரு பெண்ணின் குழந்தைக்குத் தந்தை யார் என்ற கேள்வி எழுந்தபோது அவளின் சகோதரனும் தந்தையும் சந்தேகத்திற்குள்ளாக்கப்பட்டார்கள். குருதிக் கூட்டங்களை ஆராய்ந்தபோது இருவரும் ஒரே குருதிக் கூட்டத்தைக் கொண்டிருந்தனர். ஆனால் DNA ரேகைப் பதிவு மேற்கொள்ளப்பட்ட போது குழந்தையிலும் தாயிலும், அவள் சகோதரனிலும் பொதுவாகச் சில மரபணுப்பட்டைகள் காணப்பட்டன. ஆனால் குழந்தை கொண்டிருந்த மூன்று தெளிவான மரபணுப்பட்டைகள் தாயிலோ அவள் சகோதரனிலோ இல்லாமல், தந்தையில் மட்டுமே காணப்பட்டன. இதிலிருந்து குழந்தையின் தந்தை, தாயின் தந்தையெனத் தெளிவாகக் கண்டறியப்பட்டது. இது வெளிநாடு ஒன்றில் நடைபெற்ற உண்மைச் சம்பவம் என்பதும், DNA ரேகைப் பதிவு முறை இல்லாவிட்டால் இந்தச் சிக்கல் தீர்க்கப்படாமலே இருந்திருக்கும் என்பதும் குறிப்பிடத்தக்கவையாகும்.


திருமணமான வெள்ளையினச் சோடிகள் அண்மையிலேயே DNA ரேகைப்பதிவைப் பற்றிக் கேள்விப்பட்டனர். இதனால் தமது 12 வயதுக்குரிய நீற மகளுக்கான உண்மைத் தந்தையை ஆராய்வதில் அவர்கள் ஈடுபட்டனர். ஆறு வருடங்களுக்கு முன்னர் குருதிக்கூட்ட ஆய்வினை மேற்கொண்டபோது, சிறுமியின் குருதிக் கூட்டம் தாயுடன் ஒற்றுமைப்பட்ட போதும், தந்தையிலிருந்து வேறுபட்டதாகக் காணப்பட்டது. இதனால் குடும்பத்தில் பிளவும், பிரச்சினையும் ஏற்பட்டன. DNA ரேகைப் பதிவு அதிசயிக்கத்தக்க முடிவைத் தந்தது. அச்சிறுமியின் வெள்ளையினப் பெற்றோர் உண்மையில் அக்குழந்தையின் பெற்றோர் அல்லர் என்பது தான் அந்தமுடிவு. உண்மை என்னவெனில் அச்சிறுமி வைத்தியசாலையில் பிரசவத்தின் போது மாற்றப்பட்டு விட்டாள் என்பதுதான்.

பாலியல் வன்முறைக் குற்றச்சாட்டுகளுக்கு DNA ரேகைப்பதிவு எவ்வளவு உதவுகின்றது என்பதற்கு அமெரிக்க ஜனாதிபதி கிளிண்ரன் - மோனிக்கா விவகாரம் மிகச்சிறந்த உதாரணமாகும்.

இரண்டு இளம் பெண்கள் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்டுக் கொலை செய்யப்பட்டு விட்டார்கள். றொட்னி பக்லாண்ட் என்ற 17 வயது இளைஞன் குற்றஞ்சாட்டப்பட்டான். பொலீஸார் 13வயதுக்கும் 30வயதுக்கும் இடைப்பட்ட 5000 இளைஞர்களிடம் இருந்து குருதி மாதிரிகளைச் சேகரித்தனர். DNA ரேகைப் பதிவு ஒப்பீடு மேற்கொள்ளப்பட்டது. பிர்ச் போர்க் என்பவனது பிறப்புரிமைப் பொருள் இறந்த உடல்களிலிருந்து பெறப்பட்ட விந்துப் பாயத்துடன் ஒத்துக் காணப்பட்டதனால் குற்றமற்ற 17 வயதுச் சிறுவன் விடுவிக்கப்பட்டான்.

இன்னும் பல சுவையான சம்பவங்கள் DNA ரேகைப்பதிவுடன் தொடர்புபட்டுள்ளன.

பொலிஸார் ஒருசமயம் சார்ள்ஸ் கிபெட்டேசன் என்ற 39வயது மனிதனைப் பின்தொடர்ந்து வந்தனர். 15கொள்ளைச் சம்பவங்களுக்காகவும் இரண்டு பாலியல் குற்றங்களுக்காகவும் அவன் குற்றஞ்சாட்டப்பட்டிருந்தான். எனினும் குற்றத்தை நிருபிக்காமல் அவனை கைதுசெய்ய முடியவில்லை. ஒரு முறை அவன் மோட்டார் சைக்கிளில் சென்றபோது பொலீஸார் பின்தொடர்ந்தனர். வீதிச்சமிக்ஞை விளக்கின் முன் நின்றபோது அவன் முகம் துடைத்து எறிந்த கடதாசியைப் பொலீஸார் கைப்பற்றினர். அதிலிருந்து அவனது DNA பிரித்தெடுக்கப்பட்டு ஆய்வு சாலையில் ஆராயப்பட்டது. அவனது DNA பாலியல் வன்முறைச் சம்பவத்தில் கிடைக்கப்பெற்ற விந்துப்பாயத்துடன் ஒத்திருந்தது. சில நாள்களில் அவன் கைது செய்யப்பட்டான்.




**கலத்தின் அமைப்பு**

தற்காலத்தில் சட்ட மருத்துவ மாதிரிகளில் ஆண், பெண்ணினைத் தீர்மானிப்பதற்கும் இந்நிறமூர்த்த ஆராய்ச்சிகள் உதவி புரிகின்றன.

வம்சவழி ஆராய்ச்சி முறைகளுக்கும் DNAரேகைப்பதிவு உதவி புரிகின்றது.

முன்னரே குறிப்பிட்டதுபோன்று, கரு DNA போன்றல்லாது இழைமணி DNA தாயிலிருந்து மட்டுமே கடத்தப்படுவதனால், மாறல்களுக்கும்பெரும்பாலும்உட்படுவதில்லை. எனவே நியாயாதிக்க ரீதியாக எல்லா மனித இழைமணி DNAகளும், ஒரு பொதுவான மூதாதையரைக் கொண்டிருக்கவேண்டும். இவ்வாறு 100மைல் சுற்றுவட்டாரத்திலுள்ள ஒவ்வொருவராகத் தொடர்ந்து ஆராய்ந்தபோது, ஆதியான மனித இழைமணி DNA ஆபிரிக்காக் கண்டத்தில் இருந்திருப்பதற்கான சான்றுகள் கிடைக் கப்பெற்றன. இதுவே நவீன மனிதனின் உருவாக்கத்திற்கான இடம் எனவும் அறியப்பட்டது.

இவைதவிர மாபெரும் அழிவுகளில் சிதைந்து போன உடற்பாகங்களை ஒன்றாக்குவதற்கும் DNA தொழில்நுட்பம் பயன்படுகின்றது. 1996 இல் ஏற்பட்ட "ஸ்பிறஸ் பேர்கன்" விமான விபத்தில் பலியானோரின் உடற்சிதைவுகள் 9 நாள்களின் பின்னரே கண்டுபிடிக்கப்பட்டன. ஆனால் DNA அடிப்படையில் பிரித்தறியப்பட்ட உடற்பாகங்கள் அவரவரின் உடல்களுடன் சேர்க்கப்பட்ட பின்னரே மரியாதைகளுடன் அடக்கம் செய்யப்பட்டன.

மனித என்பு எச்சங்கள் வியட்நாம் யுத்தத்திலும், றுவாண்டாவிலும், வேறு யுத்தங்களிலும் ஏன் நமது நாட்டில் செம்மணிப் புதைகுழி விவகாரத்திலும் கூட இழைமணி DNA மாதிரிகளைக்கொண்டு குடும்பத்தாருக்கு அடையாளம் காட்டப்படுகின்றன.

இவ்வளவு நன்மைகளைத் தன்னகத்தே கொண்டு உலகின் குற்றங்களைக் குறைத்து, நியாயத்தை நிலைநாட்டும் DNA ரேகைப் பதிவு முறை யாழ்ப்பாணத்தில் நடைமுறையில் இல்லை என்பது கசப்பான உண்மையாகும். சிலரின் அரு முயற்சியினால் **CT Scan** போன்ற அதிநவீன இயந்திரங்கள் யாழ். போதனா வைத்தியசாலைக்குக் கிடைத்துள்ளது போன்று இந்த DNA ரேகைப்பதிவு முறையும் வெகுவிரைவில் நமது மண்ணில் நடைமுறைக்கு வரவேண்டுமென்பதே மருத்துவத்துறை சார்ந்த அனைவரின் விருப்பமாகும். ☆

## டி.என்.ஏ ரேகைப் பதிவு என்றால் என்ன?

இனி, DNA ரேகைப் பதிவு என்றால் என்னவென்று பார்ப்போம். நிறமூர்த்தத்திலுள்ள DNA இழையின் ஒரு பகுதியைக் காரங்களின் ஒழுங்கமைப்பில் ஆராய்தலே DNA ரேகைப்பதிவு எனப்படுகின்றது.

**Deoxyribo Nucleic Acid** என்பதன் சுருக்கமே DNA ஆகும். DNA ஆனது **Deoxyribose**எனும் வெல்லக்கூட்டம், பொசுபேற்றுக் கூட்டம் மற்றும் காரங்களால் (**Adenine, Guanine, Cytosine and Thymine**) ஆக்கப்பட்டது.

*ஆங்கில மூலம்:*
பேராசிரியர்
**வசந்தி அரசரட்ணம்**
மருத்துவ பீடாதிபதி

*தமிழில்:* **க.செந்தூரன்**
3ஆம் வருடம்,
யாழ்.மருத்துவபீடம.

ஒவ்வொரு மனிதனும் பல மில்லியன் கலங்களினால் (**Cells**) ஆக்கப்பட்டுள்ளான். இக் கலங்களினுள் பல கலப்புன்னங்கங்கள் (**Organells**) காணப்படுகின்றன. இவற்றுள் கரு இழைமணி என்பவற்றினுள் DNA உண்டு. கருவினுள் காணப்படும் DNA ஆனது மிகவும் இறுக்கமாகச் சுற்றப்பட்டு (**Super Coiled**) நிறமூர்த்தங்கள் (**Chromosomes**) எனும் அமைப்பாகக் காணப்படுகின்றன. ஒவ்வொரு மனிதக் கலத்தின் கருவினுள்ளும் 23 சோடி நிறமூர்த்தங்கள் காணப்படுகின்றன. இந்நிற மூர்த்தங்கள் எம்மில் ஒவ்வொருவருக்குமுரிய பரம்பரை இயல்புகளைக் கொடுக்கும் பரம்பரை அலகுகளைக் (**Genes**, நிறமூர்த்தத்தின் 30வீதம்) கொண்டிருக்கின்றன. எஞ்சிய 70வீதமான நிறமூர்த்தத்தில்தான் DNA ரேகைப் பதிவுக்குத் தேவையான சிறிய சற்றலைட் (**Mini Satellite**), நுண்ணிய சற்றலைட் (**Micro Satellite**) DNAகள் காணப்படுகின்றன.

**Mini Satellite DNA** ஆனது 1-20 கிலோ காரங்களை (**Kb**)க் கொண்ட மீளத்தோன்றும் கூட்டங்களாக நிறமூர்த்த மையப்பாகத்துப் பகுதியில் காணப்படும். **Micro Satellite** ஆனது மீளத்தோன்றும் கூட்டங்களாக கொண்டிருப்பினும் இங்கு காணப்படும் மீளத்தோன்றும் காரங்களின் அளவு **4bp** ஆகும். இங்கு சிறிய சற்றலைட், நுண்ணிய சற்றலைட் DNAகளில் உள்ள காரங்களின் ஒழுங்கமைப்பு பொதுவாக எல்லோருக்கும் ஒன்றாகவே காணப்படுகின்றது. ஆனால் இவை மீளத்தோன்றும் அளவுதான் வேறுபடும். உதாரணமாக ஒருவருக்கு 20 தடவைகள் மீளத் தோன்றினால் வேறு ஒருவருக்கு 15 தடவைகள் மீளத் தோன்றும்.


பரம்பரை அலகுகள் போன்று சற்றலைட் DNA உம் ஒவ்வொரு மனிதனுக்கும் அவனுடைய தாயிலிருந்தும் தந்தையிலிருந்தும் பெறப்படுகின்றன. இவ்வாறு நிற மூர்த்தங்கள் பெற்றோரில் இருந்து பெறப்படும் போது அங்கு குறுக்குப் பரிமாற்றம் (**Cross Over**) நடைபெறுவதனால், இரண்டு சகோதரர்களுக்கிடையே அவர்களில் காணப்படும் நிறமூர்த்தத்தொகுதி வேறுபட்டு அமைகின்றது. அதாவது பரம்பரை அலகுகள் சற்றலைட் DNAகள் மாறுபடும்.ஆனால் அவற்றின் ஒரு பகுதி தாயுடனும் இன்னொரு பகுதி தந்தையுடனும் ஒத்தவையாக நிச்சயம் இருக்கும். எனவே DNA ரேகைப் பதிவானது பின்வரும் இரண்டு முக்கிய அடிப்படையிலேயே இடம்பெறுகின்றது.

1. ஒவ்வொரு தனிநபருக்கும் இடையே சிறிய மற்றும் நுண்ணிய சற்றலைட் DNA இன் மீளத்தோன்றும் ஒழுங்கமைப்பின் எண்ணிக்கை மாறுபடும்.

2. பெற்றோருக்கும் பிள்ளைகளுக்குமிடையே சிறிய மற்றும் நுண்ணிய சற்றலைட் DNAகளில் ஒற்றுமை உண்டு.

மனித பரம்பரையலகுத் தொகுதியின் மிகமுக்கியமான தன்மை அதன் பல்வகைத் தன்மையாகும். அதாவது எந்த இரண்டு மனிதர்களும் வேறுபட்ட பரம்பரையலகுத் தொகுதிகளையே கொண்டிருப்பர்.

DNA ரேகைப் பதிவிற்கு உதவும் DNA, இழைமணியிலும் காணப்படுகின்றது. ஒரு கலத்தில் இழைமணியிலுள்ள DNAஆனது அக்கலத்தின் கருவிலுள்ள DNAஐக் காட்டிலும் பல்வேறுவகைகளில் வேறுபட்டதாகக் காணப்படுகின்றது. மனித இழைமணி DNA வட்டவடிவானதாகவும் கரு DNAஐ விடச் சிறியதாகவும் காணப்படுகின்றது. இவை தவிர இன்னொரு முக்கிய வேற்றுமை என்னவென்றால் இழைமணி DNA பெரும்பாலும் அல்லது முற்று முழுதாக முட்டையில் இருந்தே சந்ததிக்கு சந்ததி கடத்தப்படுகையில் கரு DNA முட்டையிலிருந்தும் விந்திலிருந்தும் அதாவது தாய் தந்தை இருவரிலிருந்தும் கூட்டாகக் கடத்தப்படுகின்றது. இதனால் கரு DNA சந்ததிக்குச் சந்ததி மாறல்களை அடைகின்ற போதிலும் இழைமணி DNA



DNA ரேகைப் பதிவுக்கான கருவி

(7ஆம் பக்கம் பார்க்க)

# 'ராகிங்' கொடூரம் குறித்து மக்களின் மனப் பகிர்வுகள்

# சமூகச் சீர்கேடுகளை ஒழிக்க எழுமின்! விழிமின்!! உழைமின்!!!

இன்று யாழ். குடாநாட்டில் நடைபெற்று வரும் மதமாற்றம், பாலியல் வல்லுறவு, கொலை, கொள்ளை, மிருகபலி, மதுபாவனை போன்ற சமூக கலாசார சீர்கேடுகளுக்கெல்லாம் சிகரம் வைத்த பெருமையோடு 'ராகிங்' அரக்கன் உலாவருகின்றான்.

பல்கலைக்கழக 'ராகிங்குக்கு' சாவு மணி அடிக்க முன்வந்த மாணவர்களையும் உதயன் பத்திரிகையையும் தவிர வேறு எவரும் இதுவிடயத்தில் ஆக்கபூர்வமான நடவடிக்கையை எடுத்ததாக (குறிப்பாக பல்கலை நிர்வாகம்) தெரியவில்லை.

பத்திரிகைகளில் எழுதுவதனாலும் அநியாயம் நடக்கின்றது என்று நாம் தனித்தனியே கொதித்து எழுதுவதனாலும் 'ராகிங்' அரக்கனை ஒழிக்க முடியாது. இவனை ஒழிக்க ஒரே வழிதான் உண்டு. அதாவது அரேபிய நாடுகளில் வழங்கப்பட்டு வந்த தண்டனை போன்று பொது மக்கள் எல்லோரும் திரண்டு பொல்லுகளாலும், கல்லுகளாலும் இத்தகைய அரக்கர்களை சந்திகளில் வைத்து தண்டிப்பதுதான் ஒரேவழி. இதற்கு எத்தனைபேர் முன்வருவார்கள்? அதைவிடுத்து சகாராப் பாலைவனத்தில் ஒட்டகம் கத்தியது போல் ஆண்டாண்டு காலமாக ராகிங், ராகிங், ராகிங் என்று எழுதுவது கொதிப்பது எதுவும் பயன்படாது என்பது எனது தனிக் கருத்து.

இருப்பினும் பலரிடம் இது தொடர்பாக கதைத்தவிடத்து இச் சமூகச் சீரழிவை அழித்தொழிக்க சமூகத்தின் பலதரப்பட்டவர்களும் ஒன்றிணைய வேண்டும் என்றும் அவர்களுக்கு சில முக்கிய கடமைகள் உண்டு என்றும் கூறி அவற்றை விரிவாக ஆராய்ந்தார்கள். அவர்களின் கருத்தையும் தங்கள் முன் வைக்கின்றேன்.

## பல்கலைக்கழக சமூகத்தின் கடமை

### நிர்வாகத்தின் கடமை

'ராகிங்' சம்பந்தமான பிரச்சினைகள் வரும்போது மட்டும் கலந்துரையாடல், ஒன்றுகூடல் என்று கூடி சட்டப் புத்தகங்களை தூசிதட்டி அற்பத்தனமான தண்டனைகளான உதவிப்பணம் நிறுத்துதல், ஏழு தினம் மட்டும் வெளியேற்றுதல் என்பவற்றை விடுத்து ஆக்கபூர்வமான நடவடிக்கையை எடுக்க வேண்டும். உதாரணமாக தற்போது பல்கலைக் கழக வளாகத்திற்குள் (மைதானத்தில்) வைத்து தாக்கப்பட்ட மாணவரான ஷாஜகானை, வீடு தேடிச் சென்று தாக்கப்பட்ட கலைப்பீட மாணவனை தாக்கிய மிருகத்தனமுடையோரை பல்கலைக்கழகத்தில் இருந்து நிரந்தரமாக வெளியேற்ற வேண்டும். அதைவிடுத்து அவர்களுக்கு *பரீட்சை* அவர்களுக்கு ***Party*** என்று கூறி அவர்களைத் தப்பவைப்பது அவர்களை அத்தகைய தவறான வழியில் ஏற்றி வைக்கும் ஏணியாக அமையும். இப்படியான கொடூரம் நிறைந்தவர்கள் பரீட்சை எழுதி என்ன செய்யப் போகிறார்கள்? பட்டம் பெற்று என்ன செய்யப்போகின்றார்கள்? இப்படியான சமுதாய சாக்கடைகள் பட்டம் பெற்று சமூகத்திற்குள் நுழைந்து சமூகத்தை முன்னெடுத்துச் சென்றால் எமது எதிர்கால சமூகத்தின் நிலை எப்படி அமையும் என்று சிந்தித்துப் பாருங்கள். மேற்கூறிய குண்டர்களை பல்கலைக்கழக நிர்வாகம் வெளியேற்றினால் அதுவே பல்கலைக்கழகம் எமது சமூகத்திற்கு ஆற்றிய அளப்பரிய சேவையாக அமையும். நிர்வாகம் இவ்விடயம் குறித்து எடுக்கும் முடிவிலேயே யாழ்ப்பாணத்தில் ராகிங் நிறுத்தப்படுவதும் தொடர்வதும் தங்கியுள்ளது.

### புதுமுக மாணவர்களின் கடமை

புதுமுக மாணவர்கள் எல்லோரும் ஒன்று திரண்டு ராகிங்கை முற்றாக எதிர்க்க வேண்டும். மொறட்டுவ பல்கலைக்கழகத்தில் உள்ளது போல் **Anti Ragging Group** உருவாக்க வேண்டும். இதற்கு தற்துணிவு இல்லாத மாணவர்கள் "யாம் பெற்ற துன்பம் பெறுக இவ்வையகம்" என்று புது மொழியாடாது அடுத்த வருட - புதிய - மாணவர்களை இன்முகத்துடன் வரவேற்க வேண்டும்.

இவற்றை விட புதுமுக மாணவிகளின் அங்க அளவுகளை எடுப்பதற்காகவே ராகிங் வாங்கும் பகுதி ஒன்று உண்டு. இவர்களுக்கு உரிய தண்டனை வழங்கப்படுவது அவசியம்.

## சமூகத்தின் கடமை

### பெற்றார்

ராகிங் செய்பவர்களுக்கும் ராகிங் பெறுபவர்களுக்கும் பெற்றார் உள்ளனர். இவர்கள் பிள்ளைகளை கல்வி கற்பித்து பல்கலைக்கழகம் அனுப்பினால் தமது கடமை முடிந்ததாகக் கருதாமல் அவர்களின் நல் ஒழுக்கத்திலும் அக்கறை செலுத்த வேண்டும். பெற்றார் எனின் பிள்ளைகளைப் பெற்றவர் என்பது அர்த்தம் அல்ல. மாறாக பிள்ளைகளின் பெருமைகளைப் பெற்றவர்களே பெற்றார். அவ்வாறாயின் அடிதடிக் குண்டர்களின் பெற்றார் எதனைப் பெற்றனர் என்று தாமே ஊகித்துக் கொள்ள வேண்டும். பெற்றோரின் கடமையாதெனில் தமது பிள்ளைகளின் நடவடிக்கைகளை அவதானித்து, விசாரித்து ராகிங் செய்யும் பிள்ளைகளையும், ராகிங் பெறும் பிள்ளைகளையும் வீட்டைவிட்டு வெளியேற்ற வேண்டும். ராகிங்கிற்கு பயந்த பிள்ளைகளிற்கு "நீ பயப்பட வேண்டியது மனச்சாட்சிக்கு மட்டுமே; வேறு எதற்குமல்ல" என்று அறிவு புகட்ட வேண்டும்.

### சமயவாதிகள்

சமயம் என்றால் என்ன? சகல சமயங்களின் நோக்கமென்ன? குறைந்த பட்சம் மனிதனை மனிதனாக வாழ வைப்பது. முடிந்தால் மனிதனை தெய்வத்தன்மையை உணரச் செய்வது என்பது இரண்டு மலை உச்சிகளில் கயிற்றைக் கட்டி அவற்றில் நடப்பதற்கு ஒப்பாகும். அதற்கென்று இங்கு வந்தவர்களாலேயே அது முடியும். மற்றவர்கள் மனிதனாக வாழ வேண்டும். இந்த யுகத்தில் பெற்ற பிள்ளையின் கற்பு ராகிங்கினால் பறிபோகின்றபோது (கற்பு என்பது ஆண்களுக்கும் உண்டு), பல யுகங்களுக்கு முன்னர் வாழ்ந்ததாகக் கருதப்படும் கண்ணகி, சீதை ஆகியோர்களின் கற்பைப் பற்றி இப்போதும் விவாதம் செய்து தமது நேரத்தையும் மற்றவர்களின் காலத்தையும் வீணாக்குவதை விடுத்து, கலாசார சீர்கேடுகளை தடுக்கும் வகையிலும் மனிதனை மனிதனாக வாழ வைக்கும் வகையிலும் அவர்களது பிரசங்கங்கள் அமைய வேண்டும்.

## பொது அமைப்புக்கள், பொதுமக்கள்

பொதுசன அமைப்புக்கள் யாவும் ஒன்றிணைந்து ராகிங்குக்கு எதிர்ப்பு அமைப்பு ஒன்றினை உருவாக்கி தத்தம் பிரதேசங்களில் தம்மால் முடிந்த முறையில் அவற்றினை தடுக்க வேண்டும். இவ்வமைப்பில் வர்த்தகர்கள், சாதாரண பொதுமக்கள், நலன்விரும்பிகள், முற்போக்குவாதிகள், ஆசிரியர்கள், மாணவர்கள்.... எனப் பலதரப்பட்டவர்களும் அங்கத்தவர்களாக இருக்க வேண்டும்.

மேலும் முக்கிய விடயம் ராகிங் புரியும் மாணவர்களுக்கு பொது மக்கள் தங்குமிட வசதி செய்யக் கூடாது. அவர்களை உடனடியாக வெளியேற்ற வேண்டும். அவர்களுக்கு இடம்கொடுப்பது பாம்புக்கு பால் வார்ப்பதற்கு ஒப்பாகும். அவர்களை ஆதரித்து தங்குமிடம் கொடுப்பவர்கள் ராகிங்குக்கு உடந்தையானவர்களாக சமூகத்தால் கருதப்படவேண்டும்.

மேற்கூறிய ஒவ்வொருவரும் தமது கடமையை உணர்ந்து செயற்படுவார்களேயாயின் ராகிங் அரக்கர்களை இம்மண்ணில் இருந்து களை பிடுங்கலாம் என்பது திண்ணம்.

எழுமின்! விழிமின்!! ராகிங் அரக்கர்களை அழிக்கும் வரை அயராது உழைமின்!!

- கலியுகவரதன்.

## ஆளுநருடன் நாளை சந்திப்பு

யாழ்ப்பாணம்,ஒக.17

யாழ். செயலகத்தில் நாளை வெள்ளி இடம்பெறவுள்ள மக்கள் குறைகேள் செயலமர்வின் போது வடக்கு- கிழக்கு மாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் அசோகா ஜெயவர்த்தனாவை ஆரம்பக்கல்வி நெறி ஆசிரியர் தெரிவில் பாதிக்கப்பட்டோர் சங்கப் பிரதிநிதிகள் சந்திக்கவிருக்கின்றனர்.

இந்தச் சந்திப்பு இன்று இடம் பெறவிருந்த போதும் ஆளுநர் வருகை தாமதமானதால் நாளை இந்தச் சந்திப்பு இடம்பெறவிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது.

இந்தச் சந்திப்பில் கலந்து கொள்ள வசதியாக சங்கத்தில் பதிவு செய்த அனைவரையும் நாளை வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு ஆரியகுளம் சந்தியில் உள்ள புதிய உயர் கல்லூரியில் கூடுமாறு கேட்கப்பட்டுள்ளது.(க-3)

## ராணுவத்திலிருந்து தப்பிய 33 பேர் கைது

கொழும்பு,ஒக.17

தப்பிய ஓடிய படையினரைக் கைது செய்வதற்காக ருவான் வெலப் பொலீஸ் பிரிவில் மேற் கொள்ளப்பட்ட பாரிய தேடுதலின் போது 33 படையினர் கைது செய்யப்பட்டனர் என்று பொலீஸார் தெரிவித்தனர்.

ருவான்வெலப் பொலீஸ் பிரிவில் தெரணியகல, கித்துல்கல, புளத்கொஹுச,எட்டியாந்தோட்டை ஆகிய கிராமங்களை உள்ளடக்கி நடத்தப்பட்ட இந்த தேடுதலின் போது கைதான 33 ராணுவத்தினரும் ருவான்வெல நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டனர்.

இவர்களை சிறைச்சாலை அதிகாரிகள் மூலம் ராணுவத் தலைமையத்திடம் ஒப்படைக்குபடி நீதிமன்றம் உத்தரவுபிறப்பித்தது. (க-3-186)

## விடைத்தாள்கள் அனுப்பி வைப்பு

கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையின் விடைத்தாள்கள் நேற்று முன்தினம் கொழும்புக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

இதேவேளை -

தற்பொழுது நடைபெற்று வருகின்ற ஜி.சி.ஈ(உயர்தரப்) பரீட்சையின் முதலாவது தொகுதி விடைத்தாள்களும் கடந்தவாரம் செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் கப்பலில் அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாக யாழ். கல்விவலயத்தின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (க-10)

## சமுர்த்தி செயலணி அமைப்பு

காரைநகர்,ஒக.17

சமுர்த்தி திட்டத்தை நடைமுறைப்படுத்தும் முகமாக ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் பிரிவில் கிராம உத்தியோகத்தர் பிரிவு ரீதியாக சமுர்த்தி செயலணி அமைக்கப்படவுள்ளது.

ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் பிரிவின் திட்டமிடல் பணிப்பாளர் இ.குமாரசாமிசர்மா தலைமையில் முதலாவது சமுர்த்தி செயலணி காரைநகர் மேற்கு கிராம உத்தியோகத்தர் பிரிவில் இன்று வியாழக்கிழமை அமைக்கப்படவுள்ளது.

இந்த நிகழ்வில் 18 வயதுக்கும் 35 வயதுக்கும் இடைப்பட்ட அனைவரையும் கலந்துகொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

(ஐ-73)

## ஒன்றுகூடல்

யாழ்ப்பாணம்,ஒக.17

நெடுந்தீவு றோமன் கத்தோலிக்க மகளிர் கல்லூரி உயர்தர வகுப்பு மாணவிகளின் ஒன்றுகூடல் வைபவம் அண்மையில் மாணவர் மன்றத் தலைவி செல்வி சாமிநாதன் சுவாசினி தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் நெடுந்தீவுப் பங்குத்தந்தை வணபிதா மொன்பேட் அடிகளார் பிரதம விருந்தினராகவும், கல்லூரி அதிபர் அருட் சகோதரி ஜெயசீலி றொட்றிக்கோ கௌரவ விருந்தினராகவும் கலந்து கொண்டனர்.

இதேவேளை மேற்படி கல்லூரியில் இருந்து தற்பொழுது நடைபெற்று வரும் ஜீ.சி.ஈ. உயர்தரப் பரீட்சைக்கு தோற்றும் மாணவிகளுக்கான அனுமதி அட்டைகள் விசேட வழிபாடுகள் நடத்தப்பட்ட பின்னர் வழங்கப்பட்டன. (இ-7)




கலாபூஷணம் நவாலியூர்

நா. செல்லத்துரையின்

"சின்னவனா பெரியவனா?"

சிந்துநடைக் கூத்து நூல்

அறிமுக விழா

**இடம்:** நவாலி வை.எம்.சீ.ஏ

**காலம்:** நாளை (2000-08-18) வெள்ளிக்கிழமை

**நேரம்:** பிற்பகல் 3.00 மணி (புதிய நேரம்)

**தலைமையுரை:** எஸ்.ஜெபநேசன் அவர்கள் *(பேராயர், தென்னிந்தியத் திருச்சபை)*

**வாழ்த்துரை:** கலாநிதி காரை செ.சுந்தரம்பிள்ளை அவர்கள்

**கருத்துரை:** கலாநிதி எஸ்.சிவலிங்கராஜா அவர்கள் *(தலைவர், தமிழ்த்துறை. யாழ்.பல்கலைக்கழகம்)*

திருமதி கோகிலா மகேந்திரன் அவர்கள் *(எழுத்தாளர்)*

பொ.அருந்தவநாதன் அவர்கள் *(விரிவுரையாளர், வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக்கல்லூரி)*

சிந்துநடைக் கூத்துக் கலைஞர்கள், இசைநாடகக் கலைஞர்கள், உரைநாடகக் கலைஞர்கள், நண்பர்கள், கலை ரசிக்கும் அன்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

நூற்பிரதி ஒன்றின் விலை ரூபா நூறு (100/=)

*விழா அமைப்பினர் முரசொலி ச.ச. நிலையம், தெற்கு நவாலியூர்.*

(77300)


# டி.என்.ஏ. ரேகை....

(6 ஆம் பக்கத் தொடர்ச்சி)

தாயின் தனித்துவத் தன்மையை, சந்ததிக்குச் சந்ததி கடத்தி வருகின்றது. எனவே இன்று மனிதனை இனங்காண்பதற்காக குருதி, விந்து, பாபம் என்பவற்றுடன், பல், மயிர்த் தண்டு, என்புத் துண்டங்கள் என்பவற்றில் இருந்து இழைமணி DNAக்கள் பிரித்தெடுக்கப்படுகின்றன. இந்த இழைமணி DNA ஆனது ஒரு கலத்தில் அதிகளவு எண்ணிக்கையான பிரதிகளைக் கொண்டிருப்பதனால் புராதன படிவங்களை இனங்காண்பதற்கும் அவை பெரிதும் உதவுகின்றன.

DNA ரேகைப் பதிவுத் தொழில் நுட்பமானது பல்வேறு படிகளின் ஊடாகச் செயற்படுத்தப்படுகின்றது.

1) மாதிரிகளைச் சேகரித்தல், DNAயைக் கலங்களில் இருந்து பிரித்தெடுத்தல், வரையறுக்கும் நொதியங்களை DNA மீது பிரயோகித்தல் (**Collection of Samples, isolation of DNA from Cells and restriction enzyme treatment**)

2) பலபகுதியச் சங்கிலித் தாக்கம் (**Polymerase chain reaction.**)

3) ஜெல்மின்னயனம் (**Gel electro phoresis**)

4) 'சொதேர்ன்' இன்ஒற்றி எடுத்தல் முறை (**Southern blotting**).

5) மாறுபட்டசேர்க்கையும் அடையாளம் காணலும் (**Hybridization and detection**).

மாதிரிகளைச் சேகரிக்கும்போது, கலங்களில் இருந்து போதுமான அளவில் சுத்தமானதாகவும், தரமானதாகவும் DNAஐப் பிரித்தெடுத்தல் முக்கிய தேவையாகும். கலங்கள் உடைக்கப்பட்டு, அதன் உள்ளடக்கங்களில் உட்கலப் புரதங்கள் அமைப்புழிவிற்கு உள்ளாக்கப்படுகின்றன. பின்னர், DNA போன்ற நியூகிளிக் அமிலங்கள் அவற்றின் அளவிற்கும் உருவத்துக்கும் ஏற்றாற்போல் தனிமைப் படுத்தப்படுகின்றன. பின்னர், பிரித்தெடுக்கப்பட்ட DNA உடைக்கும் நொதியத் தொழிற்பாட்டுக்கு உட்படுத்தப்பட்டுத் தேவையான சிறிய DNA அல்லது நுண்ணிய DNA பெற்றுக் கொள்ளப்படும். வரையறுக்கும் நொதியங்கள் (**Restriction endonucleases**) வேறுபட்ட நீளங்களில் DNAக்களை வெட்டித் துண்டாக்குகின்றன. வெவ்வேறு நொதியங்கள் ஒரே DNA இல் வேறுபட்ட சமிபாட்டுத் துண்டங்களைப் பெற்றுத் தருகின்றன.

மனித இருமடிய நிறமூர்த்தத் தொகுதி மூன்று பில்லியன் காரச் சோடிகளைச் சில 50,000 எழுந்தமானமான அல்லது கூட்டத் தொகுதிகளான DNAக்களில், 46 தனி நிறமூர்த்தங்களில் கொண்டிருக்கின்றன. எனவே தனிப்பட்ட நிறமூர்த்தங்களைப் பிரித்தெடுப்பதானது, வைக்கோல்பட்டறையில் ஊசி ஒன்றினைத் தேடுவது போன்றதாகும். இதற்காகவே பல்பகுதியச் சங்கிலித்தாக்கம் (**Polymerase Chain Reaction - PCR**) எனப்படும் உத்திகையாளப்படுகின்றது. PCR முறையானது எளிய, துரிதமான முறையாய் இருப்பதுடன், சில மணிநேரத்தில் குறித்த ஒழுங்கமைப்புப் பரம்பரை அலகின் பல மில்லியன் பிரதிகளைத் தயாரிக்கக் கூடியதாக உள்ளது. PCR முறை யானது ஒரு தனிக் கலத்திலோ, மயிர் புடைப்பிலோ அல்லது விந்திலோ உள்ள DNA இனைப் பெருக்கி, ஆராய உதவுவதனால், சட்ட மருத்துவத்துறையில் PCRஇன் பங்கு வியக்கத்தக்க ஒன்றாகும். PCR முறையைக் கண்டுபிடித்தவருக்கு நோபல் பரிசு வழங்கப்பட்டது என்பது குறிப்பிடத் தக்கதாகும்.

நியூகிளிக்கமிலங்கள் தமது கட்டமைப்பில் பொசுபேற்றுக் கூட்டங்களை கொண்டிருப்பதனால் தேறிய எதிரேற்றத்தைக் கொண்டுள்ளன. இதனால் ஒரு கார மூலகத்தால் வேறுபட்ட DNA துண்டினைக் கூட ஜெல்மின்னயனம் (**Gel electro-phoresis**) மூலம் வேறு பிரித்தறியக் கூடியதாகவுள்ளது.

இது தவிர 'சொதேர்ன்' இன் ஒற்றியெடுத்தல் முறை, மின்னயனம் மூலம் பிரிக்கப்பட்டு, ஒரு படையாகக் காணப்படும் DNA துண்டங்களைத் தனிப்பட்டவைகளாகக் காண்பிக்கின்றது. இது DNA ரேகைப் பதிவினை மேலும் இலகுவாக்கியுள்ளது. ☆

## சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

புதிய பழைய திரைப்படம் அடங்கிய 300 வீடியோ கசற் விற்பனைக்கு உண்டு. உடன் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி: திரு. M.A. அல்பிரட் இரத்தினபதி, பண்டத்தரிப்பு. (77339)

ஒரு வயது நிரம்பிய அல்சேசன் பெண் நாய் விற்பனைக்குண்டு. தொடர்பு: 446, இராமலிங்கம் வீதி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம். (77337)

Sony P6-120 MP3 வீடியோ கசற் ( 8 MP video 8 ) வீடியோ பல்ப் OSRAM (ஜேர்மனி), அவுஜா (30) யூனிற், ஸ்பீக்கர் செற் விற்பனைக்குண்டு. தொடர்பு: 154, கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம். (77324)

### திருத்துதல்

மூக்குக்கண்ணாடி ஒட்டுதல், சகல கமரா வகைகளும், எலக்ரோனிக பிளாஸ்கள், புகைப்படத்துறை சார்ந்த ஏனைய துணைக் கருவிகளும் திருத்திக் கொடுக்கப்படும். சு. நாராயணசாமி, 301, கஸ்தூரியார் வீதி, மேல்மாடி (கன்னாதிட்டி சந்தி அருகில்) வெளிப்புறப்படப் பிடிப்பும் ஏற்றுக் கொள்ளப்படும். (77228)

### மணமகள் தேவை

யாழ். இந்து கௌரவ உயர் குடும்பத்தைச் சேர்ந்த, 34 வயது நிரம்பிய, செவ்வாய் தோஷமற்ற, குறைந்த பாவம், அரசாங்க சேவையில் உயர் பதவி வகிக்கும் மணமகனுக்கு அழகு, நற்பண்பு நிறைந்த உயர்கல்வித் தகைமை கொண்ட 30 வயதுக்குட்பட்ட மணமகளை பெற்றோர் எதிர்பார்க்கின்றனர். சகல விவரங்களும் உள்ளடங்கலாக உடனடித் தொடர்புக்கு விளம்பர இல. 1078, மே/பா உதயன், யாழ்ப்பாணம். (77323)

### SPOKEN ENGLISH

சுலபமான முறையில் ஆங்கிலம் பயில தபால் மூலமும். ஆசிரியர் ந. விக்னேஸ்வரன ஆச்சாரி, 426 (302), காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். நாகலிங்க சுவாமிகள் வீதி, சங்கானை. (77336)

### பொய்யாமொழி ஜோதிடம்

தடைப்படும் திருமணம் விரைவில் நடைபெற, பிரயாணத் தடை விலக ஆலோசனை வழங்கப்படும். சாதகத்துடன் வரவும். பலன் தவறினால் பணம் திரும்பப் பெறலாம். சனி, செவ்வாய் ஸ்ரீவீரமாகாளி அம்மன் கோயிலடியிலும், 140, பருத்தித்துறை வீதி, நல்லூரிலும், ஞாயிறு மல்லாகம் பழம் பிள்ளையார் கோயில் மடத்திலும் சந்திக்கலாம். (77334)

### தவறிவிட்டது

இல-25, மூத்த விநாயகர் வீதி, நல்லூரைச் சேர்ந்த திருநாவுக்கரசு அஜந்தன் என்பவரது விசேட அ.அ.(0902035392), பாடசாலை அ.அ. என்பன கொக்குவிலுக்கும் யாழ்ப்பாணத்துக்கும் இடையில் (13-08-2000) ஞாயிற்றுக்கிழமை அன்று தவறி விட்டன. கண்டெடுத்தவர்கள தயவுசெய்து கணேசலிங்கம், கொக்குவில் (கொக்குவில் சந்தைக்கு அருகில் உள்ள வீட்டில்) எனும் முகவரியில் ஒப்படைத்து உதவவும். (77348)

இத்தாவில், பளை என்னும் முகவரியைச் சேர்ந்த பஸ்ரியாம் பிள்ளை ஜோர்ஜ் என்பவரது விசேட அ. அட்டை (091504322) 13-08-2000 அன்று தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து அருட்திரு அன்ரனிப்பிள்ளை, சென். மேரிஸ் தேவாலயம், உயரப்புலம், ஆனைக்கோட்டை என்னும் முகவரியில் ஒப்படைத்துதவவும். (77352)

### திருமணசேவை

தனியார் கம்பனியில் பணிபுரியும் மணமகனுக்கு அழகிய மணப்பெண் தேவை. வேறு தொழில்களிலும் மணமக்கள் உண்டு. விவரங்களுக்கு: இயக்குநர், விநாயகர் திருமண சேவை, 63, கல்லூரி வீதி, நீராவியடி, யாழ்ப்பாணம் எனும் முகவரியுடன் தொடர்பு கொள்ளவும். (77353)

---

## வாழ்த்துகின்றோம்

யாழ். பல்கலைக்கழக மருத்துவபீட உயிர் இரசாயனவியல் துறைத்தலைவரும், பேராசிரியருமாகிய

**செல்வி வசந்தி அரசரட்ணம்** அவர்கள்

*மருத்துவ பீடாதிபதியாகப் பதவியேற்று, யாழ். பல்கலைக்கழகத்தின் முதற் பெண் பீடாதிபதி என்ற பெருமைக்குரியவராகியதையிட்டு அவரை மனமார வாழ்த்துகின்றோம்.*

உடற்கூற்றியல் துறையினர் (Anatomy)

(77346) மருத்துவபீடம், யாழ். பல்கலைக்கழகம்.

---

## இயேசு கிறிஸ்து சீக்கிரம் வருகிறார்!

*சுகமளிக்கும் கூட்டங்கள்*

*ஆழமான வேதப்படிப்புக்கள்*

"நாள்கள் பொல்லாதவைகளானதால் காலத்தைப் பிரயோஜனப்படுத்திக் கொள்ளுங்கள்" (எபேசியர்:-5:16)

* இடம்:- **பெத்தேல்**
இல. 104, இராசாவின் தோட்டம் வீதி, யாழ்ப்பாணம்.

காலம்:- ஆவணி 18, 19, 20 ஆம் திகதிகளில்

நேரம்:- மாலை 3.30 மணிக்கு *சுகமளிக்கும் கூட்டம்*
காலை 9.30 மணி *வேதப்படிப்பு*

(உலகத்தின் கடைசி நாள்களில் சம்பவிப்பவைகளைக் குறித்தும் வேதப்பாடங்கள்)

பிரவேசம்:- இலவசம்

*அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.* (77313)

---

## ஆங்கில பிரத்தியேக வகுப்பு

இருபது வருட அனுபவம் மிக்க அரச சேவை ஆங்கில ஆசிரியரினால் வீட்டுக்குச் சென்று பிரத்தியேக வகுப்புக்களும், பரீட்சை மைய வகுப்புக்களும் நடத்தப்படும்.

கட்டணம் மணித்தியாலம் ரூபா 100

*தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:*

**193/4, பிறவுண் றோட், யாழ்ப்பாணம்.**

(மணி கல்வி நிலையத்துக்கு அருகில்) (77357)

---

## கலாபூஷணம் - 2000 பாராட்டுவிழா
## நன்றி நவில்கின்றோம்

*இணுவில் காரைக்கால் சிவன் தேவஸ்தானத்தில்* 15-08-2000 அன்று 'கலாபூஷணம்' விருதுபெற்ற எனக்கு அளிக்கப்பட்ட பாராட்டு விழாவில் பங்குபற்றி ஆசியுரை வழங்கியும், பாராட்டுரைகள் வழங்கியும் பொன்னாடை போர்த்தியும், மாலை சூட்டியும், பொற்பதக்கம் அணிந்தும் கௌரவமளித்த சகல பெருமக்களுக்கும், விழாவை ஏற்பாடு செய்த சிவன் தேவஸ்தானம், திருக்கல்யாண உற்சவ உபயகாரர் மற்றும் எனது அன்பிற்குரிய ஊர் மக்கள் அனைவருக்கும் எனது மனமார்ந்த நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

கலாபூஷணம் கே. ஆர். சுந்தரமூர்த்தி

(77358) குடும்பத்தவர்களும்.

---

## அறிவித்தல்

ஓய்வூதியம் பெறுவோர் சேமலாப நலன்புரி ஐக்கிய சங்கம பண்டத்தரிப்பு

(Regd No J/1758 of 1-4-86)

சங்க பொதுச்சபைக் கூட்டம் எதிர்வரும் 27-08-2000 ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு சங்கக் காரியாலய மண்டபத்தில் (பண்டத்தரிப்பு தபாற்கந்தோருக்கு அருகில்) நடைபெறும்.

இச்சங்க அங்கத்தவர்களாய் சேர்ந்தவர்களும் சேர விரும்புவோர்களும் சமுகமளிக்கும்படி அன்புடன் அழைக்கப்படுகிறீர்கள்.

S. மாட்டின் A.V. துரையப்பா
தலைவர் (77345) செயலாளர்

---

உ
கணபதி துணை



பன்னாலை - தெல்லிப்பழை
**திருவருள்மிகு வரத்தலம் கற்பக விநாயகர் தேவஸ்தானம்**

மஹோற்சவ கால அபிஷேக விஞ்ஞாபனம்
விக்கிரம வருடம் - 2000

ஆரம்பம்: 18-08-2000 வெள்ளிக்கிழமை
நிறைவு: 29-08-2000 செவ்வாய்க்கிழமை
வைரவர் பொங்கல: 30-08-2000 புதன்கிழமை

மேற்படி தினங்களில் தினமும் காலை 10.30 மணி அளவில் அபிஷேகம் ஆரம்பமாகி 12.30 மணியளவில் நிறைவு பெறும்.

அடியார்கள் அனைவரும் வருக!
ஐங்கரன் அருளைப் பெறுக!

இ. சபாரத்தினக் குருக்கள்
ம. மகேந்திர சர்மா
(77305) ஆதீனகர்த்தாக்கள்

---

## 3 ஆம் ஆண்டு நினைவலைகள்

பிறப்பு 10 - 06 - 1937



மறைவு 20 - 08 - 1997

அமரர்

**சின்னத்தம்பி சின்னையா (இராசையா)**

(இளைப்பாறிய தபாலதிபர்)

(Post of Marine Radio Officer, Foreign Ship.)

அப்பா எங்கள் தெய்வமே!
பண்பால் உயர்ந்த திலகமே!
அன்பால் எமை அரவணைத்து
ஆளாக்கிய சிகரமே!
ஆண்டுகள் 3 கடந்தாலும்
ஆறாது உங்கள் நினைவுகள்!

உங்கள் ஆத்மா சாந்தி பெற
இறைவன் கழலடியில் வேண்டுகிறோம்.

- குடும்பத்தினர்.

*மீசாலை வடக்கு,*
*கொடிகாமம்,*
*வேம்பிராய்.* (77285)

---

ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும்
## ஆத்ம சாந்திப் பிரார்த்தனை அழைப்பும்
## நன்றி நவிலலும்

தோற்றம் 1926 - 07 - 26



அமரத்துவம் 2000 - 07 - 19

### திருமதி செல்லத்தம்பி புஷ்பராசம்

எங்கள் குடும்பத் தலைவியின் மறைவுச் செய்தி கேட்டு நேரில் வந்து அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும், இறுதிக்கிரியைகளில் கலந்து கொண்டவர்களுக்கும், மற்றும் பல வழிகளில் அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும், எமக்கு வேண்டிய உதவிகள் புரிந்தவர்களுக்கும் எங்கள் மனப்பூர்வமான நன்றியைத் தெரிவிப்பதுடன்

நாளை (18-08-2000) வெள்ளிக்கிழமை எமது தற்காலிக இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நிகழும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

(இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளவும்.)

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பிரிவால் துயருறும்:
**குடும்பத்தினர்**

தகவல்: சி. பாஸ்கரசிங்கம (மருமகன்)
செ. செல்வச்சிவநாயகி
(ஆசிரியர்,பலாலி ஆசிரியர் கலாசாலை.)

தற்காலிக முகவரி:
*போரூட் அலுவலகம் முன்பாக,*
*வடலியடைப்பு,*
*பண்டத்தரிப்பு.* (77306)

நிரந்தர முகவரி:
*'செல்வபதி'*
*மீனாட்சி அம்மன் வீதி,*
*சங்கத்தானை, சாவகச்சேரி.*

# மரண அறிவித்தல்கள்

## திருமதி புவனேஸ்வரி தம்பிஐயா
(ஆச்சி)

காரைநகர் தங்கோடையைப் பிறப்பிடமாகவும் கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி புவனேஸ்வரி தம்பிஐயா (ஆச்சி) கனடாவில் 15-08-2000 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற ஆறுமுகம் தம்பிஐயாவின் அன்பு மனைவியும் கனடாவில் வசிக்கின்ற பரமானந்தராசா, பவளராணி, நித்தியானந்தராசா, ஜீவானந்தராசா, பேபிராணி ஆகியோரின் அன்புத் தாயாரும் காலஞ்சென்ற சூராசி கதிரவேலு, முத்தம்மா தம்பதிகளின் அன்பு மகளும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் கனடாவில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
அ. பரமேஸ்வரி (சகோதரி)
20, முதலாம் ஒழுங்கை,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
(77360)

## பாலசுப்பிரமணியக் குருக்கள் கார்த்தியாயினி அம்மா

மட்டுவில் தெற்கு வேம்படி கந்தசாமி கோயில் பிரதம குருக்கள் காலஞ்சென்ற பாலசுப்பிரமணியக் குருக்களின் அன்பு மனைவி பா. கார்த்தியாயினி அம்மா நேற்று 16-08-2000 புதன்கிழமை மதியம் 1.00 மணியளவில் கொழும்பி காலமானார். அன்னாரின் இதிறுக்கிரிகைகள் நேற்று கொழும்பில் நடைபெற்றன.

பா. வேதாரண்ணியேஸ்வரசர்மா (மகன்)
தகவல்:-
அ. மறைக்காடர்
ஆவரங்கால்.
(77380)

## நீக்கிலாப்பிள்ளை பஸ்ரியாம்பிள்ளை
(முன்னாள் யூலியஸ் கடை உரிமையாளர்)

கரம்பன் கிழக்கைப் பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட நீக்கிலாப்பிள்ளை பஸ்தியாம்பிள்ளை நேற்று (16-8-2000) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற எலிசபேத்தின் (பொன்னு) அன்புக் கணவரும் காலஞ்சென்ற நீக்கிலாப்பிள்ளை அன்னம்மாவின் சிரேஷ்ட புதன்வனும் காலஞ்சென்றவர்களான மேரி யோசேப்பின், மரியாம்பிள்ளை மற்றும் கிறேஸ் (அமெரிக்கா), மனுவற்பிள்ளை (கனடா), காலஞ்சென்ற பீற்றர் ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்ற செபஸ்தியாம்பிள்ளையின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நல்லடக்கத்துக்காக இன்று (17-08-2000) வியாழக்கிழமை 3.30 (பி. நே.) மணியளவில் புனித மரியன்னை சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

தகவல்:
யோ. வலன்ரீனா (மருமகள்)
146, பாங்ஷல் வீதி,
யாழ்ப்பாணம்.
(77369)

## பொன்னையா சித்தானந்தம்

உரும்பிராயைச் சேர்ந்த பொன்னையா சித்தானந்தம் நேற்று முன்தினம் (15. 08. 2000) செவ்வாய்க்கிழமை ஆஸ்திரேலியாவின் பேர்த்தில் (Parth) காலமானார்.

இவர் வினோதினியின் அன்புக் கணவரும், திருமதி ஜெகநாதன் இந்திரோமா, பிரதாபன், திருமதி சிவகுமார், சுதர்மா ஆகியோரின் அன்புத் தந்தையும் சிறீநடராஜ், சிவனாந்தம், இரத்தினம் இராசலட்சுமி, அன்னலட்சுமி, மகாலட்சுமி ஆகியோரின் அன்புச் சகோதரனுமாவார்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
பொ. சிறீநடராஜ் (சகோதரர்)
55/1, பழம் வீதி,
கந்தர்மடம்,
யாழ்ப்பாணம்.

No. 2. Rose Bank Gardens,
Acexander Heights,
W. A. 6064,
Australiya.
T. P. No 08-93428754
(77344)

## திருமதி தெய்வேந்திரம் லீலாவதி

கரணவாய் தெற்கு காவில்வயலைச் சேர்ந்த திருமதி தெய்வேந்திரம் லீலாவதி 12-8-2000 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் தெய்வேந்திரத்தின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான கனகசபை - சுந்தரம் தம்பதிகளின் அன்பு மகளும், ரஜினா, ரமணி ரமீலா [சுவிஸ்] ரஜீனா, தாரணி (கொழும்பு), ரதீஸ், ராதிகா ஆகியோரின் அன்புத் தாயாரும் பாலசிங்கம் விஸ்வலிங்கம் (சுவிஸ்), கருணாகரன் (சுவிஸ்), பத்மநாதன் ஆகியோரின் அன்பு மாமியாரும் திரேகா, டிலக்ஷன், கஜலக்ஷி, கார்த்திக், ஆஷா, சுவிஸில் வசிப்பவர்களான தர்சனா, கஜானா, கஜவதனன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17-8-2000) வியாழக்கிழமை நண்பகல் 12 மணியளவில் அவாது இல்லத்தில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சு. பாலசிங்கம்
காவில் வயல்,
கரணவாய் தெற்கு,
நெல்லியடி.
(77347)

## சந்திப்பு

யாழ்ப்பாணம், ஒக. 17

வடக்கு - கிழக்கு மாகாண சபையின் பிரதம செயலாளர் ஜி. கிருஷ்ணமூர்த்தி யாழ். மாவட்டத்தில் கடமையாற்றும் அபிவிருத்திசார் உத்தியோகத்தர்களைச் சந்திக்கவுள்ளார்.

இச்சந்திப்பு இன்று காலை 10. 30 மணிக்கு யாழ். செயலகக் கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், சமூக சேவைகள் உத்தியோகத்தர்கள், சமூக அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், விவசாய உத்தியோகத்தர்கள், கால்நடை அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், காணி ஆணையாளர் திணைக்கள உத்தியோகத்தர், குடியேற்ற உத்தியோகத்பிர்கள், திட்ட உத்தியோகத்தர்கள், அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் போன்றோரை இதில் தவறாது கலந்துகொள்ளுமாறு யாழ். அரச அதிபர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

## கலந்துரையாடல்

யாழ். மாவட்ட கல்விஅபிவிருத்தி சம்பந்தமாக கலந்துரையாடல் இன்று காலை 10 மணிக்கு யாழ். நகரிலுள்ள ஈ.பி.டி.பி. தலைமைச் செயலகத்தில் நடைபெறவுள்ளது.

யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் ஈ.பி.டி.பி. செயலாளர் நாயகமுமான டக்ளஸ் தேவானந்தா தலைமையில் நடைபெறும் இக்கூட்டத்தில் மாகாண கல்வி அமைச்சின் பிரதம செயலாளர் உட்பட யாழ்ப்பாணம் வந்துள்ள மாகாண அமைச்சு அதிகாரிகள் கலந்துகொள்ளவுள்ளனர்.

இக்கூட்டத்தில் வடமராட்சி, தென்மராட்சி, வலிகாமம், தீவகம், யாழ்ப்பாணம் ஆகிய கல்வி வலயப் பணிப்பாளர்கள், கல்வித் திணைக்களப் பொறியியலாளர்கள், தொழில் நுட்ப உத்தியோகத்தர்கள், கல்வியியல் கல்லூரி பீடாதிபதி, உதவித் திட்டமிடல் பணிப்பாளர், மேலதிக கல்விப்பணிப்பாளர் மற்றும் பாடசாலை அதிபர்கள் ஆகியோரைக் கலந்து கொள்ளுமாறு யாழ். அரச அதிபர் அறிவித்துள்ளார். (ஐ-5-10)

### யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம்

ஈராண்டுப் பகுதிநேர பட்டப்பின் கல்வித் தகைமைக் கற்கைநெறி 2000/ 2002

மேற்படி கற்கைநெறிக்கான எழுத்துத் தேர்வில் தகைமை பெற்ற விண்ணப்பதாரிகளுக்கான நேர்முகத் தேர்வு 19-08-2000 சனிக்கிழமை முற்பகல் 9-00 மணிக்குப் பல்கலைக்கழகச் சபையறையில் நடைபெறும்.

நேர்முகத் தேர்விற்கான கடிதங்கள் தபால் மூலம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. எழுத்துத் தேர்வில் தகைமை பெற்றவர்களின் பெயர்ப் பட்டியலைப் பட்டப்பின் படிப்புகள் பீடத்தில் பார்வையிடலாம்.

- பதிவாளர்

யாழ். பல்கலைக்கழகம்,
திருநெல்வேலி.
16-08-2000
(சி/12531)

## ஆழ்ந்த அனுதாபங்கள்

வடமராட்சி வடக்கு கடற்றொழிலாளர் கூட்டுறவு சங்கங்களின் சமாசத்தினதும் எமது சங்கங்களினதும் கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தரான.

**திரு. த. செல்வசோதி**

அவர்களின் பாசமிகு தந்தையாரான

**கந்தையா தங்கராசா**

அவர்கள் 10-08-2000 அன்று இறைபதம் அடைந்துள்ளார் அன்னாரின் பிரிவால் துயருற்றிக்கும் குடும்பத்தினர்க்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு அவரின் ஆத்மா சாந்தியடைய ஆண்டவரைப் பிரார்த்திக்கின்றோம்.

**பணிப்பாளாகள், பணியாளர்கள்**
**வ. வ. க. தொ. கூ. சங்கங்களின் சமாசம்.**

வீரபாகு கட்டடம்,
பருத்தித்துறை.
(77376)

## முதலாம் ஆண்டு நீங்காத நினைவஞ்சலி



**அமரர் நடராஜா சிவாகரன்**

தோற்றம்: 07 - 12 - 1981
மறைவு: 30 - 08 - 1999

திதி: சதுர்த்தி 18 - 08 - 2000

அன்பிற்கும் பண்பிற்கும் இலக்கணமாம்
ஆசை முகத்துடன் எமையெலாம் அரவணைத்த
செல்வமே!
ஆண்டுகள் தான் ஓடிமறைந்திடினும் ஆறிடுமோ
உன் பிரிவுத்துயர்.

அன்னாரின் பிரிவால் துயருறும்
**அப்பா, அம்மா, சகோதர, சகோதரிகள், மாமாமார், மாமிமார் மற்றும் உறவினர்கள், குடும்பத்தவர்கள்.**

தற்காலிக முகவரி:
சி. தனஞ்சயன் (வெள்ளத்தம்பி),
காளிகோயிலடி,
சங்கானை.

நிரந்தர முகவரி:
பூதர் வளவு,
அச்செழு.
(77375)

## மரண அறிவித்தல்

### சந்தர் செல்லர்

அச்சுவேலி வடக்கை பிறப்பிடமாகக் கொண்ட சந்தர் செல்லர் நேற்று (16-08-2000) காலமானார்.

இவர் செல்லமமாவின் அன்புக் கணவரும் சந்தர்-சீதேவி ஆகியோரின் அன்பு மகனும் திரு. பொன்னு அவர்களின் சகோதரரும் ஆசை அவர்களின் அன்பு மைத்துனரும் க. புஸ்பமலர், இ. ரத்தினேஸ்வரி, சு. சற்குணவதி, செ. சிவகுமார் ஆகியோரின் அன்புத் தந்தையாரும் மு. கதிரமலை, செ. இராசையா, ஆ. சுப்பிரமணியம், யோகராணி ஆகியோரின் மாமனாரும் க. செல்வகுமார், அ. ஜெயபவானி, க. செல்வமோகன், இ. சுதாஜினி, இராசகுமார், இராஜினி, துஸ்பந்தன், சு. பிரதீபன், சுகன்யா, காண்டீபன், அனுஜா. வித்தியா, நிஷாந்தன், மயூரன், பிரவீனா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார். அன்னாரின் தகனக் கிரியைகள் இன்று (17-08-2000) பிற்பகல் 2.30 மணியளவில் வல்லை மயானத்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு வேண்டுகின்றோம்.

தகவல்:
ஆ. சுப்பிரமணியம் (மருமகன்)
(ஆதவன் மில் உரிமையாளரும்
(77383) சீமெந்துக் கூட்டுத்தாபன மின்னியலாளரும்)



அமரர் க.வை. ஆத்மநாத சர்மாவின் 25ஆவது நினைவுவிழா கடந்த 6ஆம் திகதி யாழ்.வண ணைநாவலர் மகா வித்தியாலயத்தில் நடைபெற்றது. விழாவில் அன்னாரின் உருவப் படத்தை பேராசிரியர் அ. சண்முகதாஸ் திரைநீக்கம் செய்து வைப்பதைப் படத்தில் காணலாம். (ஐ)

# ஆரிய திராவிட பாஷா அபிவிருத்திச் சங்கம் அதன் முந்திய நிலைக்கு வளரவேண்டும்!

## துணைவேந்தர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,ஓக.17

சமயஅறிவும், தமிழறிவும் கொண்ட அறிஞர்கள் இன்று எம்மத்தியில் அருகிவருகின்றனர். இந்த நிலை மாற வேண்டுமானால் பண்டிதர்களையும், மிகப் பெரும் கல்விமான்களையும் உருவாக்கிய யாழ். ஆரிய திராவிட பாஷாபிவிருத்திச் சங்கம் மீண்டும் பழைய நிலைக்குக் கட்டி எழுப்பப்பட வேண்டும். இந்த வளர்ச்சி மேற்படி சங்கத்தை யாழ். பல்கலைக்கழகத்தின் ஓர் அங்கமாக இணைக்கவும், அதன்மூலம் பல்கலைக்கழகம் பண்டிதர் பட்டங்களை வழங்கவும் பெரிதும் உதவி செய்யும்.

இவ்வாறு தெரிவித்தார் யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் பொ.பாலசுந்தரம் பிள்ளை.

அண்மையில் யாழ். நாவலர் மகா வித்தியாலயத்தில் நடைபெற்ற சிவபூஜா துரந்தரர் அமரர் பிரம்மஸ்ரீ க.வை.ஆத்மநாதசர்மாவின் 25 ஆவது ஆண்டு நினைவுதினவிழாவில் பிரதமவிருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும்போதே துணைவேந்தர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:-

தமிழ்ப்பணி மற்றும் கல்விப்பணி ஆற்றவேண்டும் என்ற எண்ணம் படைத்தவர்களின் எண்ணிக்கை குறைந்து வருகிறது. இந்த நிலை மாறவேண்டும்.

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரைப் போன்று சமயப் பணி புரியவும், கல்வி, தமிழ்ப் பணி புரியவும் நல்லோர் இளம் தலைமுறை இந்த மண்ணில் உருவாக வேண்டும். இந்த இளம் தலைமுறையினர் சைவ சமயம் இன்று எதிர்நோக்கியிருக்கும் பல்வேறு பிரச்சினைகளைத் தீர்க்க முன்வரவேண்டும். காரணம் நாவலர் காலத்தில் இல்லாத பல்வேறு பிரச்சினைகளை சைவசமயமும், சைவ சமயிகளும் இன்று எதிர்நோக்கியுள்ளனர்.

இந்த எண்ணங்களுடன் செயற்பட்டவர்களில் ஒருவர்தான் இன்று நினைவு கூரப்படுகின்ற க.வை.ஆத்மநாதசர்மா. இவர் பிராமணச் சமூகத்தின் முன்னேற்றத்துக்காக அயராது உழைத்தவர். அத்துடன் தமிழையும், சமஸ்கிருதத்தையும் நன்கு கற்றுணர்ந்தவர்.

சமஸ்கிருத மொழி ஒரு பண்பட்ட மொழி. அந்த மொழியின் வளர்ச்சி கருதி பொருளாதார வசதிகளுடன் கூடிய நிறுவனம் ஒன்று உருவாக்கப்படல் வேண்டும். இந்த நிறுவனத்தை உருவாக்குவதில் 'நியந்த்ரீ' அமைப்பு முன்னின்று செயற்பட வேண்டும் -

இப்படி அவர் கூறினார்.

### இந்துநாகரிகத்துறைத் தலைவர்

விழாவுக்குத் தலைமை வகித்து உரையாற்றிய யாழ்.பல்கலைக்கழக இந்து நாகரிகத்துறைத் தலைவர் பேராசிரியர் பிரம்மஸ்ரீ ப.கோபால கிருஷ்ண ஐயர் தனது உரையில் -

பிரம்மஸ்ரீ க.வை..ஆத்மநாதசர்மா பாரம்பரியம் மிக்க சமஸ்கிருத மொழியின் கல்விக்காக அரும்பாடு பட்டவர். அத்துடன் தமிழ்மொழியின் வளர்ச்சிக்காக நூல்கள் பலவற்றை எழுதி வெளியிட்ட பெருமையும் இவருக்கு உண்டு.

இறந்தவர்களை ஓரிரு நாள்களில் நாம் மறந்துவிடுகின்றோம். இந்த நிலைமை மாறவேண்டும். எமது மண்ணுக்காக, மொழிக்காக அயராது உழைத்தவர்களை நாம் அவர்கள் இந்த உலகத்தை விட்டு மறைந்த பின்னரும் நினைவுகூர வேண்டும். இந்த வகையில் ஆத்மநாத சர்மாவின் வாழ்க்கை எமக்கு உதாரணமாக அமைந்துள்ளது - என்றார்.

### பேராசிரியர் சண்முகதாஸ்

கௌரவ விருந்தினராகக் கலந்து கொண்ட யாழ்.பல்கலைக்கழக உயர் பட்டப் படிப்புகள் பீட பீடாதிபதி பேராசிரியர் அ.சண்முகதாஸ் தமது உரையில்:-

பிராமண சமூகத்துக்கு என்ன தேவை என்பதை உணர்ந்து செயற்பட்டவர் ஆத்மநாதசர்மா. பிராமணர்களுக்கு ஒரு சம்மேளனம் தேவை என்பதை வெளி உலகுக்குக் காட்டியவர் இவர்.

எனவே எமது வாழ்க்கைக்கு முன்னுதாரணமாகக் கடைப்பிடிக்க வேண்டிய எத்தனையோ வகையான அம்சங்களை நாம் ஆத்மநாதசர்மாவின் வாழ்க்கையில் இருந்து அறிந்து கொள்ளக் கூடியதாகவுள்ளது - என்றார்.

சுன்னாகம் கதிரமலைச்சிவன் தேவஸ்தான பிரதமகுரு பிரம்மஸ்ரீ நா. சர்வேஸ்வரக்குருக்கள், நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சார்ய சுவாமிகள், வித்துவான் க. சொக்கலிங்கம் ஆகியோரும் உரை நிகழ்த்தினர்.

ஆத்மநாத சர்மாவின் தலைமாணாக்கர்களான பிரம்மஸ்ரீ ச.சோமாஸ் கந்தசர்மா, சைவ பரிபாலன சபையின் பரீட்சைச் செயலாளர் சைவப் புலவர் வை.கந்தசாமி, ஓய்வுபெற்ற அதிபர் க.சொக்கலிங்கம் ஆகியோர் இந்த நிகழ்வில் பாராட்டி விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர்.

பிரம்மஸ்ரீ க.வை.ஆத்மநாதசர்மாவின் திருவுருவப்படமும் இந்த நிகழ்வில் திரை நீக்கம் செய்து வைக்கப் பட்டது. (ஐ-7)

# தமது எம்.பிக்களுக்கு லஞ்சம் வழங்க அரசு முயன்றதாக ஐ.தே.க. குற்றச்சாட்டு

## லஞ்சக் கமிஷனுக்கு முறைப்பாடு செய்வதற்கு முடிவு

கொழும்பு,ஓக.17

அரசமைப்புச் சீர்திருத்தச சட்டநகலை நிறைவேற்றுவதற்காகத் தமது கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களைத் தம்பக்கம் இழுக்க அரசு லஞ்சம் வழங்க முன்வந்தமை குறித்து லஞ்சக கமிஷனுக்கு முறைப்பாடு செய்வதென ஐ.தே.க. நாடாளுமன்றக்குழு முடிவு செய்துள்ளது.

நேற்றுமுன்தினம் நாடாளுமன்றக் கட்டடத் தொகுதியில் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் கூடிய இந்தக் குழு இது விடயமாக விரிவாக ஆராய்ந்து இந்த முடிவை எடுத்தது.

அரசமைப்புச் சீர்திருத்தச சட்டநகல் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்படுவதைத் தடுப்பதற்காக ஐ.தே.க. தனது நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு லஞ்சம் வழங்கி வெளிநாட்டுக்கு அனுப்பியதாக அரசு குற்றஞ்சாட்டி வரும்நேரத்தில் ஐ.தே.க. மேற்கண்ட முடிவை எடுத்துள்ளது.

அரசைச் சேர்ந்த சிரேஷ்ட அமைச்சர்கள் சிலர் தமது கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களை அணுகி லஞ்சம் வழங்க முன்வந்தனர் என்றும் -

அந்த விவகாரம் தொடர்பாக லஞ்சக் கமிஷனிடம் முறைப்பாடு செய்யவிருப்பதாகவும் - ஐ.தே.க. தெரிவித்துள்ளது. (இ-3)

# தலைமைத்துவ தகைமைப் பயிற்சி

யாழ்ப்பாணம்,ஓக.17

வடக்கு - கிழக்கு மாகாண கிராம அபிவிருத்தித் திணைக்களத்தின் அனுசரணையுடன் தலைமைத்துவ தகைமைப் பயிற்சி நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 21ஆம் திகதி முதல் மூன்று நாள்கள் கொட்டடி நமசிவாய வித்தியாலயத்தில் இப்பயிற்சி இடம்பெறும்.

யாழ்.பிரதேச செயலர் பிரிவின் கீழ் உள்ள கிராம அபிவிருத்திச் சங்கங்கள் மற்றும் மாதர் கிராம அபிவிருத்திச் சங்கங்களின் உறுப்பினர்கள் முப்பது பேர் இந்தப் பயிற்சியில் கலந்துகொள்வர். (இ-க)

### சிறுவன் காயம்

சைக்கிளில் சென்ற சிறுவன் மீது டிரக் மோதியதால் சிறுவன் படுகாயம் அடைந்த சம்பவம் கடந்த திங்கட்கிழமை மாலை 3.00 மணியளவில் இன்பருட்டியில் இடம்பெற்றது.

இதே இடத்தைச் சேர்ந்த ரவி தீபராஜ் (வயது13) என்பவரே காயங்களுடன் மந்திகை மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவருகின்றார். (இ-109)

### யெகோவா சாட்சிகள் மாநாடு

யாழ்ப்பாணம்,ஓக.17

யெகோவாவின் சாட்சிகளுடைய மாவட்ட மாநாடு நாளை வெள்ளிக்கிழமை முதல் மூன்று தினங்களுக்கு யாழ். ஆஸ்பத்திரி வீதியில் உள்ள யாழ்ப்பாணக் கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

"கடவுளுடைய வார்த்தையின் படி நடப்போர்' என்ற பொருளில் தினமும் காலை 9:30 மணிமுதல் இந்த மாநாடு நடைபெறும்.

நாளை வெள்ளிக்கிழமை "ஆச்சரியமானவற்றைச் செய்யும் யெகோவாவைத் துதியுங்கள்" என்ற பொருளில் பேச்சு இடம்பெறும். நாளை மறுதினம் சனிக்கிழமை "கடவுளுடைய வார்த்தையின்படி நடக்க ஏப்புக்கொடுத்தோருக்கு முழுக்காட்டுதல்" என்ற பொருளில் பேச்சு இடம்பெறும்.

20ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை "எமது நாளுக்கான எச்சரிக்கை உதாரணங்கள்" என்ற பொருளில் நாடகமும், "கடவுளின் வியத்தகு செயல்களை ஏன் கவனிக்க வேண்டும்?" என்ற பொருளில் பேச்சும் இடம்பெறும். (இ-7)

புலிகள் எதிர்ப்பு ஆர்ப்பாட்டக்காரரின் தாக்குதலில் இருந்து

# பெண் சட்டத்தரணி மயிரிழையில் தப்பினார்!

## ஜெனிவாவில் சம்பவம்

ஜெனிவா,ஓக17

மனித உரிமைகள் அமைப்பின் பெண் வழக்கறிஞர் ஒருவர் புலிகள் எதிர்ப்பு ஆர்ப்பாட்டக்காரர்களின் தாக்குதலில் இருந்து மயிரிழையில் தப்பிய சம்பவம் கடந்த வெள்ளியன்று ஜெனிவாவிலுள்ள ஐ.நா. அலுவலகத்துக்கு வெளியே இடம்பெற்றது.

கரென் பாக்கர் என்ற இந்த வழக்கறிஞர் மனித உரிமைகள் தொடர்பான ஐ.நா. கூட்டத்தில் கலந்துகொண்டுவிட்டு பஸ்தரிப்பு நிலையத்தை நோக்கி நடந்து வந்துகொண்டிருந்த சமயமே இந்தத் தாக்குதல் முயற்சி இடம்பெற்றது.

சட்டத்துறை வட்டாரங்களில் இலங்கை விவகாரங்களில் பிரபல்யம் மிக்க இந்தப் பெண் சட்டத்தரணியை பெயர் சொல்லி அழைத்து "புலிகளின் வழக்கறிஞர்" என்று ஆர்ப்பாட்டக்காரர்கள் கோஷமிட்டனர் என்றும் - அந்தச் சிங்கள ஆர்ப்பாட்டக்காரர்கள் மத்தியில் காணப்பட்ட கனேடியர் என்று தம்மைக் கூறிக் கொண்ட ஒருவர் இந்தப் பெண் சட்டத்தரணிக்கு மிகவும் நெருங்கி வந்துவிட்டார் என்றும் - அப்பொழுது அந்த வழியாக வந்த சுவிஸ் பிரஜை ஒருவர் இவரைக் காப்பாற்றி பஸ்ஸில் ஏற்றி அனுப்பினார் என்றும் - தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பாக அந்தப் பெண் சட்டத்தரணி சுவிஸ் பொலீஸில் முறைப்பாடு செய்துள்ளார். (இ)

# வவுனியாவில் பஸ் சேவைகளுக்கு பாதுகாப்பு வழங்கப்பட வேண்டும்

## தமிழ் குழுக்களிடம் இராணுவம் கோரிக்கை

வவுனியா,ஓக.17

"வவுனியா பிரதேசத்தின் உள்ளூர் பஸ் சேவைகளை ஆரம்பிப்பதற்கு தமிழ் குழுக்கள் பாதுகாப்பு வழங்க முன்வர வேண்டும்"

இவ்வாறு வவுனியா 211ஆம் படைப்பிரிவின் பிரிகேட் கொமாண்டர் கேணல் உதேனி அல்விஸ் வவுனியாவில் உள்ள தமிழ்க் குழுக்களின் பிரதிநிதிகளிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

வவுனியாவில் உள்ள தமிழ்க் குழுக்களின் பிரதிநிதிகளுடனான சந்திப்பின்போதே கேணல் உதேனி அல்விஸ் இந்த வேண்டுகோளை விடுத்தார்.

வவுனியாவில் அண்மையில் இடம்பெற்ற பஸ் குண்டுவெடிப்புக்களைத் தொடர்ந்து அங்கு உள்ளூர் பஸ் சேவைகள் நிறுத்தப்பட்டமையும் -

இதனை எதிர்த்து பொதுமக்கள் போராட்டங்களை நடத்தி வருவதும் - குறிப்பிடத்தக்கது. (க)

### நாய்களுக்குத் தடுப்பூசி

நெல்லியடி,ஓக.17

பருத்தித்துறை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவிலுள்ள உடுப்பிட்டிப் பகுதியில் சுமார் 40 வளர்ப்பு நாய்களுக்கு தடுப்பூசி ஏற்றப்பட்டது.

உடுப்பிட்டி பாரதி சனசமூக நிலையத்தில் வைத்து, கரணவாய் பகுதி பொதுச் சுகாதார பரிசோதகர் பி.பாலதேவாவினால் தடுப்பூசி ஏற்றப் பட்டுள்ளது.

(இ-109)

மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களில்

# சுயேச்சைக் குழுவாக இணைந்து ஈ.பி.ஆர்.எல்.எவ் - புளொட் போட்டி

மட்டக்களப்பு,ஓக.17

எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் மட்டக்களப்பு - அம்பாறை மாவட்டங்களில் இணைந்து சுயேச்சைக் குழுவாகப் போட்டியிடுவதென ஈ.பி.ஆர்.எல்.எவ்.வும், புளொட்டும் முடிவுசெய்துள்ளன.

நேற்றுமுன்தினம் இந்த இரண்டு கட்சிகளின் பிரதிநிதிகளும் கூடி மேற்குறிப்பிட்ட தீர்மானத்தை எடுத்தனர்.

கடந்த முறை நடைபெற்ற தேர்தலில் தமிழ்க் கட்சிகள் மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களில் தனித்தனியாகப் போட்டியிட்டதால் வெற்றி வாய்ப்பை இழந்தன. இதனாலேயே மேற்படி இரு கட்சிகளும் இணைந்து போட்டியிடுவதற்கு இணக்கம் காணப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை யாழ்ப்பாணம் உட்பட சகல இடங்களிலும் ரெலோ தனித்துப் போட்டியிடும் என்று அந்த அமைப்பின் மட்டக்களப்பு மாவட்டப் பொறுப்பாளர் காந்தன் அறிவித்துள்ளார். (இ-5-7-21)

# வடக்கு-கிழக்கு பொது ஆசிரியர் சங்கம் உண்ணாவிரதம் இருப்பதற்கு முடிவு

வடக்கு - கிழக்கு மாகாணப் பாடசாலைகளில் பணிபுரியும் ஆசிரியர்களின் பலதரப்பட்ட பிரச்சினைகள் தொடர்பாக ஏழு கோரிக்கைகளை முன்வைத்து வடக்கு - கிழக்குப் பொது ஆசிரியர் சங்கம் உண்ணாவிரதப் போராட்டம் ஒன்றை நடத்த முடிவு செய்துள்ளது.

எதிர்வரும் 22ஆம் திகதி முதல் வவுனியாவிலும், திருகோணமலையிலும் இந்த உண்ணாவிரதப் போராட்டம் சுழற்சி முறையில் நடைபெற விருப்பதாக அந்தச் சங்கம் கடிதம் மூலம் மாகாணக்கல்வி அமைச்சுச் செயலருக்கு அறிவித்துள்ளது.

கடந்தவாரம் சங்கப் பிரதிநிதிகளுக்கும் மாகாணக் கல்வி அமைச்சுச் செயலருக்கும் இடையில் இடம்பெற்ற பேச்சுக்களின்போது ஆசிரியர் நிரந்தர நியமனம், பதவி உயர்வு என்பன தொடர்பாக உறுதி மொழிகள் அளிக்கப்பட்டன என்றும் -

எனினும் அவை இதுவரை நிறைவேற்றப்படவில்லை என்றும் -

சங்கத்தின் பொதுச் செயலாளர் பி.ஆர்.வி.சித்சிறி நவரத்ன தெரிவித்தார். (இ-3-150)

### சமுகமளிக்கக் கோரிக்கை

யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் ஈ.பி.டி.பி.கட்சியின் செயலாளர் நாயகமுமான டக்ளஸ் தேவானந்தாவை இன்று வியாழன் காலை 8.30மணிக்கு சந்தித்து கலந்துரையாடவுள்ளதால் சங்க உறுப்பினர்கள் அனைவரையும் யாழ்ப்பாணம் நாவலர் கல்வி நிலையத்தில் ஒன்றுகூடுமாறு யாழ். மாவட்ட வேலையற்ற தேசிய தொழில்நுட்பச் சான்றிதழ் உடையோர் சங்கத்தின் (பொறியியல்துறை) தலைவர் கோரியுள்ளார். (இ-10)

### தேசிய சான்றிதழ் பரீட்சை

யாழ்ப்பாணம்,ஓக.17

தேசிய தொலைக்கல்வி நிலையத்தால் (என்.ஐ) நடத்தப்படும் கணனிப் பிரயோகத்துக்கான தேசிய சான்றிதழ் (என்.சி.சி.ஏ) பரீட்சை யாழ். மாவட்டத்துக்கு மட்டும் எதிர்வரும் நவம்பர் மாதத்தில் விசேட பரீட்சையாக நடத்தப்படுமென மேற்படி நிறுவனம் அறிவித்துள்ளது.

யாழ்.மத்திய கல்லூரியில் இயங்கும் மகேஸ்வரி கணனி வள நிலையத்துக்கு ஊடாக ஏற்பாடு செய்யப்பட்ட இந்தப் பரீட்சை நவம்பர் மாத முதல்வாரத்தில் நடத்தப்படவுள்ளது.

மேற்படி பரீட்சை கடந்த ஜூன் மாதம் நடைபெறும் என முன்னர் அறிவிக்கப்பட்டிருந்த போதிலும் அசாதாரண சூழ்நிலை காரணமாக குடாநாட்டில் நடத்தப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

# சிரேஷ்ட விரிவுரையாளர் பற்றாக்குறையினால் பல்கலை. மாணவர் கல்வியில் பெரும் பாதிப்பு!

## ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் துணைவேந்தர்

யாழ்ப்பாணம்,ஓக.17

யாழ்.பல்கலைக்கழகத்தில் நிலவும் சிரேஷ்ட விரிவுரையாளர்களுக்கான பற்றாக்குறையினால் பல்கலைக்கழக மாணவர்களின் கல்வியில் பெரும் பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

இவ்வாறு யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை தெரிவித்தார்.

யாழ். நகரில் உள்ள ஈ.பி.டி.பி. தலைமைச் செயலகத்தில் நேற்று இரண்டாவது நாளாக இடம்பெற்ற மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தின் மாலைநேர அமர்வில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவர் டக்ளஸ் தேவானந்தா தலைமையில் நடைபெற்ற இந்தக் கூட்டத்தில் வடக்கு-கிழக்கு மாகாண அமைச்சின் பிரதம செயலாளர் ஜி.கிருஷ்ணமூர்த்தி, மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் க.பரமேஸ்வரன், மாகாண பொதுநிர்வாக கூட்டுறவு அமைச்சு செயலாளர் கே.பரமலிங்கம், விவசாய அமைச்சு செயலாளர் க.சண்முகலிங்கம், புனர்வாழ்வு அமைச்சு செயலாளர் சொ.அமிர்தலிங்கம், திட்டமிடல் அமைச்சு செயலாளர் எஸ். ரங்கராஜா, பொதுச்சேவை ஆணைக்குழு செயலாளர் திருமதி க.சிவசிதம்பரம், பிரதம செயலாளர் அலுவலக உதவிச் செயலாளர் இ. இளங்கோ, சுகாதார அமைச்சின் பதில் செயலாளர் திருமதி எஸ்.சிவலிங்கம், மாகாண திறைசேரி பதில் பிரதம செயலாளர் ஆ.செல்லத்துரை, மாகாண கல்விப் பணிப்பாளர் எஸ்.சிவானந்தம், நீர்ப்பாசன பணிப்பாளர் சி.மார்க்கண்டு, உதவி விவசாயப் பணிப்பாளர் க.கனகசபை, கைத்தொழில் பணிப்பாளர் எஸ்.இரணியன், சமூகசேவைகள் பணிப்பாளரும், மாகாண காணி ஆணையாளருமான ஆர்.தியாகலிங்கம், கூட்டுறவு அபிவிருத்தி ஆணைக்குழு செயலாளர் [illegible]வி ரூபினி கனகரட்ணம், கூட்டுறவு ஆணையாளர் சுப்பிரமணியசர்மா, உள்ளூராட்சி ஆணையாளர் கே. சபாபதிப்பிள்ளை ஆகியோர் சமுகமளித்திருந்தனர்.

அங்கு உரையாற்றிய பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை மேலும் கூறியதாவது:-

யாழ்.பல்கலைக்கழகத்தில் 20 பேராசிரியர்களுக்கும் 50 சிரேஷ்ட விரிவுரையாளர்களுக்கும் வெற்றிடங்கள் ஏற்பட்டுள்ளன.

மருத்துவபீடத்தைத் தொடர்ந்து இயங்க வைப்பதற்கு யாழ்.போதனா வைத்தியசாலையை மேம்படுத்த வேண்டும். எனவே உடனடியாக யாழ்.போதனா வைத்தியசாலையை அபிவிருத்தி செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவேண்டும் - என்று கூறினார்.

### மாகாண செயலர் உரை

மாகாணக் கல்வி பண்பாட்டலுவல்கள்,விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளர் கே.பரமேஸ்வரன் அங்கு உரையாற்றும்போது கூறியதாவது:-

வடக்கு-கிழக்கு மாகாணத்தில் வெற்றிடமாக இருந்த 5ஆயிரம் ஆசிரியர் பதவிகளில் 3ஆயிரம் ஆசிரியர் வெற்றிடங்கள் நிரப்பப்பட்டுள்ளன. மிகுதி 2ஆயிரம் ஆசிரியர் வெற்றிடங்கள் அடுத்த ஆண்டுக்குள் உலக வங்கியின் நிதி உதவியுடன் நிரப்பப்படும். ஏற்கனவே 571 தொண்டர் ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். அத்துடன் கல்வியியல் கல்லூரியில் இருந்து வெளியேறியோரில் ஒரு பகுதியினரும், பட்டதாரிகளில் ஒரு பகுதியினரும், ஜீ.சீ.ஈ. உயர்தரப் பரீட்சையின் முடிவுகளின்படி மற்றொரு பகுதியினருமாக இதுவரை 3ஆயிரம் ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். அடுத்த கட்டமாக மற்றொரு தொகுதி தொண்டர் ஆசிரியர்களும் நியமிக்கப்படவுள்ளனர். உலக வங்கியின் உதவியுடன் அடுத்த ஆண்டில் மேலும் 2ஆயிரம் ஆசிரியர்கள் நியமிக்கப்படும்போது வடக்கு - கிழக்கில் ஆசிரியர் பற்றாக்குறை நீங்கும்.

வடக்கு - கிழக்கு மாகாண கல்வி அமைச்சைப் பொறுத்தவரை கடந்த காலங்களில் ஆளணி வரையறுக்கப்படவில்லை. இவ்வாண்டு தான் ஆளணி வரையறுக்கப்பட்டுள்ளது. வடக்கு - கிழக்கு மாகாணத்தில் கல்வி நிர்வாக சேவையில் (SLES) 250 வெற்றிடங்கள் உண்டு. அவற்றில் யாழ்.குடாநாட்டில் 56 வெற்றிடங்கள் உள்ளன. இவ்வாண்டுக்குள் இவவெற்றிடங்கள் நிரப்பப்படும்.

தமிழ் மாணவர்களுக்கு மாத்திரமன்றி சிங்கள மாணவர்களுக்கும் உரிய காலத்தில் பாடப்புத்தங்கள் இவ்வாண்டு கிடைக்கவில்லை. தனியார் அச்சக முகவர்களினால் உரிய காலத்தில் அச்சிடப்படாமையே இதற்குக் காரணமாகும். அடுத்த ஆண்டுக்கான இலவசப் பாடநூல்கள் எதிர்வரும் டிசம்பர் மாதத்திலேயே மாணவர்களுக்கு கிடைக்கக்கூடிய ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

குடாநாட்டில் இடம்பெயர்ந்த மாணவர்களுக்கு மிகுதியாக இருக்கும் சீருடைத் துணிகளை வழங்கலாம். இடம்பெயர்ந்த தென்மராட்சி மாணவர்கள் கற்பதற்காக பாடசாலைகளில் தற்காலி கொட்டில்கள் அமைக்க 5 லட்சம் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

பாடசாலைகளுக்கான ஆய்வுகூட உபகரணங்களை தேசிய, மாகாண பாடசாலை மட்டத்தில் கொள்வனவு செய்யலாம். இவ்வாறு அவர் கூறினார். (ஐ-5-173)

# யாழ்.கல்வியியல் கல்லூரியின் விரிவுரையாளருக்குச் சம்பளம்

## உடன் வழங்கப் பணிப்பு

யாழ்ப்பாணம்,ஓக.17

யாழ்.கல்வியியல் கல்லூரியில் கடமையாற்றும் பதினொரு விரிவுரையாளர்களுக்குமான சம்பளக் கொடுப்பனவுகளை வழங்குமாறு யாழ்.மாவட்டத்தில் உள்ள வலயக் கல்வித் திணைக்களப் பணிப்பாளர்களுக்கு மாகாணக் கல்வி அமைச்சு செயலாளர் க.பரமேஸ்வரன் உத்தரவிட்டார்.

யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் இந்த விரிவுரையாளர்களின் சம்பளக் கொடுப்பனவு தொடர்பாக கல்வியியல் கல்லூரி பீடாதிபதி ரி.கமலநாதன் சுட்டிக்காட்டிதைத் தொடர்ந்தே அவர் இந்த உத்தரவை விடுததார்.

மே, ஜூன், ஜூலை மாதச் சம்பளங்கள் இந்த விரிவுரையாளர்களுக்கு வழங்கப்படவில்லை. இது தொடர்பாக கல்வியியல் கல்லூரி பீடாதிபதி சம்பந்தப்பட்டவர்களுடன் தொடர்புகொண்ட போதும் இந்தச் சம்பளக் கொடுப்பனவை வழங்குவது இழுபறி நிலையில் இருந்து வந்தது.

மாகாணக் கல்விச் செயலாளரின் உத்தரவினை அடுத்து இந்த விரிவுரையாளர்களுக்கான சம்பளம் இன்று வழங்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ-5)

# 'ராகிங்' என்ற பெயரில் அராஜகச் செயல்; தமிழ் இனத்துக்கே பெரும் தலை குனிவு!

## அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையம் அறிக்கை

யாழ்ப்பாணம்,ஓக17

அண்மையில் யாழ். பல்கலைக்கழகத்தில் 'ராகிங்' என்ற போர்வையில் அராஜகத்தைப் பிரயோகித்து அநாகரிகமான முறையில் எமது மாணவச் சமூகம் நடந்துகொண்ட விதம் தமிழ் இனத்தையே வெட்கித் தலை குனிய வைத்துள்ளது.

இவ்வாறு யாழ். மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

எமது இனத்துக்கெனத் தனியான கலை, பண்பாடு ,கலாசாரம் ஆகியவற்றைக் கொண்ட நாம் அவற்றைப் பின்பற்றி வளர வேண்டிய நேரத்தில் அவற்றையெல்லாம் விட்டுவிட்டுப் புரிந்துணர்வு என்ற பதத்தை உணராதவர்களாக வன்முறை மூலம் மற்றவர்களைத் துன்புறுத்தியும் இம்சித்தும் இதன் மூலம் ஏற்படும் வேதனைகளைப் பார்த்து இன்புறுவதும்தானா 'ராகிங்' என்ற பெயரில் எமது பல்கலைக்கழக மாணவர்கள் செய்கின்ற செய்கைகள்?'

இன்றைய யுத்த சூழ்நிலையில் எமது மக்கள் உயிர்வாழ்வதற்காக அங்கும் இங்கும் நடைப்பயணமாக இடம்பெயர்ந்து உண்ண உணவின்றி, உடுப்பதற்கு உடையின்றி, தரித்திருப்பதற்கு இடமின்றி அகதிகள் என்ற போர்வையில் தத்தளித்துக்கொண்டிருக்கும் இந்த வேளையில் -

அது மட்டுமன்றி வன்னியில் எமது உடன்பிறப்புக்கள் உணவு, மருந்து, பச்சிளம் பாலகருக்கான பால்மா எதுவும் இன்றி தவிக்கும் நிலையில் கல்விதான் எமது இனத்தின் சொத்து என்று கல்வி கற்கின்ற நாம் 'ராகிங்' என்ற போர்வையில் வன்முறைக் கலாசாரத்தில் ஈடுபடுவதைத் தவிர்த்து கல்வியை நல்ல முறையில் கற்று முன்னுக்கு வரவேண்டும்.

யாழ்.பல்கலைக்கழகத்தை எடுத்துக்கொண்டால் எத்தனையோ இன்னல்கள், கஷ்டங்கள் மற்றும் யுத்த சூழ்நிலைகளுக்கு மத்தியிலும் இடைநிறுத்தங்களோ, தடங்கல்களோ இன்றி கல்வியை நாம் தொடர்ந்து கற்று வந்திருக்கின்றோம்.இவை எம் இனத்துக்குப் பெருமை சேர்த்தவையாகும்.

அண்மையில் கூட ஸ்ரீலங்காவின் கல்வி, உயர்கல்வி அமைச்சர் யாழ். பல்கலைக்கழகம் ஏனைய பல்கலைக்கழகங்களுக்கு முன்மாதிரியாகத் திகழ்வதாகவும் யுத்த சூழ்நிலையிலும் தொடர்ந்து இயங்கி வருவதை ஓர் எடுத்துக்காட்டாகக் கூறியதை அறிந்தபோது எமது பல்கலைக்கழக மாணவர் சமூகம் கல்விக்கு எந்தளவு முக்கியத்துவம் கொடுத்துள்ளது என்பதை எண்ணிப் பெருமிதமடைந்தோம். அன்று எம்மைப் பெருமைப்பட வைத்த நீங்களே இச்செயல்களில் ஈடுபடும் மாணவர்களின் செய்காரியங்களால் எம்மைத் தலைகுனிய வைத்துள்ளீர்கள். அண்மைக்காலங்களில் யாழ். மாவட்டத்தில் பல்கலைக்கழக மாணவர்கள் உட்பட 800இற்கு மேற்பட்டவர்கள் காணாமல்போயுள்ளனர். தமது பிள்ளைகள் எங்கே என்று தெரியாமல் தத்தளித்துக் கொண்டிருக்கின்ற பெற்றோர்களை நாம் பார்க்கின்றோம். இந்தப் பெற்றோர்களைப் போன்றே பல்கலைக்கழகம் வந்து கல்வியைத் தொடரும் மாணவர்களின் பெற்றோரும் கவலை அடைகின்றனர். பட்டம் பெறுவதற்காகப் பிள்ளைகளை அனுப்பினோமா அல்லது வதை முகாமுக்குப் பிள்ளைகளை அனுப்பினோமா என்று திக்குத் தெரியாத திசையில் நின்று தத்தளிக்கிறார்கள். தமது பிள்ளைகளுக்கு என்ன நடக்கும் என்ற பீதி உணர்வே அவர்களது மனங்களில் எழுகின்றதை அறிய முடிகின்றது.

பேராதனைப் பல்கலைக்கழக பொறியியல் பீட மாணவன் வரப்பிரகாஷ் மீது மேற்கொள்ளப்பட்ட "ராகிங்" சம்பவத்துடன் எமது பல்கலைக்கழக மாணவர்களின் 'ராகிங்' செய்கைகளும் முற்றுப்பெறும் என்று எண்ணியிருந்தோம். ஆனால் ஷாஜகானின் மீது மேற்கொள்ளப்பட்ட செய்கையால் அது இன்னும் முற்றுப்பெறவில்லை தொடர்கதை என்பதை உணர்கின்றோம். இன்று ஷாஜகான் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதையும் அவரது தாயார் மகனுக்கு உயிர்ப் பாதுகாப்பு வழங்குங்கள் என்று பல்கலைக்கழக நிர்வாகத்திடம் வேண்டியுள்ளதையும் நோக்கும்போது எமது கல்வியின் தரம் எங்கே செல்கின்றது என்பதையும் நாம் அறியமுடிகின்றது.

எமது வருங்கால சமூகத்திற்கு எடுத்துக்காட்டாக விளங்க வேண்டிய பல்கலைக்கழக மாணவர் சமூகம் இனியாவது 'ராகிங்' என்ற போர்வையில் மனிதஉரிமைகளை மீறாது சமூக உணர்வை ஏற்படுத்தி எதிர்காலத்தில் பல்கலைக்கழகம் செல்லவிருக்கும் மாணவர்களுக்கு அறிவு புகட்டும் முன்மாதிரியாகத் திகழ்ந்து எமது தமிழினத்தின் சாபக்கேடுகளில் ஒன்றான 'ராகிங்' செயலைக் கைவிடுவீர்கள் என அன்பாக வேண்டி நிற்கின்றோம்.

இவ்வாறு அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-10)

### கொடுப்பனவு

தென்மராட்சி,ஓக17

சாவகச்சேரி பலநோக்குக் கூட்டுறவுச் சங்க கிராமிய வங்கி நெல்லியடி பஸ் நிலையத்திற்கு அருகில் உள்ள கட்டடத்தில் இயங்குகிறது.

ஓய்வூதியக் கொடுப்பனவுகள் நேற்று முதல் வழங்கப்படுவதாக சங்கப் பொது முகாமையாளர் தெரிவித்தார். (ஐ-117)

### கட்டடத் திறப்பு விழா

யாழ்ப்பாணம்,ஓக.17

சுழிபுரம் பெரியபுலோ அண்ணா சனசமூக நிலையத்துக்கென புதிதாக அமைக்கப்பட்ட கட்டடத் திறப்பு விழா இன்று பிற்பகல் 3.00 மணிக்கு நடைபெறவுள்ளது.

ஈ.பி.டி.பியின் வட்டுக்கோட்டைத் தொகுதி அமைப்பாளரும், வலி. மேற்கு பிரதேச சபைத் தலைவருமான ந.திரிலோகநாதன் இந்தக் கட்டடத்தைத் திறந்து வைப்பார். (ஐ-7)

### தபாலகத்தில் 'பக்ஸ்' வசதி

யாழ்ப்பாணம்,ஓக.17

யாழ். பிரதம தபாலகத்துக்கு அஞ்சல் அதிபர் நாயகத்தினால் புதிய "பக்ஸ்" இயந்திரம் ஒன்று அண்மையில் வழங்கப்பட்டுள்ளது.

தற்பொழுது அலுவலகத்தின் தேவைக்குப் பயன்படுத்தப்பட்டு வரும் இந்த இயந்திரம் காலப்போக்கில் பொதுமக்களின் தேவைகளுக்கும் பயன்படுத்தப்படும் என்றும் யாழ். தபாலக அதிபர் தெரிவித்துள்ளார். (ஐ-10)

### அலுவலகத்துக்குத் தளபாடங்கள்

யாழ். மாவட்ட மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் அலுவலகத்துக்கு வலிகாமம் கல்வி வலயத்தினால் தளபாடங்கள் வழங்கப்பட்டுள்ளன.

இந்த அலுவலகத்துக்குப் போதிய தளபாட வசதிகள் மற்றும் அடிப்படை வசதிகள் வழங்கப்படாததை ஆட்சேபித்து கடந்த மாதம் உழியர்களால் அடையாள வேலை நிறுத்தம் மேற்கொள்ளப்பட்டது தெரிந்ததே.

இதனை அடுத்து மாகாணக் கல்விப் பணிப்பாளரின் பணிப்பின் பேரில் வலிகாமம் கல்வி வலயத்தினால் தளபாடங்கள் வழங்கப்பட்டுள்ளன. அத்துடன் யாழ்.கல்வி வலயத்திலிருந்தும் தளபாடங்களைப் பெற்றுக்கொள்ளுமாறு தெரிவிக்கப்பட்டிருப்பதாக மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் அலுவலக நிர்வாக உத்தியோகத்தர் தெரிவித்தார். (ஐ-10)


## மரண அறிவித்தல்

### நாகலிங்கம் கந்தையா

(ஓய்வுபெற்ற ரயில் நிலைய அதிபர்)

பட்டையடி, இருபாலை, கோப்பாயில் வசித்த ஓய்வுபெற்ற ரயில் நிலைய அதிபர் நாகலிங்கம் கந்தையா அவர்கள் நேற்று (16-08-2000) புதன்கிழமை காலமானார்.

அன்னார் வேதநாயகியின் அன்புக் கணவரும் கமலநாயகி (ஆசிரியை), விமலநாயகி (ஆசிரியை), முருகானந்தன் (பொறியியலாளர், கனடா), சிவானந்தன் (ஆஸ்திரேலியா) ஆகியோரின் அன்புத் தந்தையும் காந்திமதிநாதன் (கணக்காளர்), கணேஷ் (தொழில்நுட்ப உத்தியோகத்தர்), சூரியகலா ஆகியோரின் அன்பு மாமனாரும் கமல்நாத், ஐங்கரன், ரமேஷ் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17-08-2000) வியாழக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அன்னாரின் பெறாமகன் மயில்வாகனம் இராசா அவர்களின் இல்லத்தில் (நீதவான் வளவு, கோப்பாய்) நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
க.ஆ.சிவப்பிரகாசம்
(மைத்துனர்)

*நீதவான் வளவு,*
*கோப்பாய் தெற்கு,*
*கோப்பாய்.*

(77384)

## 90ஆம் நாள் நினைவஞ்சலி

### அமரர் வேலுப்பிள்ளை சுரேந்திரன் (துரை)

(முன்னாள் படவரைஞர், துரைராஜா அசோசியேட்ஸ், 25ஸ்ரீ9247 உழவு இயந்திர - உரிமையாளர்)

**அன்பின் உறைவிடமாய் பண்பின் பிறப்பிடமாய்**
**குடும்பத்தின் குலவிளக்காய் வாழ்ந்த தெய்வமே!**
**காலமெல்லாம் கண்போலவே கட்டிக் காத்தோமே!**
**எம்மைவிட்டுப் பிரிந்து சென்றாலும் – உங்கள்**
**பாச நினைவுகள் மறையாது என்றுமே!**

**அன்னாரின் மறைவின்போது நேரில் வந்து பங்குபற்றி, பல வழிகளில் உதவி புரிந்த உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.**

**மனைவி கமலாதேவி சுரேந்திரன்**
(ஆசிரியை, மட்டுவில் மகா வித்தியாலயம்)
பிள்ளைகள்: **விதர்சன், பமிர்சன்,**
**சகோதரன், சகோதரிகள்**
*10ஆம் வாய்க்கால்,*
*உருத்திரபுரம்.*

தகவல்:
*S.A.விக்னகுமார்,*
*'குமரகிரி'*
*கல்லடிலேன்,*
*நுணாவில் கிழக்கு,*
*சாவகச்சேரி.*
தற்காலிக முகவரி:
*இல.10, யமுனா வீதி,*
*நல்லூர்.*

(77359)

# பாதுகாப்புக் கருதியே கட்சி அலுவலகத்தில் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் நடக்கிறது

## ஈ.பி.டி.பி. விளக்கம்

யாழ்ப்பாணம்,ஒக.17

"எமது தலைவர்கள் மற்றும் சக உறுப்பினர்களது பாதுகாப்புக் கருதியே எமது கட்சி அலுலகத்தில் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் நடத்தப்படுகின்றது."

- இவ்வாறு அறிக்கை ஒன்றின் மூலம் ஈ.பி.டி.பி. கட்சி விளக்கமளித்துள்ளது. நேற்று வெளியிடப்பட்ட அந்த அறிக்கையின் விவரம் வருமாறு:-

யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் எமது கட்சி அலுவலகத்தில் நடத்தப்பட்டதைக் கண்டித்து சாவகச்சேரிப் பிரதேச சபைத் தலைவர் பத்திரிகைச் செய்தி வெளியிட்டமை குறித்து நாம் பெரும் விசனம் அடைந்துள்ளோம்.

எமது பிரதேசத்தில் இரு தரப்பினரும் மண்ணை மீட்க, மக்களை மீட்க என்று மூர்க்கத்தனமான யுத்தம் ஒன்றைக் கட்டவிழ்த்து விட்டுள்ளனர். இந்த யுத்தம் அனைவரது அன்றாட வாழ்வினையும் சீர்குலைத்துள்ளது. எமது மக்களது அபிவிருத்திச் செயற்பாடுகள் அனைத்தையும் பல வருடங்களுக்குப் பின்தள்ளிவிட்டுள்ளது. இத்தகைய சூழ்நிலையில், யுத்த அவலத்துக்குள் சிக்கித் தவிக்கும் மக்களுக்கு, அவர்களது இயல்பு வாழ்க்கையை மீளக்கட்டியமைக்கும் முயற்சியுடன் இவ்வொருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தைக் கூட்டியிருந்தோம். இதில், எமது தலைவர்கள் மற்றும் சக உறுப்பினர்களது பாதுகாப்பு நலன்கருதி, எமது கட்சி அலுவலகத்திலேயே இக் கூட்டத்தை நடத்த வேண்டிய நிர்ப்பந்தம் எமக்கு ஏற்பட்டிருந்தது. ஆனால் மக்களது தேவைகளையும் யாழ்ப்பாண அரசியல் மற்றும் இராணுவ பாதுகாப்பு நிலைமைகளையும் சரிவரப் புரிந்துகொள்ள தவறியதுடன் தங்களது கடமைப்பாட்டையும் மறந்து, இவ்வாறாகப் பத்திரிகை அறிக்கையை ஒரு மக்கள் பிரதிநிதி விடுவதையிட்டு நாம் கவலை அடைகின்றோம்.

மேலும் இத்தகைய மக்கள் பிரதிநிதிகளின் பொறுப்பற்ற செயற்பாடுகள், யுத்த வெறியர்களின் கைகளை ஓங்கச் செய்து அன்றாட வாழ்வைச் சீர்குலைத்து எமது மக்களை படுமோசமான யுத்த அவலத்துக்கே தள்ளிவிடும் என்பதை நாம் மனதிற் கொள்ளவேண்டும். தற்போதைய பாதுகாப்பற்ற சூழ்நிலை காரணமாக எமது கட்சி உட்பட ஏனைய சக தோழமை அரசியல் கட்சிகளும் தத்தமது கட்சி அலுவலகங்களிலேயே இத்தகைய கூட்டங்களை கூட்டுவது ஒரு வழமையான விடயமாகும். ஆனால் சடுதியாக கட்சி அலுவலகங்களில் பொதுக்கூட்டங்களை கூட்டுவதைக் கண்டித்து பத்திரிகை அறிக்கை விடுவதன் அரசியல் சூட்சுமம் எமக்குப் புரியவில்லை.

தவிர எமது அலுவலகத்துக்கு வரும் எவரையும் கௌரவமான முறையில் சோதனைக்குட்படுத்தியே உள்ளே அனுமதிக்கின்றோம். ஆனால் சாவகச்சேரிப் பிரதேச சபைத் தலைவர், தம்மை அசிங்கமான முறையில் சோதனைக்குட்படுத்தியதாகப் பொய்க் குற்றச்சாட்டைச் சுமத்தி எமது கட்சியின் பெயரைக் களங்கப்படுத்த முயல்கின்றார். இத்தகைய முயற்சிகள் குறித்து மக்களை விழிப்பாக இருக்கும்படி கேட்டுக் கொள்கின்றோம்.

இதேவேளை பல்வேறு சிரமங்களுக்கு மத்தியிலும் யுத்த அவலத்துக்குள்ளாகி தத்தளிக்கும் எமது மக்களுக்கு இயல்பு வாழ்க்கையை மீளக் கட்டியெழுப்ப தங்கள் சேவைகளை அளிக்கவென ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்துக்கு சமுகமளித்த அனைத்து அதிகாரிகளுக்கும் எமது கட்சி நன்றி தெரிவித்துக் கொள்கின்றது - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ)

# பட்டதாரிப் பயிலுநர்கள் 25 பேருக்கு நேர்முகப் பரீட்சை

யாழ்ப்பாணம்,ஒக.17

யாழ்.மாவட்டத்தில் உள்ள பட்டதாரிப் பயிலுநர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்குவதற்கான நேர்முகப்பரீட்சை எதிர்வரும் இருபத்தோராம் திகதி முற்பகல் 11 மணிக்கு யாழ். செயலகத்தில் நடைபெறவுள்ளது.

நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்ட 25 பேரின் பெயர் விவரங்கள் வருமாறு:-

கே. கனகதுரை (பிரதேசசபை, சாவகச்சேரி), செல்வி ரி.கனகலிங்கம் (நகரசபை, சாவகச்சேரி), ரி.ஸ்ரீமுரளிதரன் (உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், யாழ்), எஸ்.ரமேஸ் (பிரதேசசபை, வலி.தென்மேற்கு), திருமதி ஜே.சோமராஜ்(பிரதேச சபை,வலி. மேற்கு), ஆர்.சுப்பிரமணியம் (நகரசபை, பருத்தித்துறை), செல்வி.பி.ஜேமிலஸ் (பிரதேச சபை,வலி.கிழக்கு), ஏ.கமலேஸ்வரசர்மா (பிரதேச சபை, நல்லூர்), ஆர்.அரிவரசன் (மாநகர சபை, யாழ்), செல்வி எஸ்.கலையரசி (பிரதேசசபை,வலி. தெற்கு), கே.இந்திரகுமார் (பிரதி சுகாதாரப் பணிப்பாளர் அலுவலகம்,யாழ்), செல்வி ஆர்.மாலினி (பிரதி சுகாதாரப் பணிப்பாளர் அலுவலகம்,யாழ்), செல்வி.பி.சசிகலா (பிரதி சுகாதாரப் பணிப்பாளர் அலுவலகம்,யாழ்), திருமதி வி.துரைசிங்கம் (யாழ். கல்வி வலயம்), திருமதி எஸ்.சுரேஷ்குமார் (யாழ். கல்வி வலயம்), திருமதி வி.தயானந்தன் (யாழ். கல்வி வலயம்), செல்வி வி.குமுதினி (பிரதேச சபை வலி.வடக்கு), செல்வி எஸ்.ஹேமமாலினி (பிரதம பொறியியலாளர் பணிமனை, யாழ்.), செல்வி எஸ்.ஜனனி (கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் அலுவலகம், யாழ்.), செல்வி ஓ.மகாதேவி (கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் அலுவலகம், யாழ்.), செல்வி எஸ்.நிலதி (கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் அலுவலகம், யாழ்.), செல்வி எம்.கீதா (பிரதேச செயலகம் யாழ்.), செல்வி ஆர்.அமிர்தராணி (பிரதேச செயலகம், பருத்தித்துறை), திருமதி வி.மயில்வாகனம் (நகரசபை, சவாகச்சேரி), திருமதி என்.கேதீஸ்வரன் (நகரசபை, பருத்தித்துறை).

மேற்குறிப்பிட்ட அனைவரும் தமது அடையாள அட்டை, பிறப்புச் சான்றிதழ், கல்விச்சான்றிதழ்கள், சேவைச் சான்றிதழ்கள் ஆகியவற்றுடன் நேர்முகப் பரீட்சைக்கு சமுகமளிக்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஜ-10-5)

## இருமாதகாலம் சம்பளம் இல்லை

கொடிகாமம் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச்சங்க அலுவலகத்தில் கடமைபுரியும் 37 பணியாளர்களுக்கு கடந்த ஜூன், ஜூலை ஆகிய மாதங்களுக்குரிய சம்பளம் வழங்கப்படவில்லை எனத் தெரிவிக்கப்பட்டது.

இடம்பெயர்ந்துள்ள இந்தப் பணியாளர்கள் "உ" 'பங்கீட்டு' அட்டை வைத்திருப்பதால் நிவாரண உதவிகளும் கிடைக்கவில்லை எனவும் தெரிவித்தனர்.

சங்க அலுவலகம் தற்போது சாவெட்டியில் இயங்குவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஜ-117)

## செயலகம் முன் கூடுமாறு கோரிக்கை

யாழ்ப்பாணம்,ஒக.17

1996இல் காணமற்போன அரச திணைக்கள உத்தியோகத்தர்களின் சம்பள விடயம் தொடர்பாக விண்ணப்பித்த காணாமல்போனோர் பாதுகாவலர் சங்க உறுப்பினர்கள் அனைவரையும் நாளை வெள்ளிக்கிழமை காலை 8.30 மணிக்கு யாழ். செயலகத்துக்கு முன்னால் ஒன்றுகூடுமாறு மேற்படிசங்கம் வேண்டுகோள்விடுத்துள்ளது. (இ-9)

## வவுனியா.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வில் இருந்த தற்கொலையாளியான ஆண் ஒருவர் அந்த வாகனத்தின் மீது பாய்ந்து குண்டை வெடிக்கச் செய்ததாகக் கூறப்படுகின்றது. குண்டு பலத்த சத்தத்துடன் வெடித்ததை அடுத்து அங்கு பெரும் களேபரம் ஏற்பட்டது. வதிவிட அனுமதிப் பத்திரம் பெற வந்திருந்த நூற்றுக் கணக்கான பொதுமக்கள் நாலா பக்கமும் ஓடித்தப்பினர்.

தாக்குதலில் சிக்கிப் படுகாயமடைந்த - தவசிகுளம் கிராமத்தைச் சேர்ந்த - திருவாதிரை புஸ்பலதா (வயது 12) என்ற சிறுமி வவுனியா ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுப் பின்னர் அங்கு மரணமானார். காயமடைந்த புலனாய்வுப் பிரிவைச் சேர்ந்த ஒருவரும் வவுனியா ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுப் பின்னர் மேலதிக சிகிச்சைக்காக அநுராதபுரம் ஆஸ்பத்திரிக்குக் கொண்டு செல்லப்பட்டார். காயமடைந்த படை அதிகாரி லெப்டினன்ட் பாலசூரியா எனத் தெரிவிக்கப்பட்டது. தாக்குதலை நடத்தியதாகச் சந்தேகிக்கப்படும் தற்கொலையாளியின் வலது கால் மட்டுமே அப்பகுதியில் காணப்பட்டது அவர் ஒளிந்திருந்த ஓட்டோ வாகனம் பலத்த சேதமடைந்தது.

வதிவிட அனுமதிப்பத்திரம் பெறுவதற்காக நூற்றுக்கணக்கான பொதுமக்கள் அங்கு கூடியிருந்த போதும் பெரும் உயிர்ச்சேதங்கள் ஏற்படவில்லை.

சம்பவம் நடந்த இடத்தை உடனடியாக சுற்றிவளைத்த பொலிஸாரும் படையினரும் போக்குவரத்தைத் தடைசெய்து சோதனைகளை மேற்கொண்டனர். இச்சம்பவத்தை அடுத்து நேற்று மாலை வவுனியா நகரப் பகுதியில் பதற்றம் நிலவியது.

பலத்த பாதுகாப்பு மிக்க வவுனியா நகரப் பகுதியில் தற்கொலைக் குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டிருப்பது இதுவே முதல் நடவையாகும். (ஜ-4-7-1(54)

## கூ.சங்கத்தின் தலைமையகம் இடமாற்றம்

தென்மராட்சி,ஒக.17

சாவகச்சேரி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் தலைமை அலுவலகம் மற்றும் கிராமிய வங்கி ஆகியவை நெல்லியடியில் தனியார் கட்டடத்தில் இயங்கிவருகின்றன.

இடம்பெயர்ந்த வேளையில் நெல்லியடி வதிரி வீதியில் உள்ள கடை ஒன்றில் இயங்கிய இந்த அலுவலகங்கள் இடநெருக்கடி காரணமாக மந்திகை ஆஸ்பத்திரிக்கு முன்பாகவுள்ள மாடிக் கட்டடம் ஒன்றுக்கு கடந்த முதலாம் திகதி மாற்றப்பட்டன. பின்னர் கடந்த வாரம் நெல்லியடி பஸ் நிலையத்துக்கு அருகில் உள்ள தனியார் கட்டடத்திற்கு இவை மாற்றப்பட்டுள்ளன. (ஜ-117)

## விளக்கமறியலில் வைக்க உத்தரவு

நெல்லியடி,ஒக.17

அல்வாய் வடக்கு, திடல் பகுதியில்,குடும்பஸ்தர் ஒருவரை வாளால் வெட்டிதலையில் படுகாயம் விளைவித்ததாகக் கூறப்படும் அதே இடத்தைச் சேர்ந்த, இளைஞர் ஒருவரை, மீண்டும் இருவார காலம் விளக்க மறியலில் வைக்குமாறு பருத்தித்துறை மாவட்ட நீதிவான் எஸ்.ஏ.ஈ. ஏகநாதன் உத்தரவிட்டார்.

கடந்த மாதம் 14ஆம் திகதி இடம்பெற்ற இத்தாக்குதல் சம்பவம் தொடர்பாக ஏற்கனவே கைது செய்யப்பட்டு விளக்க மறியலில் வைக்கப்பட்டிருந்த அல்வாய்வடக்கு திடலைச் சேர்ந்த முத்துலிங்கம் தவீஸ்குமார் (வயது19) என்பவரை, சிறைச்சாலை அதிகாரிகள், நீதிமன்றில் முற்படுத்தியசமயம், இம்மாதம் 28ஆம் திகதிவரைவிளக்கமறியலில் வைக்குமாறுநீதிவான் உத்தரவிட்டார். (இ-109)

## விமானத் தாக்குதல்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதேசமயம் -

வன்னியில் அம்பலவன்பொக்கணை என்ற இடத்திலுள்ள பாடசாலையின் மூன்று கட்டடங்கள் வான் தாக்குதலினால் எரிந்து நாசமானதாக ஒரு தகவல் தெரிவித்தது. (ஜ-4 5-7-15-17-31-56)


BRIGHTMAN
கல்வி நிலையம்
(நீராவியடிப் பிள்ளையார் கோயில் முன்பாக)
பிறவுண் றோட், யாழ்நகர்.
A/L 2001, 2002
பொது ஆங்கிலம்
By: - Mr.M.A.Hari
ஆரம்பம்:
18-08-2000 (நாளை)
Fri. 4.00
(77351)


# கல்வியியல் கல்லூரிகளுக்கு மேலும் ஒரு தொகுதி மாணவர்

தேசிய கல்வியியல் கல்லூரிகளுக்கு மேலும் ஒரு தொகுதி மாணவர்களைச் சேர்த்துக் கொள்வதற்கான விண்ணப்பங்களை கல்வி அமைச்சு கோரியுள்ளது.

ஆரம்பக்கல்வி, பௌத்தமதம் இந்துமதம், விஞ்ஞானம், கணிதம், ஆங்கிலம், உடற்கல்வி, விவசாயம் உட்பட 18 பாடங்களில் 16 கல்வியியல் கல்லூரிகளுக்கு மாணவர்கள் சேர்த்துக்கொள்ளப்படவுள்ளனர்.

இதற்கான விண்ணப்பங்கள் அடுத்த மாதம் 22ஆம் திகதிவரை ஏற்றுக்கொள்ளப்படும் என கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

ஆசிரியர் கல்வி தொடர்பான மூன்று ஆண்டு முழுநேரப் பயிற்சி நெறியைப் பின்பற்றுவதற்கு தகைமையுடையோர் இதற்கு விண்ணப்பிக்கலாம். (ஜ-4-7)


சுனில் ஆட்ஸ்
☛ Photo Chrome ☛ Photo Friends
☛ Senkada
நீங்கள் விரும்பும் COLOUR LAB இல் கழுவிப் பெற்றுக்கொள்ளலாம்.
★ 01-08-2000வரை எம்மிடம் ஒப்படைக்கப்பட்ட கலர் படச்சுருள்களுக்கான படங்கள் வந்துவிட்டன.
★ 21-08-2000 அன்று படச்சுருள்கள் கொழும்புக்கு அனுப்பிவைக்கப்படும்.
எமது வாடிக்கையாளர்களுக்கு விசேட கழிவுகள் வழங்கப்படும்.
சுனில் ஆட்ஸ்
272, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
(C/12529)

மக்ஷெல் ஹவுஸ்
மற்றும் ஒரு தொகுதிப் படங்கள் பிரதியாக்கம் செய்து வந்துவிட்டன. கலர்/கறுப்பு வெள்ளை படச்சுருள்கள் B/W Printing Paper, Chemicals என்பன பெற்றுக்கொள்ளலாம்.
20, யூபிலி பஜார்,
யாழ்ப்பாணம்.
(77378)

வீ.எம்.கே.ஜுவலர்ஸ்
சாவகச்சேரி
எமது வாடிக்கையாளர் தொடர்புகொள்ளவேண்டிய தற்போதைய முகவரி:
இல. 31, சிவன் வீதி,
திருநெல்வேலி.
(பரமேஸ்வரா சந்தி)
(77361)

தேவை
வாகனத்தில் சென்று வியாபாரம் செய்யக்கூடிய முன் அனுபவமுள்ள, மூன்று மொழிகளிலும் பேசக்கூடிய, 25 - 40 வயதுக்குட்பட்ட ஒரு வியாபாரி உடனடியாகத் தேவை.
தகுதியுள்ளோர் தொடர்புகொள்ளவும்.
லாலா சோப் தொழிற்சாலை,
அச்சுவேலி.
(C/12534)

லாலா சோப் ஸ்தாபனத்தாரின்
அன்பான வேண்டுகோள்
பாவனையாளர்களே:
எமது லாலா நீல சோப், சன்சயின் சோப் சவர்க்காரத்திற்கு உண்மையான மூலப் பொருள்கள் சேர்க்கப்பட்டு நல்ல தரமாகத் தயாரித்து விற்பனை செய்கின்றோம்.
அதன் தரத்தை அறிய வேண்டுமா? இன்றே கேட்டு வாங்கிப் பாவித்து அதன் அதிசயிக்கும் உண்மையைத் தெரிந்துகொள்ளுங்கள்.
லாலா நீல சோப், சன்சயின் சோப்
லாலா சோப் தொழிற்சாலை,
அச்சுவேலி.
எமது அச்சுவேலி ஏக விநியோகஸ்தர்:
கு.செல்வரெட்ணம் (ஆமி)
நிக்ஷன் பல்பொருள் வாணிபம்,
அச்சுவேலி.
(C/12563)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 17-08-2000இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.